



**மின்னல் வெளியீட்டகம் - ஒலுவில்**

Since 2001 Issue 9

January - March 2024

பிரதம ஆசிரியர்:

அஸீஸ் எம் பாயிஸ்

உதவி ஆசிரியர்:

அஷ்ஷெய்க் இஸட்.எம். நிலாம் (நளீமி)

பிரதம ஆலோசகர்:

பேராசிரியர் எஸ்.எம். அய்யூப்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

அலுவலகம்
இல: 59/2, பழைய தபாலக வீதி,
ஒலுவில் - 7 கிழக்கு மாகாணம்
32360
இலங்கை.

தொடர்பு:
0776619949 / 0764888267
0758238199 - வாட்சப்

ISSN 9 773030 717002

Issued By:
Miinal Publication
Oluvil



## Editorial

கீறல் இதழ் 09 ஆவதை அடைந்திருக்கும் இந்த நேரம் இதன் முக்கிய செயற்பாட்டாளர்களில் இரண்டாவது நபரை இழந்து நிற்கிறது.

கீறலின் முதலாவது இதழில் இருந்து உதவி ஆசிரியர்களாகப் பயணித்த கவிஞரும் நண்பருமான யாஸீன் ஸாலிஹ் அவர்களை முதலிலும், மிக அண்மையில் கவிஞரும் "கிண்ணஞ் சொட்டு" சிறுகதைத் தொகுதியினதும் "புலால்வாசம்" நாவலினதும் ஆசிரியருமான "சொல்லன்பன் நஸீறுத்தீனை" யும் கீறல் இழந்திருக்கின்றது.

கீறலின் பின்னால் இருந்த பெரும் உழைப்பிலும், கீறலின் உருவாக்கத்திலும் சொல்லன்பன் நஸீறுத்தீனின் பங்கு அளப்பெரியது. இலக்கியத்தில் இடைவிடாது இயங்கும் ஒரு செயற்பாட்டாளர் அவர். அவரது எழுத்துக்கள் சிந்தனைகள் எல்லாமே எப்போதும் சமூகத்தை அடிப்படையாக வைத்தே இருக்கும்.

அவரது எந்தவொரு சிறு படைப்பை எடுத்துப் பார்த்தாலும் சமூகத்தில் புரையோடிப் போயுள்ள ஏதோ ஒரு சிறு பிரச்சினையேனும் அதில் இழையோட விட்டிருப்பார்.

எழுத்துக்கும் வாழ்வுக்கும் இடைவெளிவிட்டு வாழும் இன்றைய எழுத்தாளர்களுக்குள், தன் சிந்தனையையே வாழ்வாக்கிக் கொண்ட ஒரு மிகப்பெரும் மனிதர்.

எழுத்துத் துறையைத் தாண்டி அவரை 05 குறும்படங்களிலும் மின்னல் வெளியீட்டகத்தின் ஊடாக நாம் அவரை நடிக்க வைத்திருந்தோம். அவர் ஒரு சிறந்த நடிகரும்கூட.

கீறலின் இந்த 09 ஆவது இதழை நாங்கள் அந்த மிகப்பெரும் கலைஞருக்கு சமர்ப்பணமாக்குகிறோம்.

அஸீஸ் எம் பாயிஸ்
பிரதம ஆசிரியர்




**கட்டுரைப் பிரதிகள்**


- பட்டாம் பூச்சி விளைவுக் கோட்டபாடும் நஸ்புள்ளாவின் பட்டாம்பூச்சியும்
  பேராசிரியர் எஸ்.எம்.அய்யூப் //04
- மண்ணாய் போவாய் - அஸ்மா தீன் //16
- நவீன நாஸ்த்திகத்தின் வரலாறும் அதன்எல்லைகளும்
  - அஷ்ஷெய்க் றிஸான் சுபைதீன் (நளீமி) //19
- சொல்லன்பன் நஸீறுத்தீனின் புலால் வாசம் - எம்.அப்துல் றஸாக் - விரிவுரையார் - மொழித்துறை தெ.கி.ப.க.//28
- ஜின்கள் - அஷ்ஷெய்க் இஷட்.எம்.நிலாம்(நளீமி) - //38
- ஹைகூவில் இயற்கை – Dr. ஜலீலா முஸம்மில் //43
- தற்கால இலக்கிய விமர்சனமும் மாறவேண்டிய படைப்பாளிகளும் - நவாஸ் சௌபி // 56


**சிறுகதைப் பிரதிகள்**


- ஊசி – அஸீஸ் எம் பாயிஸ் //09
- நியாயப்படும் அநீதிகள் - சம்மாந்துறை மஷூறா //50
- எல்மிராவின் கடிதங்கள் - பர்ஸானா எம்.பி - //63


**கவிதைப் பிரதிகள்**


- ஜீவிதம் முழுவதும் - மு.ஹ.முர்ஷிதா ஷிரீன் //07
- மொழிபெயர்ப்புக் கவிதை -நான் ஓர் ஆபிரிக்கன்
  - அஷ்ரஃப் சிஹாப்தீன் //08
- தப்பமுடிா வளைத்திற்குள் உலக உருண்டை
  - மேமன்கவி //14
- துளியேனும் மிச்சமின்றி - தம்பாளை ஜுவைரியா //15
- அழுகைதான் இங்கு - ஐ.எல்.ஏ.கபூர் //15
- நரைவிழும் இளமைகள் - ஏ.எல்.குறைஷியா //17
- இரவல் கொடு - கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபி//18
- இஸ்ரேலிய மிருகமே - வை.ஜெஸ்மின் //23
- வீரத்தின் துளிகள் - சித்தி ஜெஸீனா நிஸ்றீன்//23
- தனிமையொன்றும் கொடுமையில்லை
  - ஷிபானியா பௌசுல்//27
- கனவுகள் சூடி - மூதூர் சுஸானா முனாஸ்//31
- மர்ம ரகசியங்கள் - எஸ்.பாயிஸா அலி //32
- அந்தப் போத்தல்கள் கொலைசெய்யும்
  - ஒலுவில் ஏ.அக்கீலா//33
- நப்பாசை – ஜனதா லத்தீப் //35
- நிக்காம முன்னேறு - ஹுமைரா அல் அமீன்//41
- கண்ணே கலைமானே - அன்வர் சாதாத்//42
- தாகிக்கும் தருணம் - ஒலுவில் யூ.ஹிஸாம்//42
- வீழ்த்திடாதே – வாழத்திட வா - மக்கொணையூராள்//42
- நானாகவே நான் - பைஸானா பைறூஸ் //46
- வரட்டு கௌரவம் - நழீம் ஹனீபா – ஒலுவில்//46
- ஜமீலின் இரு கவிதைகள் //47
- விதவை – பேருவளை நிஸ்மியா நிஸாம் //48
- ஒரு கை பாடல் - வெளிமடை ரபீக் //49
- இதுதான் உலகம் - ஜெனீரா தௌபீக்-கிண்ணியா//49
- இயற்கைச் சிறைக்குள் - றஹீமா இன்ஷார் //58
- பலஸ்தீன் என் தேசமே - இஷட்.ஏ.ரகுமான் //58
- கானல் நீர் - நபிலா எம் பாரூக் - தெல்தோட்டை//48
- மழைவிழா – பாத்திமா சில்மியா -மாவனல்லை//62
- நட்பு - ஹிஸாம் எம்.இஸ்மத் //62
- உயிர் தொடும் வார்த்தை – பானு ஜிஃப்ரி//70
- நான் நானாகவே இருந்து கொள்கிறேன்
  - முப்லிஹா பிர்தௌஸ் //70
- தலையணை – றிஸலா ஹம்ஸா -மன்னார்//72
- விசித்திரமனிதர்கள் - அரபா மன்சூர்//72
- வாசிப்பால் சுவாசிப்போம் - பஸ்லா பர்ஸான் //72
- விழித்துக் கொள் - பாத்திமா ஹக்கீமா அமீனுத்தீன்//73


**நூலறிமுகம்**


- இஸ்லாமிய சட்டப் பின்னணியில் குடும்பப் பொருளாதாரப் பராமரிப்பு – அஷ்ஷெய்க் அஹமத் பிஸ்தாமி//24
- வானம் தொடும் வண்ணத்துப் பூச்சிகள்
  -பாவேந்தல் பாலமுனை பாறூக்//36
- ஒற்றைப் பனை - சித்தி மிஸ்ரியா அமீன்//53


**சஞ்சிகை அறிமுகம்**


- அவரி -08 அறிமுகம் //13
- கீறல் -08 முழுமையான பார்வை
  -எல்.எல் மன்சூர்//59


**அறிவியல் தகவல்**


- மன அழுத்தம் - இப்னு சினா//37
- கடலுக்கடியில் இருக்கும் உலகின் மிகப்பெரும் நீர்வீழ்ச்சி //55
- தோற்ற மாயை - இலங்கையில்//44
- பேலின்ட்ரோம் -இருவழிச் சொற்கள்// 57


**வரலாற்று தகவல்**


- பிரான்ஸில் உதுமானியப் பீரங்கி// 13
- கைகளில் குர்ஆன் கழுத்தில் தூக்குக் கயிறு //34


**எழுத்தாளர் குறிப்பு**


- கலாபூஷணம் சொல்லன்பன் நஸீறுத்தீன்//71




# பட்டாம் பூச்சி விளைவுக் *(Butterfly effect)* கோட்பாடும் நஸ்புள்ளாவின் பட்டாம் பூச்சியும்

**பேராசிரியர். எஸ். எம். அய்யூப்**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

அண்மையில் ஒரு புத்தக வெளியீட்டின் போது கிண்ணியாவைச் சேர்ந்த ஏ.நஸ்புள்ளாஹ் தனது 'யானைக்கு நிழலை வரையவில்லை' எனும் நூலை எனக்கு வழங்கினார். பல நூல்களின் சொந்தக்காரர் அவர். எனினும் இதுதான் நான் வாசித்த அவரது முதலாவது கவிதை நூல். இந்நூலிலுள்ள அவரது கவிதையொன்று எனக்குள் ஏற்படுத்திய அதிர்வுகளை பதிவு செய்யலாம் என நினைக்கின்றேன்.

ஒரு பூவை கொய்துவிடும் போது ஒரு நட்சத்திரம் அணைந்து போகின்றது என்று கவிக்கோ அப்துல் றகுமான் கூறுகின்றார். பூவும் நட்சத்திரமும் முறையே பூமியிலும் வானிலும் இருந்தாலும் இந்தப் பிரபஞ்சத்தின் அங்கங்களாக அவை இருப்பதனாலேயே பூவை கொய்துவிடும் போது நட்சத்திரம் அணைந்து விடுகின்றது என்பது அவரது விளக்கமாகும். இது கேயஸ் கோட்பாட்டின் மையமாகும். **உலகத்தில் நடக்கும் நிகழ்வுகள் எல்லாம் ஒன்றுடன் ஒன்று உள்ளார்ந்த தொடர்பு கொண்டவை** என்று கேயஸ் கோட்பாடு (Chaos theory) சொல்கின்றது.

**ஒரு சிறிய நிகழ்வு பெரிய மாற்றங்களைக் கொண்டுவரும்** என்று கேயஸ் கோட்பாட்டின் பட்டாம் பூச்சி விளைவு (Butterfly effect) தத்துவம் கூறுகின்றது. கணிதவியலாளரும் வானிலை நிபுணருமான எட்வர்ட் நார்டன் லோரன்ஸின்

(Edward Norton Lorenz) முக்கியமான விளக்கங்களில் பட்டாம் பூச்சி விளைவு குறித்த கோட்பாடும் ஒன்றாகும். ஒரு பட்டாம் பூச்சி தனது சிறகை அசைக்கும் போது உருவாகும் காற்று மெதுமெதுவாக விருத்தியாகி ஒரு புயலாக மாறும் சாத்தியங்களைக் கொண்டிருக்கின்றது என்பது பட்டாம் பூச்சி விளைவு கோட்பாட்டின் சாரமாகும். சிறிய நிகழ்வாக கருதப்படும் பல நிகழ்வுகள் பாரிய பல மாற்றங்களுக்கு காரணமாகிவிடுகின்றன என்பதுவே இதன் அர்த்தமாகும்.

இந்நூலிலுள்ள கவிஞர் ஏ.நஸ்புள்ளாவின் 'மகள்' எனும் கவிதை இத்தகைய பின்னணியைக் கொண்டிருக்கின்றது.

**மகள் மேசை மீது வைக்கப்பட்ட**

**தேநீர் ஆறும்வரை காத்திருக்கிறாள்**

**தேநீரை பருகப் போவது அவள்தான்**

**தேநீர் ஆறுவதாக இல்லை**

**வாசிப்பதற்காக புத்தகம் ஒன்றை தருமாறு என்னிடம் வேண்டினாள்**

**மகள் புத்தகத்தை வாசிக்கத் தொடங்கியதும்**

**அடுத்த நிமிஷங்கள் மிக முக்கியமான**

**ஒன்றாக மாறின.**

**ஒரு பட்டாம் பூச்சி**

**தேநீர் குவளையில் அமர்ந்து**

**தன் ரெக்கைகளை அசைக்கத் தொடங்கியது**



**மகள் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு**

**தேநீர் அருகே நெருங்கினாள்**

**பட்டாம் பூச்சி மறைந்துவிட்டது**

**அவள் புத்தகத்தை திறந்து**

**மறுபடியும் வாசிக்கத் தொடங்கினாள்**

**அந்தப் பட்டாம் பூச்சி**

**தேநீர் குவளையில் அமர்ந்து**

**தன் ரெக்கைகளை அசைக்கத் தொடங்கியது.**

தேநீர் சூடாக இருப்பதற்கும், புத்தகத்தை கையிலெடுப்பதற்கும், பட்டாம் பூச்சி சிறகடித்துப் பறப்பதற்கும் இடையேயான உள்ளார்ந்த தொடர்புகள் என்ன?

சில சூடுகள் தணிக்கப்பட வேண்டியவை. சில சூடுகள் ஆறாமல் காக்கப்பட வேண்டியவை. தணிக்கப்பட வேண்டிய சூடுகளை கட்டுப்படுத்துவதற்கு வழிகள் பல உள்ளன.

பருகும் தேநீர்க் கோப்பையின் சூடு தொடங்கி எரிமலைக் குழம்பின் சூடுவரை உலகில் உள்ள சூடுகளைத் தணிப்பதற்கு சிறந்த வழி புத்தகத்தை கையிலெடுப்பதுதான் அதாவது அறிவியல் அடிப்படையில் சிந்திப்பதுதான். இந்த கவிதையில் உள்ள மறை பொருளும் இதுதான். அறிவியல் அடிப்படையில் சிந்திப்பது பிரச்சினைகளின் மூலவேர்களை கண்டறிவதற்கான சிறந்த உத்தியாக புத்திஜீவிகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது. அதனால்தான் புத்தகத்தை கையில் எடுக்கும்போது தேநீரின் சூட்டை தணிப்பதற்கான வழி பட்டாம்பூச்சி மூலம் பிறக்கின்றது.

பட்டாம்புச்சிகள் சிறகடிக்கும்போது உருவாகும் காற்று மெதுமெதுவாக விருத்தியடைந்து பெரும் புயலாக மாறிவிடலாம் என்று பட்டாம்பூச்சி விளைவுக் கோட்பாடு கூறுகின்றது. புத்தகத்தை கையிலெடுக்கும்போது தோன்றும் பட்டாம்பூச்சியும் அதன் றெக்கைகள் வீசும் காற்றும் கொதிக்கும் சூடுகளை தணிக்க உதவுகின்றது என நஸ்புள்ளாவின் கவிதை கூறுகின்றது.

மற்றுமொரு வகையில் பார்க்கும் போது புத்தகத்துக்கும் பட்டாம் பூச்சிக்கும் தொடர்பிருக்கின்றது.

பட்டாம் பூச்சி சிறகு விரிக்கும் போதும் புத்தகத்தை விரித்து வைக்கும் போதும் தோற்றம் ஒன்றாகவே தென்படும்.

புத்தகம், பறக்காத பட்டாம் பூச்சி. பட்டாம் பூச்சி, பறக்கும் புத்தகம்.

பூக்களிலிருந்து தேனை பட்டாம் பூச்சி உறிஞ்சிக் குடிக்கின்றது. புத்தகமும் பல பூக்களிலிருந்து உறுஞ்சப்பட்ட தேனின் மொத்தக் கலவைதான்.

புத்தகத்திற்கும் பட்டாம் பூச்சிக்கும் பெரிய இரு சிறகுதான் உண்டு.

கூட்டுப் புழுவிலிருந்து பட்டாம் பூச்சி வெளிவருகின்றது. நூலாசிரியனும் கூட்டுப்புழுவாய் தவமிருந்துதான் புத்தகத்தைக் கொண்டுவருகின்றான்.

பட்டாம் பூச்சியை கொல்பவனும் நூலைக் கிழிப்பவனும் இந்தப் பூமியில் உள்ளனர். அதேபோல் பட்டாம் பூச்சியைக் காப்பவனும் நூலை பாதுபாப்பவனும் இந்தத் தரணியில் உள்ளனர்.

தொடுகின்றவர்களின் கைகளில் பட்டாம் பூச்சியின் நிறம் ஒட்டிக்கொள்கின்றது. வாசிப்பவனின் மூளையிலும் இதயத்திலும் புத்தகத்தின் செய்திகள் அப்பிக் கொள்கின்றன.

பட்டாம் பூச்சியின் வண்ணங்கள் இதயத்தை இதமாக்குகின்றன. புத்தகத்தின் தகவல்கள் மூளையைப் பதமாக்குகின்றன.

பட்டாம் பூச்சிகள் நிறைவது காட்டுக்கு அழகு. புத்தகங்கள் நிறைவது வீட்டுக்கு அழகு.

பட்டாம் பூச்சி கிழே இருந்து மேலே பறக்கின்றது. புத்தகமும் கீழே இருக்கும் வாசகனை உயரத்திற்கு அழைத்துக்கொண்டு செல்கின்றது.

ஒரு வித்தியாசம்

பட்டாம் பூச்சிகள் பற்றி புத்தகங்கள் பேசும். புத்தகங்களைப் பற்றி பட்டாம்கள் பூச்சி பேசாது.



## ஒருத்தர் ஒரு ஞானியிடம் கேட்டார் இப்படி,

ஆறு ஆண்கள் ஒரு இடத்தில் பேசிக்கொண்டிருக்கும் போது வராத பெரும் கலகலப்புச் சப்தம் ஆறு பெண்கள் பேசும்போது மட்டும் எப்படி வருகிறது ? என்று.

அதற்கு அந்த ஞானி சொன்னார்,

ஆண்களில் ஒருவர் பேசும்போது மற்றைய ஐவரும் அதனை உற்று அவதானித்து ஒவ்வொருவராகப் பேசுவார்கள்,

ஆனால் பெண்கள் ஆறுபேர் இருந்தால் அவர்கள் இவ்விருவராக இனைந்து வெவ்வேறு தலைப்புகளில் பேசுவார்கள். அதனால் மூன்று குழுக்கள் பேசும் சத்தம் ஒரே இடத்தில் பிறக்கும் என்றார் ஞானி.

# ஜீவிதம் முழுதும்

மு.ஹ. முர்ஷிதா ஷிரீன் –சம்மாந்துறை



அவர் அவருக்கான
இயலுமையில் போராடும்
போராட்டக் களமிது

உறவுகள் உடன் ஒரு வகையாக
உணர்வுகளுடன் ஒரு வகையாக
எதிர்பார்ப்புகளை நிறைத்துக் கொண்டு

வளமாக வாழ்ந்தாலும்
வன்மம்தான்
வழி கெட்டாலும்
பழி சொல்தான்

பாவப்படுதல் கூட
பாசாங்காய் மட்டும்தான்

பாழ்பட்ட இதயத்தின்
பொய்யான ஓலங்கள்
நொடிக்கொரு முறையான
நச்சரிப்புடன் நகரும்

அறையப்பட்ட கருவடுக்கள்
ஈரம் ஆகின்றன
இன்னும் சில சிராய் கீறல்களில்

ஏளனப் பேச்சுகளில்
பெரு வெடிப்புகளாய்
மக்மா குழம்பாக பொங்கி எழுகிறது

இந்த வஞ்சக
நெஞ்சங்களுடன் சீவிக்க இயலாமல்
சோர்ந்து போக நினைக்கையில்
முயற்சித்து முன்னேற
சபதமிடுகிறது மனம்

ஜீவிதம் முழுதும்
இந்தப் போராட்டங்களே
வாழ்க்கையாகி
இறுதியில் அதுவே பழகியும் விடுகிறது.




## இலங்கையில் முதன் முதலாக கண்டு பிடிக்கப்பட்டுள்ள தோற்ற மாயை உள்ள வீதி

நாஉல – எலகர பிரதான வீதியில் மொரகஹகந்த நீர்த்தேக்கத்திற்கு அருகில் உள்ள பகுதியில் இந்த வீதியின் பகுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ராணுவ கேணலான ரத்தனபிரிய பந்து பேராசிரியர் அத்துல சேனாரத்னவுக்கு இது குறித்து வீடியோ ஒன்றினை எடுத்து தெரியப்படுத்தியிருந்தார். இதனைத் தொடர்ந்து அந்த இடத்தைப் பார்வையிட வந்த பேராசிரியர் அத்துல சேனாரத்ன இவ்வாறான தோற்ற மாயைகள் கொண்ட பகுதிகள் உலகின் பல்வேறு நாடுகளிலும் காணப்படும் அதே வேளை இலங்கையில் இவ்வாறான ஒரு இடம் அடையாளப்படுத்தப் பட்டது இதுவே முதல் தடைவ என்று குறிப்பிட்டார்.

இந்த இடமானது மேடு போன்ற ஒரு பகுதியாக தென்பட்ட போதிலும் அது உண்மையில் ஒரு பள்ளமான பகுதி என பேராசியர் குறிப்பிட்டார். இந்த மேடு போன்ற பகுதியில் ஒரு தண்ணீர் போத்தலை வைக்கும் போது அது பள்ளத்தில் போவதைப் போல அம்மேட்டில் மேல் நோக்கி உருண்டு செல்வதை அவதானிக்கலாம்.



# நான் ஓர் ஆபிரிக்கன்



**வைன் விஸர்**

**தமிழில் : அஷ்ரஃப் சிஹாப்தீன்**

நான் ஓர் ஆபிரிக்கன்
நான் அங்கே பிறந்தேன்  என்பதற்காகவல்ல
ஆபிரிக்காவோடு சேர்ந்து
எனது இதயம் துடிக்கிறது என்பதற்காக

நான் ஓர் ஆபிரிக்கன்
எனது தோல் கருப்பாக இருப்பதற்காகவல்ல
எனது சிந்தை ஆபிரிக்காவோடு
தொடர்புற்றிருக்கிறது என்பதற்காக

நான் ஓர் ஆபிரிக்கன்
நாம் அம்மண்ணில் வாழ்கிறேன்
என்பதற்காகவல்ல
எனது ஆத்மா ஆபிரிக்காவின்
வீட்டில் இருக்கிறது என்பதற்காக

ஆபிரிக்கா தனது பிள்ளைகளுக்காகத்
தேம்பியழுகையில்
எனது கன்னங்களில்
கண்ணீர் உருண்டு விழுகிறது

ஆபிரிக்கா தனது மூத்த பிரஜைகள் குறித்து
பெருமைப்படுகிறது எனில்
மரியாதை நிமித்தம்
எனது தலை குனிகிறது

ஆபிரிக்கா தனது பாதிக்கப்பட்டவர்களுக்காக
அஞ்சலி செலுத்துகையில்
எனது கரங்கள்
பிரார்த்தனைக்காக உயர்த்தப்படுகின்றன

ஆபிரிக்கா தனது வெற்றிகளைக்
கொண்டாடுகிறதெனில்
எனது கால்கள் நாட்டியமிட
உயிர்த்தெழுந்து விடுகின்றன

# ஊசி

(சிறுகதை)

அஸீஸ் எம். பாயிஸ்



**இ**த்தனை நேரமும் இடி இடித்து ஓங்கி உரத்த பெரும் காற்றோடு கொட்டிய பெருமழை ஓய்ந்து விட்டிருந்தது. அருகில் நின்றிருந்த ஜேம் மரத்திலிருந்து இலைகள் சொட்டுச் சொட்டாய் வடித்த துளிகள் கீழே தேங்கி நின்ற மழைநீரில் விழுந்து தெறித்துக் கொண்டிருந்தன.

காழி நீதி மன்றத்தின் முன்னே போடப்பட்டிருந்த பலகை வாங்கில் வரிசையாக அமர்ந்திருந்த ஆண்களுள் கடைசியாக ஹிஸாம் அமர்ந்திருந்தான். தேங்கி நின்ற நீரில் விழுந்து தெறிக்கும் நீர்த்துளிகளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

விழுந்து தெறிக்கின்ற நீர்த்துளிகள் போல மனசிலும் பல நினைவுகள் பாரமாக விழுந்து எங்கெங்கோ தெறித்துக் கொண்டிருந்தன.

மூன்றாவது விசாரணைக் கடித அழைப்பின் பேரில் இன்று காழி நீதிமன்றத்துக்கு வந்திருந்தான் ஹிஸாம். தனது மனைவி இஷாரா பஸ்கு செய்ய வைத்திருந்த வழக்கின் மூன்றாவது நாள் இன்று. மூன்று விசாரணைகளிலும் ஹிஸாம் பதிலேதும் சொல்லாமல் மௌனமாகவே இருந்ததால் இஷாராவின் பக்கமே தீர்ப்பு வழங்கப்பட்டு இன்று பஸ்கு நிறைவேறியது.

மூன்று வயதேயான மகள் ஸம்ஹாவிற்கு தவணைப்பணம் கட்டவேண்டுமென்ற தீர்ப்புக்கு மட்டும் அவன் அந்த வழக்கில் தலையசைத்திருந்தான். குழந்தை தன்னை பார்த்துவிடக் கூடாதென்று இஷாராவும் அவளது தாயுமாக சேர்ந்து அதை மறைத்து கொண்டு போய் ஆட்டோவில் ஏற்றி பறந்து போனார்கள். போகும் போது கடைசியாக ஹிஸாமை பார்த்து இழக்காரமாய் ஒரு சிரிப்புச் சிரித்து விட்டும், வீதியில் காறி உமிழ்ந்துவிட்டும் போனாள் இஷாரா.

கன்னத்தில் வெகுநேரமாய் கைகளைக் ஊன்றி விரல் ஒன்றை நெடுநேரமாய் பல்லால் கடித்துக் கொண்டு ஆழமான யோசனையில் இருந்தவனை தோழில் யாரோ தட்டியதும் சுயநினைவுக்கு வந்தான்.

“இஸாம் என்ன மச்சான் இவடத்த… ?” பத்தாம் வகுப்புவரை படித்து விட்டு வெளிநாடு சென்ற பள்ளித் தோழன் அனீஸ். அவனை அந்த இடத்தில் சற்றும் எதிர்பாராத ஹிஸாம் கொஞ்சம் அவமானத்தால் கூனிக் குறுகிப்போனான். காழி நீதிமன்றமெல்லாம் வாழ்க்கையிலும் யாரும் கால் வைத்துவிடக் கூடாதென்றும் அங்கு படும் அவமானங்களும் சின்ன வயதில் தன் தாய் தந்தையர் சண்டையிட்டு பிரிவதற்கு காழி நீதிமன்றம் போன போது ஹிஸாம் அனுபவித்த வேதனைகளும் பாடங்களை அவனுக்கு கற்றுக் கொடுத்திருந்தன. ஆனபோதும் இன்று மூன்றாவது முறையாக அவனே வந்ததும் தனது பள்ளித்தோழனைக் கண்டதும் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தடுமாறித்தான் போனான் ஹிஸாம்.

அனீஸே தொடர்ந்தான் “என்னடா முழுசுற… நீயும் தலாக்கா…? எல்லார்ர வாழ்க்கையும் இப்ப இப்படித்தான் மச்சான் சீரழியுது”

சொல்லிக் கொண்டே ''இரு மச்சான் வழக்கு கூப்பிர்ராங்க வாறன்'' என்றவனை பார்த்து கஸ்டப்பட்டு புன்னகையொன்றை பதிலாக உதிர்த்து அனுப்பிவிட்டு மெல்ல அவ்விடத்தை விட்டு எழுந்து மோட்டார் சைக்கிளை உயிர்ப்பித்துக் கொண்டு வீடு நோக்கி புறப்பட்டான்.

மோட்டார் சைக்கிள் முன்னோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. ஹிஸாமின் நினைவுகளோ சிலவருடங்கள் பின்னோக்கி நீண்டு கொண்டிருந்தது.

ஹிஸாமுக்கு இஷாரா தாய் மாமாவின் மகள். சின்ன வயதிலிருந்தே இருவரும் ஒருவரையொருவர் உயிராக நேசித்திருந்தார்கள். சேர்த்து வைக்க இஷாரவின் குடும்பம் விரும்பினாலும் ஹிஸாமின் தாயோ

''குடும்பத்துக்க கலியாணம் வேணா மகன் வெளியில எங்கயும் பாப்பம்..அதோட இஷாராக்கு ஊடும் இல்ல வளவும் இல்ல''

என்று எவ்வளவு சொன்ன போதும் தாயின் தடைகளில் ஹிஸாமால் இஷாராவை விட்டுக் கொடுக்க முடியாமல்

''இல்லம்மா சின்ன வயசில இருந்தே அவள விரும்புறன், ஒங்களுக்கும் தெரியும்தானே, இத்தின வரிசமா பழகிட்டு எப்படிம்மா உர்ர...? ஊடு ஒரு பெரச்சின இல்லம்மா அத நான் கட்டிக்குவன்''

என்று ஆயிரம் தடவைகளுக்கு மேல் உம்மாவிடம் இதே கதைகளைத் திரும்பத் திரும்பப் பேசி சம்மதம் வாங்கியே ஹிஸாம் இஷாராவை திருமணம் செய்திருந்தான்.

ஹிஸாமால் மீளமுடியாமல் இருந்த பேர் அதிர்ச்சி என்னவென்றால், இத்தனை வருடமாக தான் இஷாராவில் வைத்திருந்த காதல் என்னானது என்பதுதான். பேசித் தீர்க்க வேண்டிய ஒரு விடயத்துக்காக இப்படி தூக்கியெறிந்து விட்டுப் போய்விட்டாளே... என் நேசமெல்லாம் பொய்யா...? இத்தனை வருடகாலமும் தான் கொட்டித் தீர்த்த கோடிக் காதல் ஒரு நொடியில் எப்படி செத்துப் போனது...? அப்படியானால் இஷாரா என்னை நேசிக்கவே இல்லையா...?

செயற்கை துறைமுகம் அமைக்கவென்று கடலுக்கு அணைபோட கடலுக்குள் போட்ட பெரும் பெரும் பாறைகளைப் போல் ஒவ்வொரு கேள்வியும் பெரும் பெரும் கனத்தோடு ஹிஸாமின் நெஞ்சக் கடலில் விழுந்து விழுந்து அதிர்வலைகளை கரைக்கு தள்ளிக் கொண்டிருந்ததை காற்றின் வேகத்தில் கண்களிலிருந்து வழிந்த நீர் சிதறிப் பறக்கையில் சொல்லிக் கொண்டிருந்து.

அன்று காரியாலய வேலை முடிந்து அப்போதுதான் ஹிஸாம் வீடு வந்து சேர்ந்திருந்தான். கேற்றின் அருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு ஒரு தோழில் காரியாலய பை தொங்கிக் கொண்டிருக்க காதில் கையடக்க தொலைபேசியை பொருத்தி மறுபக்க தோழை உயர்த்தி காதுக்கு அணை கொடுத்துக் கொண்டு கேற்றை சாவி போட்டு திறந்து கொண்டிருந்தான் மறுமுனையில் இஷாராவுடன் பேசிக் கொண்டு.

''ராவைக்கு புள்ளையையும் வச்சிக்கு, நிண்டு போகட்டாம் என்கா உம்மா. அபியாவும் வாப்பாவோட ஒட்டிக்கே இரிக்கா வரமாட்டேங்குறா... குளிச்சிட்டு நீயும் வெளிகிட்டு வாவன் ராவைக்கு இங்க நிண்டுட்டு வருவம்''

''இல்ல இஷா... எனக்கு சரியான தலையிடியா இரிக்கு அதோட ஒப்பீஸ் வேலையும் ஒன்றிரெண்டு அவசரமா முடிக்க கெடக்கு நான் ஊட்ட இரிந்தாதான் முடிக்கலாம்''

''என்னடா நீ இப்புடி செல்ற... அப்ப நான் என்ன செய்ய ஊட்ட வரயா..?''

''இல்ல இல்ல நீ நிண்டு வா.. எனக்கு பெரச்சின இல்ல... அபியாவும் உம்மா வாப்பாக்கிட்ட நிக்கட்டுமே.. நான் நாளைக்கு வந்து கூட்டிக்கு வாறன்''

''சரிடா அப்ப கடையில பாண் ஏதாவது வாங்கி சாப்புடு பிரிஜ்ஜில ஜேமும் இரிக்கி சம்பலும் இரிக்கி விரும்பினத சாப்பிடு'' என்று விட்டு அழைப்பை துண்டித்தாள் இஷாரா.

வருடக் கடைசி என்பதால் மறுநாளும் காரியாலய வேலை முடிய தாமதமானதால் மறுநாளும் இஷாராவை அழைத்து வர முடியாமல் போனதால் மூன்றாவது நாளே ஹிஸாம் அவர்களை சென்று வீட்டுக்கு கூட்டி வந்தான்.

அடுத்தநாள் எப்போதும் போல ஹிஸாம் மனைவி கட்டிக் கொடுத்த பகலுணவை எடுத்துக் கொண்டு மகளுக்கும் மனைவிக்கும் ஆளுக்கொரு முத்தம் கொடுத்து விட்டு வேலைக்குப் புறப்பட்டான்.

பரபரப்பான காரியாலய வேலைகளுக்குள் நேரம் போனதே விளங்கவில்லை. பகல் இரண்டு மணியான போதுதான் சாப்பிடவில்லை என்ற நினைவு வந்தது ஹிஸாமுக்கு.

சாப்பாட்டு பார்ஸலை விரித்து ஒரு வாய் அள்ளி வாயில் வைத்த போது இஷாராவின் தொலைபேசி அழைப்பு வந்து. புன்னகையோடு எடுத்து இடது கையால் காதில் பொருத்திக் கொண்டவன்

“சொல்லு இஷா.. சாப்பிட்டியா… அபியா சாப்பிட்டாவா … நான் கோல் பண்ணுவம் எண்டுதான் இரிந்தன் இண்டைக்கு கடும் பிஸி. இன்னா இப்பதான் சாப்புர்ரன்”

ஹிஸாம் பேசிய எந்தப் பேச்சுக்கும் மறுமுனையில் இருந்து பதில் வரவில்லை.

குழம்பிய ஹிஸாம்… “இஷா…எங்க லைன்ல இரிக்கியா…” ஒரு சிறு மௌனத்துக்குப் பிறகு மறுமுனையில் பதில் வந்தது.

“நான் இல்லாத நாள்ல ஊட்டுல எவள கூட்டி வெச்சிக்கி படுத்த…?”

ஈட்டி எறியும் வீரன் ஒருவன் வீசிய ஈட்டி அதிவேகமாய் சீறிவந்து நெஞ்சில் பாய்ந்தது போல் பேச்சு மூச்சற்றுப் போனான் ஹிஸாம். அதன் பின் படபடவென்று என்னவெல்லாமோ பேசினாள். இடைநடுவில் ஹிஸாம் தனது பக்க நியாயத்தை சொல்ல எந்த அவகாசமும் அவள் வழங்காமலே அழைப்பைத் துண்டித்தாள் இஷாரா.

“எவள கூட்டி வெச்சிக்கு படுத்த” என்ற வார்த்தைகளே ஆடையை தைக்கும் தையல் மெசினின் ஊசிபோல ஒரே இடத்தில் நின்று குத்திக் கொண்டிருந்தது அவனை.

காரியாலயம் முடிந்து ஹிஸாம் வீடு செல்வதற்குள் இஷாரா பெட்டி படுக்கையோடு மீண்டும் தாய்வீட்டுக்கு புறப்பட்டிருந்தாள். மறுநாளே காழி நீதிமன்றம் சென்று பஸ்கு செய்வதற்கான முறையீட்டை செய்துவிட்டு வந்ததற்கான அழைப்புக் கடிதம் வேகமாக வீடு வந்து சேர்ந்தது.

நடந்த எதையும் ஹிஸாமால் சிந்திக்க முடியவில்லை. ஒரு அடர்வனமாய் ஒரு பெரும் சமுத்திரமாய், உலகின் உயரமான மலையாய் கடலின் ஆழமான இடமாய் இப்படி எதற்குமே ஒப்பிட முடியாத அண்டத்தின் விசாலம் கொண்ட காதலை இஷாரா மீது வைத்திருந்தாக எண்ணிக் கொண்டிருந்தவனின் காதலுக்கு என்னாச்சு என்ற கேள்வி மட்டுமே அவனுள் தைத்த அந்த வார்த்தை மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

நினைவுகளை இழுத்துக் கொண்டு வந்தவன், வந்ததே தெரியாமல் வீடு வந்து சேர்ந்தான். கதவைத் திறந்து கொண்டு சென்று முன் ஹோலின் கிடந்த சாய்வு நாற்காலியில் விட்டத்தை வெறித்தவனாய் சாய்ந்து படுத்தான்.

உம்மாவோடு வீடு சென்று சேரந்த இஷாரா தன்னை ஏமாற்றிய துரோகிக்கு சிரச்சேத தண்டனை நிறைவேற்றிய திருப்தியில் முன் ஹோலில் அமர்ந்து டீ.வி பார்த்துக் கொண்டிருந்தாள். மகள் இப்போது நிம்மதியாகவும் சந்தோசமாகவும் இருப்பதாக அவளது தாய் எண்ணிக் கொண்டிருந்த போதும் அவள் உள்ளுக்குள் ஹிஸாம் தனக்கிழைத்த துரோகத்தை நினைத்து எரிந்து கொண்டிருந்தாள்.

அவளது தந்தை வெள்ளத்தில் இடிந்து விழுந்த மதிலை திருத்தும் பணியில் ஈடுபடும் மேசன்மாருடன் வெளியில் நின்று கொண்டிருந்தார்.

“இஷாரா … இஷாரா …” வெளியில் நின்றவாறே வாசலுக்கு வந்து மகளை அழைத்தார்.

“என்ன வாப்பா…”

“மேசன்மாருக்கு ஜுஸ் என்னயும் ஊத்திக்காங்க மகள்”

“ஆஹ்.. சரிவாப்பா”

ஜுஸை ஊற்றிக்கொண்டு வாசலுக்கு சென்ற போதுதான் கவனித்தாள் அங்கே வேலைக்கு நின்ற ஆட்களில் ஹிஸாமின் பக்கத்து வீட்டு பையனும் நின்றிருந்தான்.

“தம்பி நீ என்னடா இங்க..”

“நான் இங்கான் ராத்தா 03 மாசமா வேல செய்யிறன்.. இது ஒங்கட உம்மாட ஊடா…?”

“ஓந்தம்பி...இதான் வாப்பா” இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போது அவன் சொன்னான்,

“ராத்தா அண்டைக்கு எண்ட போன் சிம் மாத்துப் படல. கொஞ்சம் கழராம சிக்கலாயிட்டு, பொறவு ஒங்கட ஊட்ட போய் மச்சானுக்கிட்டதான் அத கழட்டி எடுத்த.

அத கழட்டுறதுக்கு எங்கு ராத்தாட அபாயா ஊசியைத்தான் நான் எடுத்துக்கு வந்த. போகக்க அத மறந்து அங்கதான் உட்டுப்போட்டு வந்திட்டன்.

அது அவட மச்சான் அவவ லவ் பண்ணக்க குடுத்த மொதல் கிப்டாம், எடுத்து தரட்டாம் என்று ஒரே ஏசராள். அது ஊட்ட கெடந்தா எடுத்து வைங்க ராத்தா நான் பொறவு வந்து வாங்கி எடுக்கன்”

அவன் சொல்லி முடிக்க மின்னல் தாக்கியவள் போல இஷாரா நெஞ்சு கருகிப் போனாள். இந்த ஒரு ஊசியை வைத்துத்தானே நான் ஹிஸாமை சந்தேகப்பட்டேன். இரவில் எவளையோ கூட்டிக் கொண்டு வந்து வைத்து உல்லாசமாய் இருந்திருக்கிறான். அவள் போகும் போது பர்தாவில் குத்தியிருந்த ஊசியில் ஒன்றை தவறவிட்டு எனக்கு தடயம் விட்டுச் சென்றிருக்கிறாள் என்று. ஒரு வார்த்தை கூட ஹிஸாமிடம் நான் விசாரிக்கவில்லையே. அவனை பேச நான் அனுமதிக்கவே இல்லை. அவனை பஸ்கு செய்து உயிரோடு சாகடித்து விட்டேனே. எத்தனை பெரிய முட்டாள் நான்.

கண்கள் சொருகி தலை சுத்தி மயக்கமாகி கீழே விழுந்தாள் இஷாரா.

ஒரு அரை மணிநேரம் கழிந்து இஷாராவுக்கு நினைவு திரும்பியது. உம்மா வாப்பாவிடம் நடந்ததை சொல்ல தலையில் அடித்துக் கொண்டு இருவரும் இடிந்து உட்கார்ந்தார்கள். மகளின் பேச்சை மட்டும் நம்பி அவளது வாழ்க்கையை நாமே சீரழித்து விட்டோமே என்ற குற்ற உணர்வில் துவண்டு போனார்கள்.

அவசர அவசரமாக உம்மா வாப்பாவையும் மகள் அபியாவையும் கையில் தூக்கிக் கொண்டு ஆட்டோ ஒன்றில் ஏறி வீடு நோக்கி புறப்பட்டாள் இஷாரா. மூன்று ஊர் கடந்து செல்ல அரை மணி நேரம் தேவைப்பட்டது ஆட்டோவுக்கு. வாசலை அடைந்ததும் பத்திப் பதறி வீட்டுக்குள் ஓடினாள் இஷாரா.

அப்போதும் சாய்வு நாற்காலியில் விட்டத்தை வெறித்து பார்த்தபடி ஹிஸாம் படுத்திருந்தான். அவன் முன்னே நின்று கதறி அழுது மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தாள் இஷாரா. வார்த்தைகளை உச்சரிக்க முடியாமல் விம்மி விம்மி அழுதாள்.

ஹிஸாம் எதுவும் பேசவில்லை. முன்னால் நிற்பது யாரென்றும் கூட திரும்பிப் பார்க்கவில்லை. அழுது அழுது முடியாமல் அவனின் காலடியில் விழுந்து கால்களை பற்றிப் பிடித்து “என்ன மன்னிச்சுக்கடா நான் தப்பு செஞ்சிட்டண்டா” என்று கதறிய போதுதான் அவள் உணர்ந்தாள் அவனது கால்கள் விறைத்துக் குளிர்ந்து போயிருப்பதை. அதிர்ச்சியில் தலையை தூக்கி அப்போதுதான் அவனது முகத்தை சரியாப் பார்தாள்… அவன் உயிர் பிரிந்து வெகு நாளிகை ஆகியிருந்தது.

இஷாராவின் அலறலில் முன் வராண்டாவில் கத்திக் கொண்டிருந்த ஊரான் குருவி திடுக்கிட்டு திசையறியாது பறந்தது. தீரவிசாரிக்காத ஒரு பழிச் சொல் ஹிஸாமின் நெஞ்சில் பாறாங்கல்லாய் அழுத்தி அவன் உயிரைக் கொன்றிருந்தது.

(முற்றும்)

# சஞ்சிகை அறிமுகம்




**சஞ்சிகை : அவரி**
**வகை : இலக்கிய இதழ்**
**நிர்வாக ஆசிரியர் : சம்மாந்துறை மஷ்ூறா**
**இதழாசிரியர் : பர்ஸானா எம்.பி**
**பக்கங்கள் : 60 – விலை : 350/-**
**வெளியீடு : சிறிலங்கா பென்கிளப் (0765363434)**

நாடாளாவிய ரீதியில் உள்ள தமது அமைப்பின் உறுப்பினர்களின் படைப்புக்களுக்கு களம் கொடுக்கும் நோக்கில் பென்கிளப் உறுப்பினர்களின் படைப்புக்களை மாத்திரம் கொண்டு வெளிவரும் ஒரு இதழ் இதுவாகும். இரண்டாவது ஆண்டு மலரில் காலடியெடுத்து வைத்திருக்கும் அவரி சஞ்சிகையானது கடந்து வந்த இதழ்களைவிட இம்முறை மிக நேர்த்தியாகவும், கவர்ச்சியான வடிவமைப்பிலும், தேர்வு செய்யப்பட்ட தரமான படைப்புக்களுடனும் சிறப்பாக வெளிவந்திருக்கிறது.

இடைவிடாது தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருப்பது "அவரியின்" வெற்றி என்றே கூறலாம். தொடர்ந்தும் தொடரான இயக்கத்துடன் அவரி வெற்றிநடை போட கீறல் சஞ்சிகைக் குழு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

# பிரான்ஸ், நைஸ் நகர வீதியில் ஒரு உதுமானியரின் பிரங்கிக் குண்டு




இப்படத்திலுள்ள பீரங்கிக்குண்டு உதுமானியருடையதாகும்.

இது பிரான்சிய மன்னன் பிரான்கொய்ஸ் ஐ – François – அவர்கள் உதுமானிய பேரரசர் சுல்தான் சுலைமானிடம் ஸ்பெயினின் மன்னரும் புனித ரோமானியப் பேரரசருமான சார்லாகன் – Charlacan – இன் பிடியில் இருந்து பிரான்ஸ் இன் நைஸ் நகரை மீட்டெடுப்பதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ராணுவ உதவியின் நினைவாக வைக்கப்பட்டதாகும்.

பிரான்ஸ் மன்னனின் வேண்டுகோளுக்கமைவாக உதுமானிய சுல்தான் சுலைமான், கடற்படைத்தளபதி கைருத்தீன் பாபரோசா – Khairuddin Barbarossa – தலைமையில் இஸ்தான்பூல் நகரிலிருந்து ஒரு படையை முஹர்ரம் மாதம் ஹிஜ்ரி 950 / May 1543 இல் கடல்மார்க்கமாக பிரான்சிற்கு அனுப்பினார். அக்கப்பல் பிரான்ஸின் தென்கரையை அடைந்தது.ஹிஜ்ரி 950 இன் இளவேனிற்காலத்தில் ஜுலை 1543 இல் பாபரோசாவின் படை நைஸ் நகரை கடுமையான தாக்குதலின் விளைவாக கையகப்படுத்தியது. அங்கிருந்த ஆக்கிரமிப்பில் ஈடுபட்ட போப்பாண்டவர், ஸ்பானிய மற்றும் ஆங்கிலப் படைகள் வெளியேற்றப்பட்டனர்.

உதுமானிய படைகள் பிரான்ஸ் நாட்டை வெளி ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றிய கி.பி. 1543 ஆம் ஆண்டை நினைவுகூரும் விதமாக உதுமானியர்களின் பிரங்கிக்குண்டொன்று நினைவுச்சின்னமாக்கினர். இன்றும் இக்குண்டு பிரெஞ்சு நகரமான நைஸின் தெருவை அலங்கரிக்கிறது.

**விரிவுரையாளர் மர்ஹூம் அக்பர் ரபீக் அவர்களின் முகநூல் பக்கத்திலிருந்து.**

# தப்ப முடியா வளையத்திற்குள் உலக உருண்டை

**மேமன்கவி**



கைது செய்யப்பட்ட கண்கள்

"வாங்கி -விற்று"
பழகிப் போன கரங்கள்

"தின்று தின்று" வீங்கிப் போன
நாவுக்கள்.

மரணித்த பின்னும்
புதைக்கவிடாத மண்

நடமாட அனுமதிக்காத
நாடு எனும் அதிகாரம்

யார் சொன்னது
அடிமைத்தனம்
இல்லாமல் போனது என்று
பின் நவீன யுகத்தில்
நவீன அடிமைகளாய்
தம் இலக்குகளை மறந்து
இலக்கங்களாகி மாறிய
மனிதர்கள் நாம்.

விடுதலை என்பது
இனி என்றுமே
சாத்தியமிலாத சத்தியம்

போதை
இப்பொழுது ஏறுவதில்லை
ஏற்றப்படுகிறது.
எல்லாவற்றிலும்
இறங்காத வகையில்.

ஆயதங்கள் இப்பொழுதெலாம்
-தயாரிக்கப்படுவதில்லை
"சமைக்கப்படுகிறது"

போர்கள்- கலவரங்கள்
காலநிலைகளாய் மாறி விட்டன.

தப்ப முடியாத
வளையத்திற்குள்
மாட்டிக் கொண்டது
உலக உருண்டை.

22.10.2023

# துளியேனும் மிச்சமின்றி...



தம்பாலை ஜீவைரியா சதீக்

கொஞ்சம் கருணை கேட்டு
கெஞ்சிக் கொண்டிருப்பவர்களும்,
தாளிடப்பட்ட கதவுகளை
தட்டிக்கொண்டிருப்பவர்களும்,
ஈரமில்லாதவள்,
இதயமில்லாதவள்,
இவளென்று
திட்டிக்கொண்டிருப்பவர்களும்,
தொடர்பில் இருக்கிறீர்கள்.

பாலைவனப் பயணத்தில்
பாதங்கள் வெடித்துவிட்டதாக,
கொண்டு வந்த தண்ணீரை தாகங்கள்
குடித்து விட்டதாக,
சளைத்துக்கொள்கிறீர்கள்.
வெற்றுப்பானையில்
அகப்பை போட்டு
அலுத்துக்கொள்கிறீர்கள்.

வரண்ட வானத்தையும்
வற்றிய குளத்தையும்
வாடிய பயிரையும்
எவ்வளவு காலம்தான்
இலவு காக்கப்போகிறீர்கள்?

மன்னித்துவிடுங்கள்
அடைமழையென கொட்டித்தீர்த்துவிட்டேன்
என் அத்தனை துளிகளையும்
மிச்சமில்லாமல ஒரு குடை மீது.

உறவு என்பது ஒரு புத்தகம்
தவறு என்பது ஒரு பக்கம்
ஒரு பக்கத்திற்காக
ஒரு புத்தகத்தையே
இழந்து விடாதீர்கள்.

# அழுகைதான் இங்கு ஆசுவாசம் ஆச்சு

ஐ.எல்.அப்துல் கபூர் –ஒலுவில்

படித்தவன் அழுகிறான்
படித்த படிப்புக்கு தொழிலில்லையென்று
படிக்காதவன் அழுகிறான்
தொழில் செய்யப் படிக்கவில்லையென்று

நடிப்பவன் அழுகிறான்
தன்னை மக்கள் ரசிக்கவில்லையென்று
காரணம் தேடி குடிப்பவன் அழுகிறான்
பெண்மை தன்னை நம்பவில்லையென்று



திருமணமானவள் அழுகிறாள்
குழந்தையில்லையென்று
குழந்தை பெற்றவள் அழுகிறாள்
பிள்ளைகள் பசிபோக்க வழியில்லையென்று

வயிறை நிரப்ப வழியின்றிப் போனவள்
விலைமாதாய் அழுகிறாள்
பயிரை வளர்க்க வழியின்றிப் போகவே
விவாசாயியும் அழுகின்றான்

ஆக...
அழுகைதான் இங்கு ஆசுவாசம் ஆச்சு




மனித யாக்கையில் மண்ணின் வாசம். அவன் சுவாசிப்பதும் மண்ணின் வாசம். மனிதன் விசுவாசிப்பதோ மண்ணின் நேசம்.

அவன் மண்ணிற்காய் மன்றாடுகின்றான் மற்றவர்களுடன் சண்டையிடுகின்றான்.

சண்டையிலே, ‘‘மண்ணாகிப் போ’’ என வசை பாடுகின்றான்.

ஆம்! மண்ணாலானவன். மண்ணிலே வாழ்கின்றவன். மரணித்தால் மண்ணுக்குள் அடங்க மிச்சமின்றி எச்சமின்றி மண்ணோடு மண்ணாகிறவனே மனிதன்.

மண் அவனை சுமந்துக் கொண்டிருக்கின்றது. தாயின் கருவறை பத்து மாதங்கள் தான். ஆனால் அவன் பிறந்தது முதற்கொண்டு இறந்தப்பின்பும் தன்மேல் தாங்கி தன்னுள் சுமப்பதும் மண்ணே!

பூமித்தாய்க்கு பொறுமை அதிகம். நீதம் தவறும் நீசர்கள், நேர்மையில்லா ஆட்சியாளர்கள், தீய நடத்தை கொண்டோர், திருடித் தின்போர், வருந்தி உழைப்போரை சுரண்டுவோர், வகை வகையாய், தொகை தொகையாய் பட்டியலிட்டால் தலைப்பு மாறிவிடும்.

மண் மகிமையானது என்பதனால் தான் மனிதன் மகத்தான படைப்பாகின்றான். மனிதன் தன்னிலிருந்து உருவானவன் என்பதனால்தான் மண்மாதாவின் மன்னிப்பு விசாலமானது.

ஏற்றம் பெற்ற தாயான பூமி சீற்றம் கொண்டு சில வேளைகளில் எகிறி குதிக்கும் போது தான் நாம் பூமியதிர்ச்சிக்களை காண்கின்றோம்.

மனிதனைக் காணும் மனிதன் அவனில் மண்ணைக் காண்பதில்லை. எமது சிருஷ்டிகர்த்தா அத்தனை அற்புதமானவன். ஆமாம் மனிதன் தன்னை பார்க்காமல் நோக்கினால் இத்தத்துவம் தெளிவாகும் .

மண்தான் மனிதன் மண்தான். வளி சுமந்த பெரு வெளியான வானில் அவனால் வாழ முடிவதில்லை.
நீர் நிறைந்த இடத்திற்குள்ளும் அவனால் வாழ முடிவதில்லை.
ஆனால் அவன் மண்ணில் வாழ்கின்றான் மண்ணை ஆள்வதற்காகவே மாய்கின்றான் மாள்கின்றான்.

மண்ணிலும் நீர் உண்டு அது ஊற்றுக்களாயும் நீர்வீழ்ச்சிகளாயும் உருவாகின்றது.

மண்ணிலும் வளி உண்டு அது கோளவகத்தின் ஆழத்திலிருந்து கோபமாய் வெளிப்படும்போது, ‘மக்மா’ வாக ‘லாவா’ வாக எரிமலையாய் எழும்பி வெடிக்கும்.

அமைதியான வளி மண்ணின் காற்றிடைவெளிகளை உருவாக்கி தாவரங்களை வேரூன்றிடச் செய்யும்.

இந்த மண் நாம் காணும் மண் மனிதன் என்னும் மண்ணின் கலவை எம் மமதைக் கண்களுக்கு புலப்படுவதில்லை.
அணுக்கள் முதற்கொண்டு அங்கங்களின் தொகுதியின் தொழிற்பாடுகளுடன் உணர்வுகளின் உயிரோட்டமான மனிதனை மண்ணாய் எண்ண முடிவதில்லையே!

கலங்களின் தேய்மாணம் - புதுக்கலங்களின்
உருவாக்கம் வேண்டும்.
மனித மண்ணிற்கு பசி உணர்வு ஏற்படுகின்றது.

தாவர உணவு மண்ணிலிருந்து கிடைக்கிறது. உணவுச் சங்கிலியின் ஆரம்பமே தாவரம் என்பதனால் விலங்குணவும் மண்ணிலிருந்தே கிடைக்கின்றது. கடலுணவும் கடலுக்கடியில் கடலடித்தள மேடையில் கனிமங்களால் ஆனது.

தேய்ந்த மண்ணின் தொகுதிக்கு (மனிதனுக்கு) மண்ணின் கூறுகளாய் உணவு கிடைக்கின்றது.

இது மனித வட்டமல்ல. மண்ணின் வட்டம். மண் நிலத்தில் தூங்கிய அன்றைய மனிதன் நிம்மதியாக கண்ணயர்ந்தான். குயவன் மட்பாண்டம் செய்தான். விவசாயி மண்ணிலே பயிர்ச்செய்தான். உழவன் சேற்றுக்குள் கால் வைத்து நாற்று நட்டான். மனிதன் மட்பாண்டத்தில் சமைத்து சோற்றை உண்டான். சுகமாய் வாழ்ந்தான். இன்று உணவில் இரசாயன சேர்மானங்கள் மண்ணான மனித உடலில் ஜீரணிப்பதில்லை. அதன் பக்கவிளைவுகள் பாதகமான கொடிய நோய்களை உருவாக்குகிறது. எனவே மண்ணாலானவனுக்கு மண்ணில் ஆன உணவே சாலப்பொருத்தமானது.

மழலையைப் பார்த்து 'பச்ச மண்ணு' என்று கொஞ்சுகிறார்கள். பாடம் புரியாமலிருப்பவனிடம் தலையிலென்ன களிமண்ணா''? என திட்டுகின்றார்கள்.
சோம்பலாய் இருக்கும் சிறுவனிடம் ''புற்று மண் மாதரி'' இருக்காதே என அதட்டுகின்றார்கள். திடகாத்திட மாக இருக்கும் இளைஞனைப் பார்த்து மலைப்போல் இருப்பதாக புகழ்கின்றார்கள்.

சந்தோஷத்தால் போற்றும் போது ''மண்ணின் மைந்தன்'' என பாராட்டுகிறார்கள். சினத்தால் தூற்றும் போது 'மண்ணாய் போவாய்' என் சபிக்கிறார்கள். ஆமாம் மனிதன் – மண்ணாலானவன் எனவே அவன் மண்ணானவன்.

# நரைவிழும் இளமைகள்

**ஏ.எஸ். குறைஷியா - மீராவோடை**

கன்னியொருத்திக்கு
கலியாணம் செய்யவென
பெற்றாரும், உற்றாரும் கூடிருந்து
திருமணப் பேச்சுக்கள் பேசிடவே.

மங்கையவள் மறைந்து நின்று
கனவுகள் பல கண்டாள்.
கலியாணம் நடக்குமென
கற்பனையில் அவள் மிதந்தாள்.

திருமணப் பேச்சின் இடைநடுவே,
சீதனப் பேச்சுக் குறுக்கிடவே,
ஏழையவள் தந்தை
இயலாதெனக் கூறி நிற்க,
திருமணப் பேச்சு
நின்று தான் போச்சு.

கண்ணீருடன் கனவுகள் பல சுமந்து
கடல் கடந்த ஏழையவள்,
இரவு பகல் பாராமல்
சீதனத்துக்காய் சேர்த்து வைத்தாள்
சில காசு

காலங்கள் உருண்டோட
கனவுகளும் கலைந்தோடி,
கவலைகள் வதைத்தெடுக்க
இனியும் இங்கிருக்க இயலாதென்று,
இளமை போய் முதுமை தோன்ற
தாயகம் திரும்பினாள்
தலை நரைத்து.

# இரவல் கொடு...!

கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபீ



இரத்தம் தோய்ந்த
உன் ஆடையைக் கொஞ்சம்
இரவல் கொடு காஸா ...!
என் ஈமானை
புதுப்பித்துக் கொள்கிறேன்...!

உயிரற்ற குழந்தைகளின்
உடலைச் சுமந்துகொண்டு
உரத்த "தக்பீர்" ஒலியுடன்
தன் கணவருக்கு விடைகொடுக்கும்
தாய்மார்களிடமிருந்து
தாய்ப்பால் ஒரு துளி அனுப்பிவை
அவர்களின் வீரத்தை
நானும் சுவைத்துப் பார்க்கிறேன் ...!

சூரியனைக் காணாமலேயே
சுரங்கத்தில் வாழும் போராளிகளின்
நம்பிக்கை நட்சத்திரத்தில் ஒன்றை
என் வானமும்
வசப்படுத்திக் கொள்ளட்டும்
என் கவலைகளைக்
கொளுத்திப் போடுகிறேன்...

இடிபாடுகளில் சிக்கி
இறந்தபின் உயிர்த்தெழும்
பீனிக்ஸ் பறவைகளின்
இறகொன்றை பொறுக்கியெடுக்க
ஏங்குகிறேன்
என் காயத்தைக் கொஞ்சம்
வருடிக்கொள்ள...

கற்களை வைத்துக்கொண்டு
ஏவுகணைகளை எதிர்க்கும்
உன் மண்ணின் மைந்தர்களை
மலைத்துப் பார்க்கிறேன் ...!

தண்ணீர் இல்லாவிட்டாலும்
கண்ணீரில்
வாழப் பழகிக்கொண்ட
உன் மக்களுக்கு
நன்மாராயம் இருக்கிறது
கலங்காதே காஸா ...!

# நவீன நாஸ்தீகத்தின் வரலாறும் அதன் எல்லைகளும்.

அஷ்ஷெய்க் றிஸான் சுபைதீன் (நளீமி)

கடவுளின் இருப்புத் தொடர்பான கருத்தாடல்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டவை. மிக ஆரம்ப காலங்களில் கடவுளின் இருப்புக் குறித்த சந்தேகங்கள் தனிமனிதர்களோடு நின்று கொண்டன. வாழ்க்கையில் அவர்கள் அடைந்த அனுபவங்களே அவர்களின் நிலைப்பாட்டினை நியாயப்படுத்துவதற்கான பெரும் ஆதாரங்களாக கொள்ளப்பட்டன.

அதனை அடுத்துவரும் காலங்களில் கடவுள் தொடர்பில் பொதுவெளிகளில் விவாதிக்கப்படலாயிற்று. மேலும் கடவுளின் இருப்பை மறுக்கும் வாதங்கள் நேரடியாக முன்வைக்கப்படாமல் பிரபஞ்சத்தின் தோற்றம் அதன் செயற்பாடுகள் முழுமையான பொருள்முதல் வாத அடிப்படையில் விளக்கம் வழங்கப்பட்டது. இத்தோடு வாழ்வு, மனிதன், பிரபஞ்சம் என்ற பரந்துபட்ட தலைப்புகள் பின்நாட்களில் கடவுள் எனும் பிரதான தலைப்போடு இணைந்ததாக தத்துவ ஆராய்ச்சிகளுக்குட்பட்டன.

மேற்குலகில் கிரேக்க, ரோம பாரம்பரியங்களில் ஆரம்ப நாட்களில் அரிதாக ஒரு சிலர் நாஸ்த்தீகக் கருத்துக்களைக் கொண்டிருந்துள்ளனர்.

சோக்ரட்டீஸிற்கு முற்பட்ட கிரேக்க தத்துவங்களில் (Pre-Socratic Greek Philosophy) நாஸ்த்தீக கருத்தாக்கம் காணப்பட்டுள்ளன என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். Democrtus, Anaxagoras, Diagoras போன்றோர் அக்காலகட்டத்தில் கடவுளின் தலையீடற்ற முழுமையான விளக்கமொன்றை பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கு வழங்க முற்பட்டனர்.



கீழைத்தேய உலகைப் பொறுத்தவரை நாஸ்தீகத்தை அடிப்படையாகக் கொண்ட மதங்கள் தோற்றம் பெற்றமை இக்கோட்பாட்டு வளர்ச்சியின் மற்றொரு திருப்புமுனை எனலாம். இந்தியாவில் பௌத்தம், ஜெயினிஸம் போன்ற மதங்கள் ஆன்மாவின் விடுதலை என்ற இலக்கை தமது பிரதான குறிக்கோளாக கருதினாலும் அவைகள் இந்த இலக்கை அடைந்துகொள்வதில் கடவுளுக்கு எந்த முக்கியத்துவமும் அளிக்கவில்லை. இந்து மதத்தில் சில பகுதிகள்கூட கடவுள் மறுப்பை ஏற்கின்றன Samkaya, Mimamsa என்பன நாஸ்தீகத்தை

வலியுறுத்திய இரண்டு இந்துத்துவ சிந்தனை முகாம்களாக குறித்துக்காட்டப்படுகின்றன. மேலும் Carvaka Ajivika போன்ற சிந்தனைப் பள்ளிகளும் இந்தப் பாரம்பரியத்தைக் கொண்டதாகவே சொல்லப்படுகினறது. சீனாவில் தாவோயிஸ்ம் அனாத்மவாத மதமாக இதே காலப்பகுதியில் வளர்ச்சியுற்றது.

இங்கு குறித்துக் காட்டப்பட்டுள்ள பாரம்பரிய நாஸ்தீகம் பெருமளவிலான செல்வாக்கைக் கொண்டனவாக இருக்கவில்லை. தங்களது கருத்துக்களை அதிகூடுதலாக தத்துவ ஆன்மீக அறிவோடு சுருக்கிக் கொண்டனர். இவர்களால்

மதங்கள் பாரிய அழுத்தங்களையோ, சவால்களையோ எதிர்நோக்கி இருக்கவில்லை என்பதனைப் புரிந்துகொள்ள முடிகின்றது. என்றாலும் **நவீன நாஸ்த்தீகம்** வித்தியாசமானது. இதனையே இக்கட்டுரையினூடாக விவாதிக்க எண்ணப்பட்டுள்ளது.

நவீன நாஸ்தீகம் மிகவும் செல்வாக்கு மிக்கது என்பதோடு அதன் தாக்கம் அறிவியலின் அனைத்து துறைகளையும் பாதித்துள்ளது. கடந்த நூற்றாண்டின் ஆரம்ப கூறுகளில் இச்சித்தாந்தத்தின் அதிர்வு மிக வீரியம் கொண்டிருந்தது என்பதும் அதன் தாக்கம் இன்றும் சமூகங்களுக்கு மத்தியிலே காணப்படுகின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

நவீன நாஸ்தீகம் செல்வாக்குப் பெற்றமைக்கான வரலாற்றுக் காரணங்கள் குறித்த ஆராய்ச்சி இக்கோட்பாடு குறித்த முழுமையான புரிதலை நமக்குத் தரக்கூடும்.

நவீன நாஸ்தீகத்தின் தோற்றம் நேரடியாக மத்திய காலப்பகுதியோடு தொடர்பானது. உலக வரலாற்றில் மத்திய காலம் என்பது கி. பி 5ம் நூற்றாண்டு முதல் கி. பி 15ம் நூற்றாண்டுவரையான காலப்பகுதியாகும். அதாவது உரோம சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியுடன் இக்காலப்பகுதி ஆரம்பிக்கின்றது.

உரோம சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்ததும் அதன் அதிகாரத்தின் ஒரு பகுதியாக இருந்துவந்த ஐரோப்பாவானது பல சிற்றரசுகளாக பிரிந்து செயற்படத் தொடங்கியது. பொதுவில் நான்கு வகையான மக்கள் அங்கு இருந்தனர். **அரசர்கள்:** அதிகாரம் படைத்த ஆளும் வர்க்கத்தினர் இவர்கள்,

**மதபோதகர்கள்:** இவர்கள் மக்களிடையேயும் அரச சபையிலும் செல்வாக்குடன் திகழ்ந்தனர். மூன்றாவது பிரிவாக **நிலச்சுவாந்தர்கள்**: (Land Lords) காணப்பட்டனர் இவர்கள் பெரும் விவசாய நிலப்பரப்புக்களை சொந்தமாக வைத்திருந்ததோடு விவசாயிகளை அதில் குறைந்த ஊதியத்தில் வேலைக்கமர்த்தியும் வந்தனர். **விவசாயிகள்:** இந்த உழைக்கும் வர்க்கமே சனத்தொகையில் அதிகமாக இருந்தாலும் செல்வாக்கு அற்றவர்களாகவும், உரிமையற்றவர்களாகவும் வாழ்ந்துவந்தனர்.

மக்களை இலகுவில் சிந்தனை ரீதியாக மண்டியிடச் செய்யும் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன, ஒன்று அரசியல் இரண்டாவது மதம். ஐரோப்பாவில் இவற்றை நன்கு புரிந்துகொண்ட அதிகாரவர்க்கமும் மதபீடங்களும் மிக இலகுவில் கைகோர்க்க ஆரம்பித்தன. சில வகையான வரிகள் வசூலிக்கும் அதிகாரங்களும் மதபோதகர்களுக்கு இருந்து வந்துள்ளது. நிலச் சுவாந்தர்களின் அநியாயங்களை நியாயப்படுத்தும் கைங்கரியத்தை மதத்தின் பெயரால் மேற்கொண்ட இவர்கள் தங்களுக்கென்றான பாரிய சொத்துக்களை கொண்டவர்களாகவும் இருந்தனர்.

குறிப்பாக மத்திய காலப்பகுதியின் பின்னரைப் பகுதியில் ஐரோப்பா அறிவியல் ரீதியில் பாரிய பின்னடைவில் இருந்தது. கல்வியைக் கற்றுக் கொடுக்கும் மத்திய நிலையங்களாக கிறிஸ்தவ தேவாலயங்களே இருந்தன. கல்வியின் ஏகபோக உரிமையை மதத்தின் புனிதத்தினூடாக நிலைநிறுத்தி இருந்தனர். பிற்காலங்களில் முரண்பாட்டை உருவாக்குவதற்கான புள்ளியாக அது மாறியமை குறிப்பிடத்தக்கது.

தேவாலயங்களின் போதனைகளுக்கு மாறாக சிந்திக்கும் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. “கண்ணை மூடிக் கொள் என்னைப் பின்தொடர்” எனும் மந்திரமே அவர்களின் முழுப்போதனைகளினதும் எதிர்பார்ப்பாக இருந்துவந்தது.

இந்த அடிப்படையில் பைபிளின் புதிய மற்றும் பழைய ஏற்பாடுகளோடு அரிஸ்டோட்டில், தொலமி போன்றோர்களின் கருத்துக்களும் கல்விக்கான மூலாதாரங்களாக கொள்ளப்பட்டன. பிரபஞ்சம், கோள்கள், நட்சத்திரங்கள், கோள்களின் சுழற்சி போன்ற அம்சங்களை இந்த

மூலாதாரங்களின் துணைகொண்டே விளங்கியிருந்தனர்.

மத்திய காலத்தில் வாழ்ந்த ஐரோப்பியர்கள் உலகம், அதன் இயக்கம் தொடர்பில் விளங்கியிருந்த அம்சங்களை சுருக்கமாக கூறுவதாயின்...

**பூமியானது பிரபஞ்சத்தின் மத்தியில் அமைந்திருக்க சூரியன், சந்திரன் மற்றும் ஏனைய கோள்கள் அதனை சுற்றிவருகின்றன. கடவுள் உலகை இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்கு 4004 வருடங்களிற்கு முன்னர் படைத்தார் (இதனை இயேசுவின் பரம்பரையை வைத்து கணித்திருந்தனர்) மேலும் அவரின் பிறப்பிலிருந்து 4004 வருடங்களின் பின்னர் அதனை அழித்தும் விடுவார் எனவும் நம்பினர். இந்த உலகம் கடவுளின் பெரும் அறிவின் வெளிப்பாடு என்பதோடு ஒவ்வொரு பொருளை படைத்ததன் பின்னாலும் கடவுள் ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். மனிதனையும் கடவுளையும் இணைப்பவர்களாக மதபோதகர்கள் இருக்கிறார்கள். இவர்களே பாவமன்னிப்பு உட்பட சுவர்க்கம் நரகம் கிடைப்பதற்கும் இடைத்தரகர்களாக செயற்படுகின்றனர் என்பதும் அவர்களின் நம்பிக்கையாக இருந்தது.**

இந்த ஆதிக்கம், அறிவியல் பின்னடைவு அத்தனைக்குமான முதல் அடியாக வந்து விழுந்தது, போலந்து வானியல் அறிஞரும் கணித மேதையுமான நிக்கலஸ் கொப்பனிக்கஸின் நட்சத்திரங்களின் சுழற்சி தொடர்பான நூலாகும்.

## மோதலின் ஆரம்பம்

போலந்து தேசத்தவரான நிக்கலஸ் கொப்பனிக்கஸ் சிறுவயதில் தந்தையை இழந்ததால் தாய்வழி மாமாவான கிறிஸ்தவ பாதிரியினால் வளர்க்கப்பட்டவர் மாத்திரமன்றி அவரும் ஒரு மதபோதகராக இருந்தார். முழுமையான கிறிஸ்தவ மதக்கோட்பாடுகள் பின்பற்றப்பட்ட ஒரு சூழலில் கொப்பனிக்கஸ் வளர்ந்தாலும் அவரது ஆய்வுகளும் நூல்களும் பின்னாட்களில் கத்தோலிக்க மதபீடங்களால் தடைசெய்யப்பட்டன.

கி.பி இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தொலமியோ அதற்கு முன்னால் வாழ்ந்த அரிஸ்டோட்டிலின் கருத்துக்களோ மறுதலிக்கப்பட முடியாதவை என்ற ஒரு நிலையைத் தோற்றுவித்து அதற்கு புனித அந்தஸ்தும் கொடுக்கப்பட்ட போது கொப்பனிக்கஸ் தனது கருத்துக்களுக்கு நிச்சயம் எதிர்ப்பினை சம்பாதித்தே ஆகவேண்டும் எனும் நிலை ஐரோப்பாவில் இருந்தது.

அப்போது நம்பப்பட்டுவந்த புவிமைய கோட்பாட்டிற்கு (Geocentric theory) பதிலாக சூரிய மையக்கோட்பாடு (Heliocentric theory) பற்றிய கருத்துக்களும் கோள்கள் வட்டப்பாதையில் சுழல்கின்றன எனும் கண்டுபிடிப்பும் கொப்பனிக்கஸிற்கு “முட்டாள்” என்ற புகழ்ச்சியை திருச்சபையினரால் வழங்கப்படுவதற்கு வழிகோலியதோடு, அவரது De Revolutionibus Orbium Coelestium எனும் நூல் 1616ல் மதஅதிகாரத்தால் தடைசெய்யப்பட்டு 1835வரை இத்தடை தொடர்ந்தது. மற்றொரு பக்கத்திலோ அவரது ஆராய்ச்சியை கொண்டாடியவர்களும் காணப்பட்டனர் அவர்கள் மதவாதிகளல்ல.

கொப்பனிக்கஸின் கருத்துக்களை ஏற்று அதனை பிரச்சாரம் செய்துவந்த ஜியடோனோ புரூனோ என்பவர் 1600ம் ஆண்டு மேற்சொன்ன அதிகார மையத்தின் தூண்டலால் உயிரோடு எரித்துக் கொலைசெய்யப்படுகிறார்.

வைராக்கியமும் அறியாமையும் இரண்டறக் கலந்துவிட்ட எதேச்சதிகார பலிபீடங்கள் ஆன்மீக சர்வாதிகார தோரணையுடனேயே விஞ்ஞானத்தை அணுகியது. இந்த முரண் நிலையைத் தோற்றுவித்தமை நாஸ்தீகம் எனும் சித்தாந்தத்தின் வளர்ச்சியின் முக்கிய கால கட்டமாகிப்போனது. தனது கருத்துகளுக்காய் எரியூட்டப்பட்ட புரூனோ First martyr of the new science புதிய விஞ்ஞான அறிவியலின் முதலாவது உயிர்த்தியாகி எனப் பின்னாட்களில் புகழப்பட்டார்.

என்றாலும் காலம் செல்லச்செல்ல கொப்பனிக்கஸின் கருத்துக்களின் ஏற்புடமை அதிகரிக்கத் தொடங்கியது.

கொப்பனிக்கஸின் கருத்துக்கு வலுச்சேர்க்கும் வண்ணம் கலிலியோ கலிலி எனும் பிரபல இத்தாலிய வானவியல், கணிதவியல் விஞ்ஞானி தனது தொலை நோக்கியூடான அவதானிப்பின் பெறுபேற்றை வெளிப்படுத்தினார். சூரியன் மையத்தில் இருக்க அதனை சுற்றிச் சுழலும் ஏனைய கோள்கள்போல ஒரு கோள்தான் புவி என்பதனை அவர் தெளிவு படுத்தியபோது, இக்கருத்து பைபிளின் போதனைக்கெதிரானது என கூறப்பட்டது. உடனே கத்தோலிக்க திருச்சபையால் குற்றம் சுமத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார் கலிலியோ.

தனது கருத்துக்கள் பொய்யானவை என்று கூறுவதோடு அதனைப் பிரச்சாரம் செய்வதனையும் நிறுத்துமாறு அவரை நிர்ப்பந்தித்தது விசாரணை மன்று.

அவதானம், பரிசோதனை போன்றவற்றால் கண்டறிந்த உண்மைக்கும் மனச்சாட்சி என்பவற்றிற்கு மாற்றமாக செயற்பட அந்தப் பெரும் விஞ்ஞானி விரும்பவில்லை. அவரது ஆய்வுகளும் கருத்துக்களும் வெளியிடப்படும்போதெல்லாம் உடனே விசாரணைக்குட்படுவார். சுமார் 17ஆண்டுகள் அலைக்கழிச்சலின் பின்னர் வீட்டுக்காவலில் நிரந்தர கைதியாகினார். உரிய மருத்துவ உதவியின்றி அங்கேயே இறந்தும் போனார். அவரது உடலை அடக்குவதில் கூட பாப்பாண்டவர் எட்டாம் எர்பன் தலையீடு செய்து உரிய இடத்திலன்றி வேறு இடத்தில் அடக்கம் செய்ய நிர்ப்பந்தித்தார். 1992ம் ஆண்டில் பாப்பாண்டவர் ஜோன் பால், கலிலியோ கலிலி எனும் மாமேதை நடாத்தப்பட்ட விதம்குறித்து மன வருத்தம் தெரிவித்தாலும் அச்செயற்பாடு உருவாக்கிய மதத்திற்கும் அறிவியலிற்குமான விரிசல் இன்றும் ஈடுசெய்ய முடியாத ஒன்றாகவே உள்ளது.

மதத்திற்கும் அறிவியலிற்குமான மோதலின் ஆரம்பமுதல் கிறிஸ்தவம் ஒவ்வொரு முயற்சியிலும் எதிரிகளை உருவாக்கிக் கொண்டே போனது. அறிவியலை ஆதரிப்போர் மதவாதியாக இருக்க முடியாது எனும் நிலை உருவாகிவிட்டுது.

இந்தப்போராட்டத்தின் உச்சமாக வந்தவர் சேர் ஐசாக் நியூட்டன். ஒரு பேணுதலான கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்ந்தவர். ஐரோப்பிய அறிவியல் மறுமலர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்றவர் நியூட்டன் அவர்கள். அவர் கண்டுபிடித்த பிரபலமான மூன்று இயங்கு விதிகள், புவியீர்ப்பு விசை போன்றவற்றினூடாக கோள்கள், ஞாயிற்றுத் தொகுதியின் கட்டமைப்பு, அதன் இயக்கம் போன்றவற்றை விளக்கினார். நியூட்டனின் இக்கண்டுபிடிப்புக்களே கடவுள் பற்றிய நம்பிக்கையில் விஞ்ஞானத்தின் பெயர்கொண்டு அடிக்கப்பட்ட முதலாவது அடியாக தொடர்ந்துவந்த காலங்களில் காணப்பட்டது.

விஞ்ஞானத்தின் மீதான இறுக்கமான, தளர்வற்ற, எதிரிநிலைப்படுத்தப்பட்ட போக்குகளிற்கு மத்தியிலும் அறிவியலின் வளர்ச்சி உத்வேகம் அடைந்தது. அறிவை நேசித்த பலர் மதத்தை துறக்க துணிந்தனர். எனவே ஐரோப்பிய அறவியல் மறுமலர்ச்சி மதம்தொடர்பில் நல்ல கருத்துக்களுடன் வளர்ச்சியடையவில்லை என்பதோடு எந்த அறிவியலை பழிதீர்க்க கத்தோலிக்கம் முற்பட்டதோ அதே அறிவியலை வைத்து சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மதத்தின் அடிப்படைகளை உடைத்தெறிய விஞ்ஞானம் தவறவில்லை.

மேற்சொன்ன வரலாற்றிலிருந்து விஞ்ஞானத்திற்கும் மதத்திற்கும் இடையிலான முரண்பாடு விஞ்ஞான ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்ததா? அல்லது உள முரண்பாட்டின் அடியாக அமைந்ததா? என்பதனைப் புரிந்து கொள்வது கடினமல்ல.

சரி! அப்படியெனில் கடவுள் இல்லை, மதங்கள் மனிதனால் கட்டமைக்கப்பட்டவை என்ற வாதம் எப்படி தோற்றம் பெற்றன? நாஸ்தீகத்திற்கு அறிவியல் சாயம் பூசப்பட்டது ஏன்...?

**(தொடரும்)**

## இஸ்ரேலிய மிருகமே...!

**ஹப்புதளை — வை. ஜெஸ்மின்**

ஏ...இஸ்ரேலே!
உன் ஆயுதங்களின் பலத்தை
சோதிக்க பலஸ்தீனின்
பிஞ்சுகளின் நெஞ்சுகளைத்தானா
நீ கண்டு கொண்டாய்?

பூமியே அதிரும்
குண்டுகளால்
புனித பூமியழிக்கும்
மிருகக் கூட்டமே
நீங்கள் மூட்டிய
பூதப்புகையினில்
இந்த தேசம் எங்கினும்
இரத்தப்படுக்கை

பாலைவனத்தில்
ஈரல்மில்லையே
என்று கவலையை
இனி விட்டுவிடலாம்
பாலஸ்தீனின் பூமியைத் தோண்டினால்
இனி தண்ணீரின் நிறம்
சிவப்பாயிருக்கும்.



## வீரத்தின் துளிகள்



**சித்தி ஜெஸீனா நிஸ்ரீன்**
**சாய்ந்தமருது**

வானத்தை தொடத்துடிக்கும்
கடலின் ஆசை நிராசை ஆவது போல்
எப்போதும் நிறைவேறாது இஸ்ரேலே
உனது அழித்தொழிக்கும் ஆசை

ஆண்டாண்டு காலம் ஆண்டு வந்த தேசமிது
இஸ்ரேல் என்னும் ஈனப்பிறவி நீ
அபகரிக்க நினைக்கும் நியாயமென்ன?

தஞ்சம் என வந்தஉனை
வரவேற்ற மக்களினை
நெஞ்சினிலே ரவைகளினால்
துளைக்கின்ற நியாயமென்ன?

பலஸ்தீன வீரத் தியாகிகளே
பிஞ்சுகளை பார்த்திங்கு
நெஞ்சமெல்லாம் தவிக்கிறதே
புரிந்திடுங்கள் சாதனைகள்
வரலாறு உங்களை பொறித்திடவே

சோகத்தை சுகம் என்று
ஏற்றுப் போராடும் வீரச்செம்மல்களே
ஈடேற்றம் உமக்குண்டு இறைவனிடத்தில்

அணுஅணுவாய் அழிகின்ற
உடலோடும் உயிரோடும்
ஒலிச்சிதறல்களை ஒன்று கூட்டி
தாயகத்தை மீட்டெடுக்க
உரிமைகளை வென்றெடுக்க
துணிந்திடுவீர்

பேனா முனையால்
என் சிறு பங்கை
வரைகின்றேன் பிரார்த்தனையுடன்.....




## – அஷ்ஷெய்க் அஹமத் பிஸ்தாமி –

**"இஸ்லாமிய சட்டப் பின்னணியில் குடும்பப் பொருளாதாரப் பராமரிப்பு"**

மிஷ்காத் ஆய்வு நிறுவனத்தின், காலப் பொருத்தம் கருதி வெளியிடப்படும் மற்றும் ஒரு கூட்டுப்பணி இது. இஸ்லாத்தின் நெகிழ்வு, முழுமை, காலத்துடன் இணைந்து செல்லல், அனைத்தையும் தழுவிய பூரண வழிகாட்டல் போன்ற சிறப்பம்சங்களின் நடைமுறை உதாரணமாக இந்நூலைக் கருதலாம்.

அதே போல இந்த நாட்டில் தலை தூக்கியுள்ள மிகவும் நெருக்கடியான பொருளாதார உராய்வு மக்களின் உயிரையே உறிஞ்சிக் குடிக்கும் நிலையை அடைந்துள்ள நிலையில் பாரதூரமான விளைவுகள் ஏற்படாதிருக்கும் பொருட்டு இஸ்லாமிய சமூகம், குடும்பம் சார்ந்து எத்தகைய முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதன் ஆன்மீக வழிகாட்டலை பொருளியல் மயப்பட்ட பார்வை வழியாக நூல் தருகிறது. இதனை the economic aspects within the Islamic family structure என்றோ economic empowerment என்றோ economic components within the context of the Islamic family structure என்றோ அழகுற அழைக்கலாம்.

இஸ்லாமிய வழிகாட்டலுக்கான அடிப்படை மூலாதாரமாக Authentic Source உசாத்துணையாக அதனது ஆதார சுருதியான வஹியும் அதன் வழி எழுந்து நின்று வழிகாட்டும் அல் குர்ஆனும் அஸ் ஸுன்னாவும் அமைகின்றன.

இதுகாலவரை கண்ட இஸ்லாமிய குடும்பம் குறித்த பார்வை வழிகாட்டல் குவிமையம் இன்னொரு பாய்ச்சலை நோக்கி முன்னகர்கிறது நூல் வழியாக.

இஸ்லாமிய குடும்பம் என்பது வணக்க வழிபாடுகள் worships நிரம்பிய குடும்பங்கள் மட்டுமல்ல. பொருளாதார Economically ரீதியாக பலம் வாய்ந்து well stable உறவுகள் பிணைக்கப்பட்ட powerful bond நிலையில் சுமுகமாக வாழும் குடும்பங்களே. குடும்பங்கள் பிளவு படக் காரணம் காணித் தகராறுகள், பொருளாதார இழுபறிகள், கடன் சார்ந்த விடயங்கள் போன்றனவே.

எனவே குடும்பங்களின் உள்ளக பொருளாதார சீர்கேடுகள் பிளவுகள், இடைவெளிகள், தேவைகள் இனங் காணப்பட்டு அவை நிவர்த்திக்கப் படுமாயின் குடும்பங்கள் பிளவுபடவோ ஜன்மப் பகை வளர்க்கவோ தேவைப்படாது.

அத்தகைய நிலைமைகள் உருவாகாமல் குடும்பங்கள் ஒன்று இன்னொன்றை தாங்கி உதவி உபகாரம் செய்து ஒத்துழைக்கும் வகையில் நிரப்பமான வழிகாட்டலை இந்நூல் வழங்குகிறது.

கூட்டுப்பணி என்பதால் தனி நபரின் சிந்தனையாக கருதாமல் நிறுவனத்தின் சிந்தனையாக கருத வேண்டும். உண்மையில் சமூகமயமாக்கி ஜனரஞ்சகப்படுத்தி விட வேண்டிய மிகப்பெரும் பணியாக இதனைக் கருதலாம்.

ஏலவே உயர் சொகுசு வர்க்கம் elite, மத்திய வர்க்கம், கடைநிலை விளிம்பு நிலை வர்க்கம் Marginal என்று கூறு போடப்பட்ட சமூக அடுக்குகள் இன்று பணக்கார சொகுசு வர்க்கம், வசதியற்ற ஏழை வர்க்கம் என்று இரண்டாக

மாறியுள்ளது. மத்திய வர்க்கமோ மரியாதை நிமித்தம் கை நீட்டவோ கடன் வாங்கவோ வெளியில் சொல்லவோ முடியாமல் அவலத்தை விழுங்கி அடுப்படியில் வைத்து விட்டு வெளியில் வரும் நிலையில் இந்த நூல் வெளிவருவது ஓரளவு ஆறுதலாக உள்ளது.

மறுபுறம் குடும்பத்தில் ஏனையோரை சுமக்கும் அளவு வசதி வாய்ப்புகள் இல்லாத நிலையில் உள்ளவர்களுக்கும் இது ஆறுதலைத் தருகிறது. இதுபோல ஏதாவது சமூகம் சார்ந்த வழிகாட்டல்கள் கிடைப்பின் அவர்களும் நெருக்கடியில் இருந்து சற்று தணிந்து நிம்மதியாக வாழலாம். கௌரவமாக இருக்கலாம்.

இஸ்லாம் உருவாக்க முனையும் அழகிய கட்டமைப்புகளில் பிரதானமானது குடும்பம். முழு நிறைவான தனி மனித உருவாக்கத்தின் நோக்கமே அத்தகைய செழுமையும் போஷிப்பும் கொண்ட குடும்பங்கள் உருவாக வேண்டும், அதன் வழியாக சமூகங்கள் உருவாகி மிகச்சிறந்த ஆரோக்கியமான மாற்றம் உருவாக வேண்டும் என்பது தான்.

இந்த இஸ்லாமிய போதனைகளை, நெறிமுறைகளை கைக்கொள்ளும் குடும்பங்களின் அச்சாணியாக ஆன்மீக வழியில் அமைந்த பொருளாதாரத்துக்கு பிரதான பங்கும் பணியும் இருப்பதை தவிர்க்க முடியாது. குடும்பம் சகல வகையிலும் பலமடைகையில் தான் சமூகம் பலமும் வலிமையும் காணும். பொலிவுடன் இருக்கும். அதன் கற்கள் பலமிழந்து செல்கையில் சமூக நிறுவனம் ஆட்டங்கண்டு இருப்பை அடையாளத்தை இழக்கும். இறுதியில் சரிந்து விழும். சுவடுகளும் எஞ்சாது.

இந்த உண்மைகளைக் கருத்தில் கொண்டு தான் “இஸ்லாமிய சட்டப் பின்னணியில் குடும்பப் பொருளாதாரப் பராமரிப்பு” எனும் இந்த தொகுப்பை நோக்க வேண்டும்.

நாடும் உலகும் பொருளாதார நெருக்கடிகளில் சிக்கிதவிப்பதையும் அன்றாட வாழ்வு, அதன் இயல்பான அத்துனை பண்புகளையும் இழந்து செல்வதையும் காணலாம். டாவின் சொன்னது போல தக்கன பிழைக்கும் நிலை மேலெழுந்துள்ளது.

ஆனால் இஸ்லாத்தின் போதனைகளும் வழிகாட்டலும் ஒரு தரப்பு செழுமையும் செல்வாக்கும் பெற்று மறு தரப்பு செல்வாக்கிழந்து செல்லாக்காசாகி ச் செல்லும் பாதையும் தெரியாமல் இருப்பதை அங்கீகரிப்பதில்லை. ஒரு தனி மனிதனுக்கு சமூகம் நிச்சயம் பொறுப்பு எனும் நிலை உள்ளது போலவே ஒரு குடும்பம் என்று வருகையில் அங்குள்ள வசதி வாய்ப்பு படைத்தவர்கள் இதர குடும்ப உறுப்பினர்கள் இரத்த உறவுகள் விடயத்தில் பொடுபோக்குடன் நடந்துகொள்ளவே முடியாது.

அவர்களையும் பார்க்கவும் பராமரிக்கவும் வேண்டிய கடப்பாடு முதுகின் மேல் சுமத்தப்பட்டுள்ளது.

வெறுமனே ஒரு கண்டிப்பான நிபந்தனை என்றாக்காமல் விருப்புடன் செய்யும் வகையில் வணக்கமாக ஆக்கி அதன் வழி வாழ்வின் சுபீட்சம் மன நிறைவு என்று சென்று சுவனம் நுழைவதையும் ஆயுள் நீடிப்பையும் ஆரோக்கியத்தையும் இறை அருளையும் உலகில் தந்து விடுவதாக அமைகிறது இந்த குடும்ப பராமரிப்பு விவகாரம் .

இந்த பின்புலத்தில் நோக்கும் போது ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள செல்வாக்கும் வசதியும் படைத்தவர்கள் உடனடியாக செய்து ஆக வேண்டிய தார்மீக பொறுப்பை பணியை பாரத்தை அதன் பங்கை அழகுற வலியுறுத்துகிறது இந்த நூல்.
குறிப்பாக குடும்ப ஒன்றுகூடல்களின் போது family get-together இந்த நூல் அறிமுகம் செய்யப்பட்டு குடும்பத்தின் தனவந்தர்களுக்கு அறிவூட்டப் படுமானால் நிச்சயமாக மிகப்பெரும் மாற்றமும் குடும்பங்களுக்கிடையிலான ஆத்மார்த்த உறவும் உரையாடலும் தாங்குதிறனும் பலமடையும். இதுவே இஸ்லாம்

எதிர்பார்க்கும் இறுதி இலக்குமாகும். Ultimate goal

இரத்த உறவின் முக்கியம், இரத்த உறவும் பொருளாதார பராமரிப்பும், பொருளாதார பராமரிப்புக்கு உட்பட வேண்டிய இரத்த உறவினர்கள், செலவழித்தலுக்கான வழிகாட்டல்கள், பராமரிப்புக்கான நிபந்தனைகள், பராமரிப்பு உள்ளடக்கும் விடயங்கள், பராமரிப்புக்கு உட்படுவோருக்கு ஸகாத் வழங்கல், குடும்பக் கூட்டு பொருளாதாரப் பராமரிப்பின் சமூக ரீதியான நன்மைகள், குடும்ப பராமரிப்புக்கான மாதிரி திட்டம், கேள்வி பதில் என நூல் ரத்தினச்சுருக்கமாக இது குறித்தான அருமையான நிறைவான ஒரு பார்வையை எமக்கு முன்வைக்கிறது.

ஸகாத், ஸதகா இதர செலவழிப்புக்கான அமசங்கள் கஞ்சத்தனத்தை நீக்கி போக்கி விடுவதுடன் பிறர் குறித்தும் நெருக்கமானவர்கள் குறித்துமான உணர்வை அதிகரிக்கும்.

கஷ்டம் நஷ்டம், இரவு பகல், இயலுமை இயலாமை, ரகசியம் பரகசியம், கேட்டுவரும் நிலை கேட்டு வராத நிலை வந்தால் கொடுப்பது வராத நிலையில் தேடிச்சென்று கொடுப்பது போன்ற முறைகளையும் சொல்லித் தருகிறது இஸ்லாம்.

குடும்ப உறவினர்களுக்கு சென்று சேர வேண்டிய கட்டாய பங்கை கொடுத்தே ஆக வேண்டும். கொடுக்க விடாமல் தடுக்கும் உள்ளம் நரக நெருப்பின் துண்டாக தொடர்ந்தும் இருக்கும். குடும்பத்தின் சாபமும் சபிப்பும் யாரையும் தப்பச் செய்யாது. அது தவிக்க வைக்கும். ஆக மொத்தத்தில் இறைவனுக்காக அவனை அஞ்சி செய்யப்படும் இரத்த உறவினர்களுக்கான செலவழிப்பின் பொருளாதார பார்வையும் வியூகமும் தான் இங்கு விலாவாரியாக அலசப்படுகிறது.

தொடர்ந்தும் அருமையான நூல்களை மிஷ்காத் தர வேண்டும். எம்மை சூழ படிந்து மண்டியிட்டுள்ள அம்சங்களை நோக்க வைத்து அதன் மீது இஸ்லாமிய ஒளி வெள்ளம் பாயச்செய்து விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும்.

We are eagerly anticipating the forthcoming publication of your new book in both Sinhala and English in the near future.

விரைவில் வழமை போல இலங்கையின் அடுத்த இரு மொழிகளிலும் வெளிவர வேண்டும்.

# இயற்கை மருத்துவம்



## மூலவியாதிக்கு 7 நாள் தீர்வு மண்பானைச் சோறு

ஒரு சிறிய மண்பானையில் இரவு தூங்கச் செல்லும் முன் ஒரு கைப்பிடி அளவு சோற்றினை ஒரு கப் நீரூற்றி அதில் மூன்று சின்ன வெங்காயத்தை தோல்நீக்கி சிறு சிறு துண்டுகளாக வெட்டி போட்டு கொஞ்சம் தூக்கலாக உப்பிட்டு எல்லாவற்றையும் நன்றாக கலக்கி மூடிவைத்து இரவு முழுவதும் (குறைந்தது 8-12 மணிநேரம்) ஊறவிட்டு காலையில் அதனை வெறும் வயிற்றில் தொடர்ச்சியாக 07 நாட்களுக்கு குடித்து வருவீர்களானால் உள்மூலம், வெளிமூலம், மூலக்கடுப்பு, மலக்குடலில் தேங்கியுள்ள கழிவுகள் என அனைத்துமே சீர்செய்யப்படும்.

# தனிமையொன்றும் கொடுமையில்லை.

ஷிபாளீயா பௌசுல்
நேகம

வலிகளால் மிதித்து
விழிகளை நனைத்து
வேதனைதர
யாருமில்லை

குற்றம் செய்யாமல்
குற்றவாளி வரிசையில்
நிறுத்திட
யாருமில்லை

எதிர்பார்புகளைப் விதைத்து
ஏமாற்றத்தை
விளைச்சலாகப் பெற்றுத்தர
யாருமில்லை

பாசம் காட்டும்
பாசாங்கு செய்திடும்
பாத்திரத்தினை ஏற்று நடிக்க
யாருமில்லை

கொஞ்சலும் கெஞ்சலும்
கோபங்களையும் அஞ்சல் செய்யவும்
யாருமில்லை

பதவிகளையும் பட்டங்களையும்
பிணக்குகளையும் பிரிவுகளையும்
பட்டியல்படுத்த
யாருமில்லை

சினங்களையும் சிதைவுகளையும்
உதாசீனங்களையும் பெற்றுத்தர
யாருமில்லை

தேடல்களையும்
கூடல்களையும்
நாடல்களையும்
வாடல்களையும் தேம்பிப் பாட
யாருமில்லை

யாருமில்லை
யாருமில்லை
துன்பத்திற்கு இடமுமில்லை
இன்பத்திற்கு குறைவுமில்லை..

கேள்வியில்லா
என் நந்தவனத் தனிமையில்
புதிருமில்லை பதிலுமில்லை
இறுதியில் தனிமை ஒன்றும்
கொடுமையும் இல்லை



# சொல்லன்பன் நஸிறுதீனின் 'புலால் வாசம்' பீடிக்குறைபோல கூடும் எழுத்து




**எம். அப்துல் றஸாக் – விரிவுரையாளர்**
**(மொழித்துறை) தென் கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை**

கடந்த ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக தமிழில் நாவல் என்னும் இலக்கிய வடிவம், மிகப்பெரிய வாழ்க்கைத் திட்டத்தில் இருந்து மிகச் சாதாரணமான பாடுபொருட்கள் வரை தன்னை பரீட்சித்துக்கொண்டு வந்திருக்கின்றது. இவ்வடிவத்தின் எழுச்சி, வீழ்ச்சி பற்றிய வாதப்பிரதிவாதங்கள் பல்வேறு மட்டங்களில் நிகழ்ந்தபடியே இருக்கின்றன.

ஒரு சிறந்த நாவலுக்கான நுட்பமுறைகள் அத்தனையையும் ஒருவர் கற்றுத் தேர்ந்தாலும் அதனை எடுகோளாக வைத்துக்கொண்டு ஒரு நல்ல நாவலை அவரால் எழுதிவிட முடியுமா என்பது கேள்விக்குறியே. அண்மைக்காலம்வரை விதிகளை மீறிய விதத்தில் குறிப்பிடும்படியான நாவல்கள் ஆங்காங்கே பிறந்து கொண்டுதானிருக்கின்றன.

**ஒவ்வொரு நாவலும் வெளிவரும்போது அது புதிய விதிகளை உருவாக்குகின்றது எனில் இப்பொருத்தம் தமிழில் எழுந்த பிரதேச நாவல்களுக்கும், மண்வாசனை நாவல்களுக்கும் சாலவே பொருந்தும்.** இவ்வகையில் சுதந்திர இந்தியாவில் ஆர். ஷண்முகசுந்தரம், கி. ராஜநாராயணன், பொன்னீலன் போன்றோர் நாவல்கள் மூலம் தங்களது மண்சார்ந்த புதிய எழுச்சி மற்றும் வீழ்ச்சிகளைப் பாடினர். இவர்களது எழுத்துலகம் தத்தமது மண்சார்ந்த நிலக்கூறுகளையும் மக்களின் வாழ்வியலையும் வெள்ளந்தியாக எழுதித் தீர்க்கும் நுட்பங்கள் பலவற்றைக் கொண்டதாகும். இப்படியாக வெளிவந்த ஒருதொகை நாவல்கள் வடிவப் பிரக்ஞையோ, கட்டுமான நுட்பங்களோ, மாயாஜால விநோதங்கள் கொண்டதாகவோ அமையவில்லை. மாறாக உள்ளதை உள்ளபடி எழுதித் தீர்க்கும் நெஞ்சுரமும், அநீதிகளைக் களையும் அறநோக்கும் கொண்டவைகளாகும்.

இந்த அறநோக்கின் வழியில்தான் சொல்லன்பன் நஸிறுத்தீன் அவர்களும் தனது முதல் நாவலைக் கொணர்ந்திருக்கின்றார். 'புலால் வாசம்' என்பது நாவலின் பெயர்.

ஏலவே தனது "கிண்ணஞ்சொட்டு" என்று சிறுகதைத் தொகுதி மூலம் தென்கிழக்கு கரையோர முஸ்லிம்களின் வாழ்வியலை எழுதிய சொல்லன்பனுக்கு இந்தக் களம் புதிது அல்ல. என்றாலும் நாவல் வடிவம் அவருக்குப் புதிது.

தனது நாவலினூடாக மனிதவர்க்கத்தின் வீழ்ச்சியைப் பாடுவது ஒன்றையே அவர் குறிக்கோளாகக் கொண்டுள்ளாரென அறிய முடிகின்றது.

தென்கிழக்கு கரையோரக் கிராமங்களின் அரசியல், பொருளாதார வாழ்வு குறித்த

இலக்கிய மீட்டுருவாக்கங்கள் நாவல்களினூடாக அடையாளப்படுத்தப் படுகின்ற நிலை ஓரிரு தசாப்த வரலாறு கொண்டதாகும். இது ஒலுவில் பிரதேசத்தை மையங்கொண்டு புறப்படுவது கவனத்துக்குரியது. பொன்னன்வெளியை அஸீஸ் எம். பாயிஸ் ''வயலான் குருவியில்'' சித்திரித்ததும், துறைமுகத்தின் வருகையை ஜே. வஹாப்தீன் ''தோறாப்பாட்டில்'' எழுதித் தீர்த்ததும் இத்தகைய பின்புலத்திலேயே ஆகும். இதன் தொடர் வருகையாகத்தான் சொல்லன்பன் நஸிறுத்தீனையும் நோக்க வேண்டும்.

தங்கள் கிராமிய வாழ்வு சிதைந்ததற்குக் காரணம் துறைமுகத்தின் வருகையே என்று இன்றுவரை பொங்கிக் கொண்டிருப்பவர்கள் உளர் என்கின்ற அருட்டுணர்வே நஸிறுதீனின் நாவலின் அடிப்படையாக அமைந்துள்ளது.

கடலோரக் கிராமம் ஒன்றில் பன்னெடுங்காலமாக வாழும் ஒரு குடும்பத்தின் கதையைச் சொல்ல முனையும் நஸிறுதீன், இக் கதையினூடாக தான் சார்ந்துள்ள கடலோரக் கிராமத்தின் அத்தனை மாற்றங்களையும் கேள்விக்குள்ளாக்குகின்றார்.

மேலெழுந்தவாரியாக நோக்கின் இக்கதைப் போக்கு பாரம்பரியமானது போலிருந்தாலும் இன்றைய காலமாற்றம் கிராமியங்களை நவீன சுரண்டல்களுக் குள்ளாக்கியமையை இவர் ஓர் பாமரப் பார்வையினூடாகப் பார்க்க விழைந்திருக்கின்றார். இங்கு அறிவியல் ரீதியானதொரு அணுகுமுறையை இரண்டாம் பட்சமாக்கி உணர்வு ரீதியாக சமூக நோக்கை இவர் தன் நாவலில் இழையோட விட்டிருக்கின்றார்.

கடல்புறம் சார்ந்த வாழ்வு குறித்து தமிழில் பல்வேறு நாவல்கள் வெளிவந்திருந்தாலும் 'புலால் வாசம்' தனித்துத் தெரிவதற்கான பல அம்சங்கள் இந்நாவலில் உட்பொதிந்துள்ளன. நிலத்தில் மேற்கொள்ளும் தொழில்களை விட நீர்த்தொழில்கள் எப்போதும் அதிக உழைப்பை வேண்டி நிற்பன அதீத நம்பிக்கையைத் தருகின்ற அதேகணம் ஏமாற்றங்களையும் விளைவித்துச் செல்வன. அதிலும் இன்றைய பன்னாட்டு முதலீடுகளின் வருகையும், அதனை ஊக்குவிக்கின்ற அரசியல் நடவடிக்கைகளும் ஏழை மீனவர்களின் வாழ்வை அடியோடு அழித்துவிடும் அபாயங்கள் கொண்டவை என்பதை நஸிறுத்தீன் ஆழ வலியுறுத்துகின்றார்.

''சொந்த நாட்டுக்கும், எந்த நாட்டுக்கும் மீன்பிடித்தொழில் வல்லுனர்கள் கொண்ட கிராமம் சோவை இழந்துவிட்டது. காலத்துக்குக் காலம் தங்களை வளர்த்துக் கொள்வதற்காகவும், அறிமுகம் செய்வதற்காகவும் புதுப்புது கோசங்களால் முதுகில் ஓங்கி அடித்தவர்களும் இல்லை. மக்களும் கனகாலமாய் செய்துவந்த தொழிலும் இல்லை. நடைப்பிணங்களாய் முகம் தெரியாத ஊர்களுக்கு பிச்சை எடுக்க வைத்த கொந்தராத்துக்காரர்களும் பதில் சொல்ல வேண்டும். ஆற்று ஓரங்களில் அத்தாங்கோடு அலைபவர்களும், பொன்னாங்கணி பேக்கோடு வயல்வெளியின் வழியே திரிபவர்கள் எத்தனை பேர்?''

என்கின்ற கேள்விகள் நாவல் முழுக்க வெவ்வேறு வகைமாதிரிகளில் ஒலிக்கின்றன.

தலைமுறை தலைமுறையாக செய்துவந்த தொழிலிற்கு மாற்றாக கல்வியின்பால் நாட்டம் கொள்வதே சிறந்த வழி என்பதை நாவலின் கதாநாயகன் செல்லத்துரை என்கின்ற செல்லங்காக்கா தொடக்கம் அவரது மகன் அகமது முஹம்மது வரை நாவலாசிரியர் ஊடுகடத்த முயற்சிக்கின்றார். ஆனாலும் அவர் கூறும் கல்வியினூடான சமூகமாற்றம் நம்பிக்கை தரும் ஒன்றாக இருப்பதற்குப் பதிலாக சுயநலமும், பித்தும் பிடித்ததாகவும் இருந்தால் கிராமத்தின் சிதைவை யாராலும் தடுத்துவிட முடியாது என்பது அவரது அசையாத நம்பிக்கை.

கல்வி சமூக மாற்றத்திற்கான நல்ல கருவிதான். ஆனால் அக்கல்வியே இன்னொரு வர்க்கத்தை உருவாக்கும் கைங்கரியத்தில் ஈடுபடுவதென்பது மிகவும் அருவருக்கத் தக்கதென்பதை செல்லங் காக்காவின் பிரேதத்தை மெத்தப்படித்த அகமது முஹம்மதுவாவல் தொட்டுத்தூக்கக்கூட முடியவில்லை என்று அவர் கூறுவதிலிருந்து புரிந்து கொள்ளலாம். கல்வியை சமூகமாற்றத்திற்காகப் பயன்படுத்தும் போது கிராமியத்தின் பண்பாட்டுக் கூறுகளை இழந்து நல்ல மாற்றங்களை ஏற்படுத்துதல் சாத்தியமில்லை என்பது நாவலாசிரியர் உணர்ந்தே செயற்பட்டிருக்கின்றார்.

‘சட்டியோட பெயித்து பெலால் நாத்தம்’ என்று கிராமங்களில் ஒரு சொல்வதுண்டு. ஆயினும் நாவலாசிரியர் நாவல் முழுக்க இவ்வாசத்தை தெளித்தபடியே இருக்கின்றார். இத்தொழிலில் ஒன்றியவர்களுக்கு இக்கவிச்சிதான் வாசம், சுவாசம் எல்லாமே. தவிர செல்லங்காக்கா தண்டயலாக இருப்பதும், மீன்பிடி நுட்பங்களை முழுவதுமாக அறிந்திருப்பதும், பழைய நினைவுகளை மீண்டும் மீண்டும் அசைபோடுவதுமாக என்று கடல்தொழிலின் மகத்துவங்கள் சொல்லப்படுகின்றன. குறிப்பாக ‘கடலாமை முட்டை’ பற்றி வருகின்ற சம்பவங்கள் வாசகர்களுக்கு புதியதொரு அனுபவக் கிளர்வை ஏற்படுத்தும் என நம்பலாம்.

தலைமுறை இடைவெளிகள் குறித்த ஆழமான விசாரணைகளை நாவலில் முன்னிறுத்தும் நஸிறுத்தீன் யதார்த்தப் பாங்கினைக் கையாண்டு உறவுச்சிக்கல்களின் புதிர்களை அவிழ்க்க முற்படுகின்றார். என்றாலும் முடிச்சுக்கள் தொடர்ந்தும் விழுந்து கொண்டே இருக்கின்றன. செல்லங்காக்கா பெற்ற பிள்ளைகளுக் கிடையே எப்போதும் உறவின் விரிசலொன்று இருந்து கொண்டேயிருக்கின்றது. சுலைஹா - கலந்தர் உறவிலும் இதேநிலை தொடர்கின்றது. கிழிந்துபோன ஆடையைத் தைப்பதைப் போல ஓர் ஊசியைக் கொணர்ந்து அவர்களை இணைக்க முயல்கிறார் நாவலாசிரியர்.

இந்நாவலில் வருவோர் வஞ்சகத்தை ஏற்றுக்கொண்டு பழிவாங்கும் குணமுடையோராக இல்லை. சமரசம் செய்யும் நலிந்தவர்களாவே உலாவருகின்றனர். சோரம் போன கலந்தர் மாஸ்டரை அவரது மனைவி சுலைஹா ஏற்றுக் கொள்வதும், அதேபோல சினாசாவை அவளது தந்தை பக்கீர்த் தம்பி ஏற்றுக் கொள்வதும் இங்கு இயல்பாகவே இடம்பெறுகின்றன. ‘அக்கினிப் பிரவேசம்’ சிறுகதையில் தண்ணீர் ஊற்றி கற்பின் கறையைப் போக்கும் ஜெயகாந்தன் போல பக்கீர் தம்பியும் தன் மனைவிக்கு கூறும் உபதேசம் மகளை மன்னித்துப் புனிதவதி ஆக்கிவிடுகின்றது.

“என்ன அங்க கட்டுப் பொட்டிக்க பூந்த எலிபோல கற கறக்கிற. அவரவர்ர தலவிதிய ஆரால மாத்தலாம்? காலடிய வாற புள்ளய நாம வெரசலாமா சட்டுப் புட்டெண்டு ஆக்கிற அவிக்கிற வேலயப்பாரு. நீ கொண்டா மன கீச்சான”

என்று பக்கீர்தம்பியின் குரலாக ஒலிக்கும் நாவலாசிரியர், தலைவிதியை எழுதும் இறைவனின் தண்டணைக்கு இவர்கள் தப்பமுடியாது என்பதையும் நாவலில் கூறிவிடுகின்றார். இதனால் கலந்தர் மாஸ்டரும், அகமது முஹம்மதுவும் சமூகத்தின் தண்டனைக்கு ஆளாகின்றார்கள். இங்கு பாரம்பரியக் கதைசொல்லும் முறையொன்றினையே நஸிறுத்தீன் பின்பற்றுகின்றார். இதனை நாவலொன்றின் பலவீனமாகப் பார்ப்போரும் உளர். ஆயினும் காலமாற்றத்தினால் சிதைவுறும் கிராமமொன்றின் வீழ்ச்சியைப் பாடும் கதைக்கு இத்தகைய யதார்த்த முடிவு அவசியமானதொன்றே.

கிழக்கிலங்கைக் கிராமியத்தின் வாழ்வியல் கூறுகள் பலவும் நாவலின் போக்கிக்கேற்ப சொல்லப்படுகின்றன. உணவுமுறைகள், சடங்கு சம்பிரதாயங்கள், சமய நம்பிக்கைகள், ஒளிவு மறைவுகள் என்று இவை கூறப்படுகின்றபோது நாவலாசிரியரின் விமர்சனக் கணைகளும்

சமயம் பார்த்து பாய்ந்துவிடுகின்றன. “மரத்திர பேரச் சொல்லித்தானே பழத்திர பேரச் சொல்லுவாக”, “ஆமானதெல்லாம் ஆலிசப்படுகுதாம், பீத்தச் சொளகு மாத்தெள்ளுதாம்”, “நாய்க்கி பீக்காட்ட காட்டப்படாதாம் யாவாரிக்கி தொற மொகத்த காட்டப்படாதாம்”, “தண்ணிக்க குசு உட்டாலும் தலைக்கி மேலானே வரும்” என்று கிராமத்திற்கே உரித்தான தனித்துவமான இகுத்துக்கதைகள் இயல்பாக வெளிப்படுவது ஒரு கிராமத்துக் கதைசொல்லிக்குரிய சிறப்பம்சமாகப் பார்க்கப் படவேண்டியதாகும்.

ஒலுவில் பிரதேச பேச்சுவழக்கு நாவலுக்கு தனித்துவமான உயிர்ப்பினை வழங்கி விடுகின்றது. பாத்திரங்களின் உரையாடல் களும் யதார்த்தப்பாங்கோடு கூடி வருகின்றன. நச்சென உறைக்கும் கிராமத்துப் பழமொழிகள் கதையில் வாகாய் வந்தமர்ந்து கொள்கின்றன. கதைமொழியில் கவித்துவமான நடைப்பாங் கொன்றினை நாவலாசிரியர் கைக்கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு அத்தியாயங்கள் தொடங்குகின்றபோதும் விரிவான வர்ணனை களுடாக கதைக்களத்தை விரிவு செய்கின்றார்.

ஒரு குடும்பத்தின் கதையை ஒரு கிராமத்திற்குப் பிரதிபலிப்புச் செய்யும் அவரது உத்திமுறை போற்றப்படத்தக்கது. இதனால் குடும்பத்தையும் கிராமத்தையும் இணைத்தே அவர் கதைப்பின்னலை முன்னகர்த்திச் செல்கின்றார். பழைய கிராமத்தை நம்முன் கொண்டுவர அடிக்கடி தனது கதாபாத்திரங்களை கனவுலகுக்குள் நுழைத்து விடுகின்றார். பின்பு யதார்த்தம், அப்பாத்திரங்களை ஒரு பீடிக்குறை சுட்டதுபோல விழித்தெழச் செய்கின்றது. இந்நிலை நாவலைப் பின்பற்றும் எம்மையும் தொற்றிக் கொள்கின்றது.

முடிவாக, நாவலை வாசித்து முடித்தும் புலால் வாசம் நீங்காத நிலையினை இந்நாவல் எமக்குள் ஏற்படுத்தி விடுகின்றது. சிதிலங்களாகிப்போன ஒலுவில் கடற்கரை மண்ணில் நெடிது நேரம் அமர்ந்து பேசவும், பகிரவும், விவாதிக்கவும் இன்னும் பல அம்சங்களை இந்நாவல் விட்டுவைத்திருக்கின்றது. இவ்விட்டு வைத்தல் சொல்லன்பன் நஸிறுத்தீன் அவர்களை ஞாபகம் கொள்ளச் செய்யுமெனில் அது இந்நாவலினூடாக அவருக்குக் கிடைத்த வெற்றியே ஆகும்.

# கனவுகள் சூடி



## மூதூர் சுஸானா முனாஸ்

கனவுகள் சூடி கரைந்திட்ட காலம்
களைப்பினை மனதிலே விதைத்திட்ட போதும்
நினைவிலே நின்றிடும் இளமையின் கோலம்
நீங்கிடா மகிழ்ச்சியை தந்திடும் ஜாலம்

கனவினில் வாழ்ந்திடும் வாழ்வதும் வீணே
கருத்தினில் கொண்டிடில் காலமும் தேனே
மனதிலே பொங்கிடும் மகிழ்ச்சியை தானே
மானுடம் என்றுமே விரும்புமே மானே.

முயற்சியை நீயும் முழுமையாய் பற்று
முகிழ்ந்திடும் மகிழ்ச்சியை முடிவினில் பெற்று
வியத்தகு உயர்ச்சியை விரைவினில் எட்டு
விலகிடு சோம்பலின் ஆட்சியை விட்டு.

# மர்ம ரகசியங்கள்...

– எஸ். ஃபாயிஸா அலி –



ஒவ்வொரு மரணப்படுக்கைத் தலையணைகளும்
தமக்குள் புதைத்து வைத்திருக்கின்றன
பன்னீராயிரம் மர்மரகசியங்களை.

“இப்பதான் கஞ்சி பருக்கினேன்..
மடியில்தான் ரூஹ் பிரிந்த தென்கிறாள்.. !”
முதல் மகள்.

“விடிய விடிய
உம்மா என்னோடுதான் பேசிக்
கொண்டிருந்தாங்க”
என்கிறாள் இளையவள்.

“விடியற்காலை
கொஞ்சம் முன்னாலேதான்
கைகால் அசந்துபோனது..
நெஞ்சை நீவியபடி அருகிலேயே
அமர்ந்திருந்தேன்.”
என்கிறாள் மருமகள்..

ஆனாலும்..
இறுதியாய் வந்த வைத்தியரோ எல்லோர்க்கும்
பொதுவாய்..
மிக இறுக்கமாய்..
நெற்றி சுருக்கியபடி சொல்லி முடிக்கிறார்..
“பின்னிரவிலேயே அந்தப் பரிதாப ஆன்மா
உடலை விட்டும் பிரிந்து போனதென்று”


பாடுபட்டு உழைத்து..
சிற்றெறும்பு பருக்கை சுமப்பது போல்
களைத்து வேர்த்து..
சீட்டென்றும் லோனென்றும்
கொஞ்சங்கொஞ்சமாய் சேமித்து..

பெற்றதனைத்துக்கும்
மாடிமனைகள்..
நகைநட்டுகள்..
வயல் வாய்க்கால்கள் என...
தேடித்தேடிக் கொடுத்து விட்டு..

மறுபடியுமாய்..
அதே ஒழுகும் வீட்டிற்குள்
எதற்காக அவர்கள் ஒதுங்குகிறார்கள்...
அல்லது ஒருக்கி வைக்கப்படுகிறார்கள்..?

“எங்களுக்கு இதுதான் நிம்மதி” என
அவர்கள் சொல்வதிலும்..
“எவ்வளவு சொல்லிப்பார்க்கிறோம்..
சண்டை கூட போட்டாச்சு..
வங்க எங்களிட்ட வாறாங்களே இல்லையே..”
என்று இவர்கள் சொல்வதிலும்

எங்கோ ஒளிந்திருக்கிறது
இன்னொரு சுயநலம்.



– ஒலுவில் ஏ.அகீலா –

# அந்த போத்தல்கள் கொலை செய்யும்...



பெருஞ்சத்தத்தில் குழந்தைகள் இறப்பதை
நீங்கள் அறிந்ததுண்டா???

நிச்சயமாய் இறப்பார்கள்...

எப்படி என்றா கேட்கிறீர்கள்??
அப்படி இறந்த குழந்தைதானே இப்போது
உங்களிடம் பேசுகிறது..
இல்லை இல்லை..
கொஞ்சம் அழுகிறது..

என் உலகில் தினமும் இடி விழும்..
உலகமே உம்மாவும் வாப்பாவும் தானே!

வாப்பாவின் உலகம் போத்தல்களாய் இருந்தது..
என்ன போத்தல் என்று
அப்போது எனக்கு புரியவில்லை..
இப்போது உங்களுக்கு
புரிந்திருக்கும்.

வெடிக்கின்ற சண்டைகளில் பறக்கின்ற
தோட்டாச்சொற்கள்..
துளைத்தது என்னவோ என் நெஞ்சைத்தான்..

கை பிடித்து நடக்க வேண்டிய நான்..
கதவு மூலையில் நின்றதை
கவனிக்கவே இல்லை அவர்கள்..
ஒருவராவது என்னை கொஞ்சி இருக்கலாம்...

அடிக்கிறார் வாப்பா..
ஒளிக்கிறேன் நான்!
அழுகிறார் உம்மா..
காதை பொத்திக் கொள்கிறேன்
நான்!!

ஏங்கி நின்ற என்னை
எட்டிக்கூட பார்க்கவில்லை..
எடுத்தெறிந்து பேசிவிட்டு
எட்டி நடக்கிறார் வாப்பா...

என் நினைப்பில் ஹீரோவாய் இருந்த வாப்பா,
யாரோவாய் விலகிப்போனார்..
என் கோபமெல்லாம் போத்தலில் தான்..

அது என் வாப்பாவிடம்
எங்களை பற்றி ஏதோ சொல்லி எங்களை
பிரித்திருக்க வேண்டும்..
ஏனென்றால்
அது தானே தினமும் வாப்பாவோடு இருந்தது!!..

இருவரும் இருந்தும் அனாதையாய் நின்றேன்
நான்..
நான் இறந்து போனது தெரியாமல்,
குறையில்லாமல் வளர்த்தார் உம்மா!!

இள வயதில் என்னோடிருந்த இடைவெளியோடு,
போத்தல்களும் கூடிப்போனது..

என்னை இழந்ததே தெரியாமல் இப்போது நெருங்கி
என்ன பயன்?..
என் நம்பிக்கை இறந்துவிட்டதே!

இப்போதெல்லாம் நான் ஏங்குவதில்லை..
எப்போதோ இறந்து, புதைந்து, உக்கிப்போன
ஆன்மாவுக்கு ஏது உணர்வு??

ஆனாலும் பயிற்சி எடுக்கிறேன் உங்களை
காதலிக்க..
அல்லது வெறுக்காமல் இருக்க..

சரி..–
இந்தக் கல்லறை இப்படியே இருக்கட்டும்..
நீங்கள் கொஞ்சம் திரும்பிப்பாருங்கள்...

உங்கள் கதவிடுக்கிலும், கட்டிலின் கீழேயும் பல
சமாதிகள் இருக்கலாம்..
உங்கள் போத்தல்களை புதைக்கவிட்டாலும்,
ஒளித்துவிடுங்கள்..
அவர்கள் வளரும் வரை ஒரு தற்காலிக யுத்த
நிறுத்தமாவது செய்து விடுங்கள்..

# கைகளில் அல்குர்ஆன், கழுத்தில் தூக்குக் கயிறு

சிங்களத்திலிருந்து தமிழில் :
ஜே. நூர் ஸுஹறா நபார்

எமது நாட்டை ஆட்சி செய்த அந்நியர்களை எமது நாட்டைவிட்டு அகற்ற அவர்களை விரட்ட எமது நாட்டுக்காக வீரத் தியாகம் அடைந்தவரே இந்த மம்மலே மரிக்கார்.

எமது நாட்டு வீரத்த தியாகிகளான "புரன் அப்ப" அவர்களின் பிறகு 08 தியாகிகள் சேர்ந்து வெள்ளையர்களை விரட்ட அரும்பாடு பட்டனர். இவர்களில் இறுதியானவர் சரதியல் ஆவார்.

அவரின் குழுக்களில் 08 பேர்களில் ஒருவரே சிரிமலா, உத்கிந்த, அவடியா, சாமத், நசூர்தீன், மம்மலே, காதர் ஆவார்கள். இவர்களில் ஒருவரான சிரிமலாவின் பேராசையால் இவர் தூக்கு மேடைக்கு அனுப்பப்பட்டார்.

1832 மார்ச் 25 ல் சரத்தியல் பிறந்தார். 1864 மே 27 ல் சரத்தியலோடு இணைந்து மம்மலே மரிக்கார் கண்டி போகம்பற மைதானத்தில் தூக்கிலிடப்பட்டார்.

இவர்தான் வெள்ளையருக்கு எதிராக பல கிளர்ச்சிகளை செய்தவர். வெள்ளையரை விரட்ட 32 ஆண்டுகள் வாழ்ந்து வீரமரணம் அடைந்தார். உயரம் 05 அடி 03 அங்குலமான சிறிய மனிதர் மம்மலே மரிக்கார் சரதியலோடு இணைந்து பல பெரிய வீரச் செயல்களைச் செய்தார். இறுதியாக காட்டிக் கொடுக்கப்பட்டமையினால் உயிரிழந்தார்.

முஸ்லிமாகப் பிறந்த மாவனல்லைப் பிரதேசத்தைச் சேர்ந்த பல மக்கள் சிங்கள ஆட்சியாளர்களோடும் சிங்கள சமூகத்தோடும் இணைந்து வாழ்ந்தார்கள். இன்று மக்கள் எதற்காக இந்த இன முறுகலை ஏற்படுத்துகின்றனர் என்பதும் இந்ந வன்முறைகளை தூண்டிவிடும் சக்திகள் யார் என்பதும்மான் புரியவில்லை.


ஆனால் அப்போது இவர்கள் இருவரும் இணைந்து வெள்ளையர்களுக்கு எதிராக பாடுபட்டனர்.



இலங்கை மக்கள் இன வன்முறைகளின்றி ஒற்றுமையாக வாழ இவர்கள் உதாரணமானவர்கள். இவர்கள் உலகிற்கு எடுத்துக் காட்டானவர்கள். மௌலவி அவர்களின் கையில் அல் குர்ஆனும் பாதிரியாரான "துபே" என்பவர் கையில் பைபிளும் வழங்கப்பட்டு அனைவரும் வேடிக்கை பார்க்க காட்டிக் கொடுத்தவனின் கண் முன்னே கண்டி போகம்பர மைதானத்தில் சமய அனுஷ்டானப்படி 1864 மே 24 ல் தூக்கிலப்படுகின்றனர்.

வெள்ளையர்களின் ஆட்சியில் இந்த சிரிமலா என்பவர் 150 பவுண் தங்கத்திற்காகவே இவர்களைக் காட்டிக் கொடுத்தார் என்பது குறிப்பிடத்த தக்கது.

## தூக்கிலப்பட்ட மம்மலே மரிக்கார்



ஜனதா லத்தீப்

# நப்பாசை

மக்கத்து மண்ணுக்கும்
மதீனத்துப் புழுதிக்கும்
மாறி மாறி ஓடுகிறேன்
மா நபியைத் தேடுகிறேன்

கண்களால் பார்க்கவில்லை
கனவிலும் காணவில்லை
மண்ணறைக்குச் செல்லுமுன்னே
மதி முகத்தைக் காண்பேனா?

சங்கை மிக்க நபி மீது
சலவாத்து ஓதுகிறேன்
தூங்கும்போதும் திரு நபியை
தேடித் தேடி ஏங்குகிறேன்

மக்கத்து மண்ணினிலே-ஒரு
மகனாகப் பிறந்திருந்தால்
சொர்க்கத்து செந்நபியின்
சஹாபாவாக இருந்திருப்பேன்

அக்கால காபிர்களும் நபியின்
அழகு முகத்தைப் பார்த்தார்கள்
முக்காலும் தவமிருந்து உங்கள்
முகம் பார்க்க அழுகின்றேன்


பால் நிலவை மிஞ்சுகின்ற
பிரகாசம் பார்த்திருப்பேன்
பக்தியிலே திளைத்திருந்து
பரவசமடைந்திருப்பேன்

வையகமே வியந்து நிற்கும்
வசந்த நபி வடிவழகை
வைத்த கண் வாங்காமல்
வாழ் நாளைக் கழித்திருப்பேன்

சஹாபாப் பெருமக்களோடு
சேர்ந்து நான் வாழ்ந்திருப்பேன்
வஹி வரும் வேளைகளில்
வள்ளல் நபியுடன் இருந்திருப்பேன்


உம்மி நபியவர்களின்
உத்தரவைப் பேணியிருப்பேன்
தம்மிடமுள்ள தனத்தையெல்லாம்
தீனுக்காய்க் கொடுத்திருப்பேன்

காத்தமுன் நபியுடனே
காலத்தைக் கழித்திருப்பேன்
யுத்தங்களில் கலந்துகொண்டு
யுக வாழ்வை முடித்திருப்பேன்



# தன்முனைக் கவிதை நூலறிமுகம்

## பாவேந்தல் பாலமுனை பாறூக்




### "வானம் தொடும் வண்ணத்துப் பூச்சிகள்"

அண்மையில், தமிழகத்தில் இருந்து எனக்கு நஸீரா ஆப்தீன் அவர்கள் மூலமாக அனுப்பி வைக்கப்பட்ட புத்தகப் பொதியில் கிடைத்த மற்றுமொரு நூல் இது.

திரு. கா.ந. கல்யாண சுந்தரத்தின் தொகுப்பில் 52 கவிஞர்களின் 780 தன்முனைக் கவிதைகளின் தொகுப்பாக கம்போடியா அங்கோர் மாநாட்டில் வெளியீடு கண்ட 232 பக்கக் கவிதை நூல் இது.

இந்த வானம் தொடும் வண்ணத்துப் பூச்சிகள் தன்முனைக் கவிதைத் தொகுப்பு நூல் வரிசையில் 4வது தொகுப்பு நூல்.

**ஆங்கிலக் கவிதை வடிவமான லிமரிக், குறும்பாவாகி தமிழில் நீட்சி பெற்றிருப்பது போல, யப்பானியக் கவிதை வடிவமான ஹைக்கூ, துளிப்பாவாகிப் பல பெயர்களில் விரிவு பெற்றுவருவது போல, தெலுங்குக் கவிதை வடிவமான நானிலு, தன்முனைக் கவிதைகளாகத் தமிழில் சுவை சேர்க்கின்றது..தமிழில் வந்து சேர்ந்து கொண்ட வரவுப் பாக்களிவை.**

2017ல் திரு கா. ந. கல்யாண சுந்தரம் அறிமுகப்படுத்தியுள்ள தன்முனைக் கவிதை வடிவம் சாரதா க.சந்தோஷ், அனுராஜ், இளவல் ஹரிஹரன், அன்புச் செல்வி சுப்புராஜு, கவிஞர் ஜென்ஸி செல்வராஜ் ஆகியோரின் உறுதுணையுடன் நானிலுவில் இருந்து நீட்சி பெற்று, தமிழுக் கேற்றாற் போல விதி அமைத்து வளர்த்தெடுக்கப்பட்டிருக்கின்றது.

ஹைக்கூ 3வரிக்கவிதை, தன்முனைக் கவிதை 4 வரி. தன்முனைக் கவிதையில் ஒரு வரி அதிக பட்சம் 3வார்த்தைகளையே கொண்டிருக்கும். மொத்தமாக கவிதை 12 வார்த்தைகளுக்கு மேற்படக் கூடாது.

எளிய சொற்கள்பொருள் அடர்த்தி,முதலிரு வரிகளும் ஒரு நிகழ்வை அல்லது காட்சியை தொடக்கிவைக்க, அதனோடு தொடர்புபட்ட சாதகமான, அல்லது முரண்பட்ட உணர்ச்சியை, கருத்தை வெளிப்படுத்துவதாக அடுத்து வரும் இருவரிகளும் அமையும்.

இனி நூலில் இடம் பெற்றுள்ள சில தன்முனைக் கவிதைகள் கீழே தரப்படுகின்றன. ருசி பார்ப்பதற்காகவும் தன்முனைக் கவிதைகளின் தன்மையை அறிவதற்காகவும்..

புத்தனுக்குப் பேராசை காட்டி
அழைத்த போதிமரம்
இலையுதிர்த்து தனது துறவில்
ஞானம் பெற்றது (கா.ந. கல்யாணசுந்தரம்)

வயலை உழுகின்ற உழவன்
அரை நிர்வாணமாய்
வரப்பில் நின்ற பொம்மை
அழகான ஆடையுடன் (அனுராஜ்)

கருவைச் சுமந்த
கருப்பையின் வலி கண்டு
அழுதே பிறக்கின்றன
மழையும்,மழலையும் (சாரதா க சந்தோஷ்)

என்னால் முடியும்
என நிமிர்ந்தேன்
தூரத்து மலையும்
சிறு புள்ளியாக! (அன்புச் செல்வி சுப்பு ராஜு)

உறங்கிக் கொண்டிருந்தால்
கனவு வரும்
உழைத்தால் தான்
விடிவு வரும் (கவிஞர் ஜென்ஸி)

பூந்தோட்டத்தில் புதர் மறைவில்
காதலர் சோடி
பின்னால் நின்று படமெடுக்கிறது
நாக பாம்பு! (நஸீறா எஸ் ஆப்தீன்)

மேலும் அழகானது
எனது முற்றம்
நிலவும் நீயும்
ஒன்றாய் வந்தபோது! (சுமதி சங்கர்)

ஓவியா பதிப்பக வெளியீடாக 150 இந்திய ரூபா விலையில் மலர்ந்திருக்கின்றது இந்நூல். தொகுப்பாசிரியருக்கும் வெளியீட்டாளர்களுக்கும் நமது வாழ்த்துகள்

# மன அழுத்தம்



**இப்னு சீனா** (980 AD – 1037 AD), மேற்கில் அவிசின்னா என அறியப்படுபவர், முஸ்லீம் உலகின் தலைசிறந்த தத்துவஞானி மற்றும் மருத்துவர்,அவர் ஆரம்பகால நவீன மருத்துவத்தின் தந்தை என கூறப்பப்படுகிறார்.

விஞ்ஞானி இப்னு சினா அவர்கள் மன அழுத்தத்தின் பாதிப்பை அறிய ஒரு பரிசோதனையை நடத்தினார்.

அவர் இரண்டு ஆட்டுக்குட்டிகளை எடுத்து அவைகளை தனித்தனியாக வெவ்வேறான இரண்டு கூடுகளில் வைத்தார். அவ்விரு ஆட்டுக்குட்டிகளும் வயதிலும் எடையிலும் சமமானவை, ஒரே இனத்தைச் சேர்ந்தவை, ஒரே வகையான தீவனத்தை அளித்து வளர்க்கப்பட்டு பின்னர் தனித்தனியாக பிரிக்கப்பட்டன..!

இப்னு சினா, ஒரு ஆட்டுக்குட்டிற்கு பக்கத்தில் ஒரு ஓநாயை கூண்டில் அடைத்து அதன் பக்கத்தில் வைத்தார். எந்நேரமும் ஆட்டுக்குட்டியின் கண்களுக்கு ஓநாய் காட்சியளித்தது, அதன் வாசனையை எப்பொழுதும் அது நுகர்ந்தது. இரண்டாவது ஆட்டுக்குட்டி தனியாக ஒரு சூழலில் அடைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டது.அதற்கு பக்கத்தில் ஓநாயோ ஆபத்துக்களோ இல்லை.

சில மாதங்கள் கழிந்தபோது ஓநாயை பார்த்துப்பார்த்து வளர்ந்த ஆட்டுக்குட்டி மன அழுத்தம், பதற்றம், பயம் காரணமாக திடீரென இறந்துவிட்டது. ஓநாய் கூண்டில் இருந்தாலும் அதுபற்றி காட்டிக்கொள்ளாமல் வாழ்ந்தாலும் அதுபற்றிய நினைவு ஆட்டுக்குட்டியை சிறிது சிறிதாக கொன்றுவிட்டது. ஓநாயைப் பார்க்காத இரண்டாவது ஆட்டுக்குட்டி, நன்றாக உண்டு ஆரோக்கியமாகவும், அமைதியாகவும் வாழ்ந்தது!

எம்மைச் சுற்றியிருப்பவர்களால் எமக்கு ஏற்படும் மாறாத மனஅழுத்தம், பயம், பதற்றம் என்பன எமது ஆரோக்கியத்தையும் எமது உடலையும் எமது உள்ளத்தையும் அழிக்க போதுமானது!.

எமது ஆன்மாவின் அமைதியைக் குலைக்கும் எல்லாவற்றிலிருந்தும் விலகி இருப்பதற்கு துணிவானதும் தீர்க்கமானதுமான முடிவுகளை எடுக்கவேண்டும்.

**முடிவு:**

உனது சுயத்தின்மீது உனக்கு பூரண உரிமை உண்டு, அதற்கு தீங்கு விளைவிக்கும் எதனையும் தள்ளி வைக்கும் உரிமையும் உனக்கே உண்டு. அதற்கு எரிச்சலூட்டும், அதனை விரக்தியடையச் செய்யும், அதனை காயப்படுத்தும் எல்லாவற்றையும் தள்ளிவைக்கும் உரிமையும் உனக்கானதே. எனவே நீயே அதன் நண்பனாக இரு!

# ஜின்கள்

படைப்பு - பண்பு - பலம் - பலவீனம்



அஷ்-ஷெய்க் இஷட் எம் நிலாம் (நளீமி)

ஜின்கள் எனும் உயிரினம் பெரும்பாலும் மக்களால் தவறாகப் புரிந்து கொள்ளபட்ட ஒரு அமானுஷ்யம்.

அது மனதில் எழும் மாயைகளின் விம்பம்

எனத் தர்க்கவியலிலும்

கடவுளுக்கே சவால்விடும் தீய சக்திகள் என மதவியலிலும்,
அடிமைப்பட்டு வாழவேண்டிய தெய்வீக சக்தி என புராணங்களிலும்,
வேற்றுக்கிரக வாசிகளின் அறிவியல் சக்தி என அது பற்றிய ஆய்வுகளிலும்,
காத்துக் கருப்பு பெரும் ஆபத்து என பாமரத் தளங்களிலும்,
முறியடிக்கவே முடியாத மகா சக்தியென வசியம் செய்யும் மௌட்டீக சிந்தனைகளிலும்,
பல்வேறு விதமாக தவறாகப் புரியப்பட்டுள்ள அள்ளாஹ் படைத்த ஒரு உயிரினம்.
அள்ளாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகையில் "மேலும் ஜின்களையும் மனிதர்களையும் என்னை அடிமைப்பட்டு வணங்குவதற்காக அன்றி படைக்கவில்லை" **(சூறா தாரியாத் 56)** இங்கு இறைவன் தான்தான் ஜின்களைப் படைத்துள்ளேன் என்பதைக் கூறி அவற்றின் கடமைகளையும் குறிப்பிடுகிறான்.

"நெருப்புக் கொழுந்திலிருந்து அள்ளாஹ் ஜின்களைப் படைத்தான்" (சூறா ரஹ்மான் 15) மேலும் அள்ளாஹ் மனிதர்களை மண்ணினாலும் ஜின்களை நெருப்பினாலும் படைத்தாகவும் (சூறா அல் அஃ.ராப் 12) கூறுகிறான்.

இவ்வசனங்கள் இறைபடைப்புக்களில் ஜின் எனும் இனமும் சாதாரண ஒரு படைப்பினம்தான் எனவும் அதன் மூலத்தினையும் பற்றி குறித்துக் காட்டுகிறது.

**ஜின்களின் வகைகளும் இயல்புகளும்**

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள் "ஜின்கள் மூன்று வகைப்படுவர்,

1. இறக்கைகள் உள்ளவர்கள் இவர்கள் வானவெளியில் பறந்து திரியக் கூடியவர்கள்
2. நாய், பாம்பு, ஊர்வன போன்ற உருவங்களில் திரிபவர்கள்
3. ஆங்காங்கே தங்கியிருந்து வெவ்வேறு இடங்களுக்கு பயணம் செய்யக் கூடியவர்கள்.

**(ஆதாரம் இப்னு ஹிப்பான், ஹாக்கீம்)**

இந்த ஒவ்வொரு வகைகளிலும் இறை மறுப்பாளர்களும் (காபிர்) இறை விசுவாசிகளும் (அவாமிர்) உள்ளனர். மனிதர்களுக்கு அல்குர்ஆன் எப்படி ஒரு வழிகாட்டியோ அதேபோல்தான் ஜின் இனத்திற்கும் அது வழிகாட்டியாகவே இருக்கிறது.

மனிதர்களுக்கு வாழ்வு, திருமணம், ஆண்-பெண் வேறுபாடு குடும்பம், கல்வி, உணவுத் தேவை, மரணம், சுவர்க்கம்-நரகம் இப்படி பல இருப்பது போல ஜின் இனத்திற்கும் உள்ளன. எனினும் மனித அடிப்படை இயல்புக்கும் ஜின்களின் இயல்புகளுக்கும் சம்பூரணமான வேறுபாடுகள் உள்ளன.

அதே நேரம் இறுதித் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் ஜின் இனத்திற்கும்

சேர்த்தே நபியாக அனுப்பப்பட்டுள்ளார் எனவும் நபியவர்களை ஜின்கள் பார்த்தாகவும் அவர்களிடம் இஸ்லாத்தை கற்றுக் கொண்டதாகவும் பலநிகழ்வுகளை அள்ளாஹ் அல்குர்ஆனில் சூறத்துல் ஜின்னில் குறிப்பிட்டுக் காட்டுகிறான்.

எலும்புகள், என்பு மச்சை, கழிவு இறைச்சி, கரி போன்றவை இதன் உணவாக உள்ளன. இது எப்படி தங்களுடைய உணவுகளை எடுத்துக் கொள்கிறது என்பதை அடுத்த தொடரில் பார்ப்போம். இன்ஷாஅள்ளாஹ்.

## ஜின்களின் உணவு முறைகள்

ஜின்களும் ஒரு உயிரினம் எனும் வகையில் உண்ணல் பருகல் போன்ற செயற்பாடுகள் அவற்றிடம் காணப் படுகின்றன. அவைகளின் மூலம் நெருப்பு என்பதால் எல்லா உடலியற் கூறுகளும், செரிமான இயல்புகளும் மாறுபட்டதாகவும் தனித் தன்மை வாய்ந்ததாகவும் காணப் படுகிறது.

புகாரி மற்றும் முஸ்லிம் ஆகிய ஹதீஸ் நூல்களில் பதியப்பட்டுள்ள ஒரு செய்தி,

ஜின்கள் தங்களது உணவில் விஸ்த்தீரணம் ஏற்படுவதற்கு இறைவனிடம் பிரார்த்திக்குமாறு நபி (ஸல்) அவர்களை வேண்டினர் அதற்கு நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள். ‘‘அள்ளாஹ்வின் பெயர் சொல்லி அறுக்கப்பட்ட ஒவ்வொரு ஒவ்வொரு பிராணியின் எலும்பும் உங்களுக்கு உரியதாகும் அது உங்களின் கரங்களில் இறைச்சியை விட நிறைவானதாய் இருக்கும். ஒவ்வொரு கெட்டிச் சாணமும் உங்களுடையை கால்நடைகளுக்கு தீவனமாய் அமையும்’’

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள் எலும்புகளிலும் கெட்டிச் சாணிகளிலும் சிறுநீர் களிப்பதைத் தடுத்தார்கள் ஏனெனில் ஜின்கள் தம் பாதையில் எலும்புகள் கெட்டிச் சாணிகள் என்பவற்றைக் கடக்கும் போதெல்லாம் அதில் உணவினைப் பெற்றுக் கொள்வார்கள்.

**அறிவிப்பவர் - அபூஹுரைரா – ஆதாரம் - புகாரி**

இவற்றிலிருந்து நாம் சில விடயங்களைப் புரிந்து கொள்ளலாம்

01. ஜின்கள் உணவுப் பொருளிலிருந்து நேரடியாக தமக்குத் தேவையான சக்தியை (கலோரியை) பெற்றுக் கொள்கின்றன. நமது உடலினுள் இருக்கும் ‘‘சடைமுளைகள் எனும் அமைப்பு செய்யும் வேலையை ஜின்கள் தமது வாயினாலேயே செய்து கொள்கின்றன’’
02. ஜின்களின் இந்த சத்துக்களை உண்ணும் முறையினால் குறித்த உணவுப் பொருளின் சடத்துவ வடிவில் எந்தக் குறைகளும் ஏற்பாடாது.

இந்த நபி மொழியைப் பாருங்கள் ‘‘உங்களில் ஒருவர் உண்டாலோ அல்லது பருகினாலோ வலது கையினால் அதனைச் செய்யட்டும் ஏனெனில் ஷெய்தான் இடது கையினாலேயே உணவும் பானமும் அருந்துவான்’’ **(ஆதாரம் - முஸ்லிம்)**

உண்மையில் ஜின்களில் இரண்டு படித்தரங்கள் உள்ளன

01. நல்ல ஜின்கள் - இஸ்லாத்தை ஏற்றவர்கள் - இவர்கள் ‘‘அல் அவாமிர் என்று அழைக்கப்படுவர்
02. கெட்ட ஜின்கள் - இஸ்லாத்தை மறுத்தவர்கள் - இவர்கள் ‘‘அஷ் ஷெய்த்தான்கள் என்று அழைக்கப்படுவர்.

நாம் உற்று நோக்க வேண்டிய ஒரு விடயம் உள்ளது. பொதுவாக நல்ல ஜின்கள் அதனுடைய உணவுப் பழக்க முறைகளின்போது மனிதர்களை எந்த வகையிலும் தொந்தரவு செய்ய மாட்டார்கள். ஆனால் ஷெய்தான்கள் தங்களுடையை உணவுத்தேடலுக்கு பெரும் பாலும் மனிதர்களையே சார்ந்திருப்பார்கள்.

உணவின் எச்சசொச்சங்கள், என்பு மச்சை, அடுப்புக்கரி, புலால் வகையறாக்கள் இப்படி பல உணவுகளை அவை உட்கொள்கின்றன. சுவாரஸ்யம்

என்னவெனில், நாம் உணவை வாயினால் உண்டு பின் எமது குடல்களை அடையும் போதே சடைமுளைகள் எனும் அமைப்பினால் உணவின் சத்துக்கள் உறுஞ்சப்படுகின்றன.

ஆனால் ஜின்களோ உணவை முதல் தடவையாக உட்கொள்கின்ற போதே எமது உடலின் சடைமுளைகள் செய்கின்ற வேலையை அவற்றினுடைய வாய்களே செய்து விடுகின்றன. (சுப்ஹானள்ளாஹ்), அதனால்தான் அள்ளாஹ்வின் பெயர் சொல்லப்படாத உணவுகளை சைத்தான்கள் சாப்பிட்டாலும் உணவு அளவில் குறைவதில்லை. மாறாக அதன் சத்துக்களை இழந்து விடும் நிலை ஏற்படுகின்றது.

**பலமும் - பலவீனமும்**

அவர்களினால் நபிமார்கள் தவிர்ந்த ஏனைய மனித உருவில் உருமாறுதல், பொருட்களை சுமத்தல், நகர்த்தல், கொண்டு செல்லல், பலம் பொருந்திய வேலைகளைச் செய்தல், எமது கண்களால் அவர்களைப் பார்க்க முடியாமலும் ஆனால் அவர்களினால் எம்மைப் பார்க்கக் கூடியதாகவும் இருத்தல், மூடப்பட்ட அறைகளுக்குள்ளும் நுழைதல் இவை போன்றவை சில பலம்களாகும்.

குறைந்த அறிவு, ஆய்வுகள் கண்டுபிடிப்புக்கள் இன்மை, பயப்படுதல், மறைவான விடயங்கள் தெரியாமை, ஊகித்தறிதல் இன்மை, பெரும்பாலான தேவைகளுக்கு (அறிவு, கற்றல், உணவு, குடியிருப்பு) பெரிதும் மனிதரைச் சார்ந்திருத்தல் என்பன அவர்களின் சில பலவீனங்களுக்கு உதாரணங்களாகும்.

ஜின்கள் தனது உண்மை உருவத்தை (Origin) விட்டு வேறொரு உருவத்தில் இருக்கும் போது மிகவும் பலவீனமாக காணப்படுவர்.

மேலும் அவர்களின் உண்மை உருவம் எப்படி இருக்கும் என்று நபியவர்கள் சொல்லவில்லை. அதன் உண்மை உருவத்தை நாம் அறியமாட்டோம் என்பதே பெருமானாரின் வாய்மொழி ஆகும்.

(தொடரும்...)




### மனதளவில் தைரியமாக இருக்கும் நபர்கள் செய்யாமல் இருக்கும் 13 காரியங்கள்

இப்படி ஒரு தலைப்பில் எமி மோரன் எழுதியிருக்கும் நூலில் 13 தவறுகளை நீங்கள் செய்யாமல் இருந்தால் வாழ்வில் எதற்கும் பயப்படாமல் தைரியமாக இருக்கலாம் என்பதை அவர் கூறும் அற்புதமான நூல் இது அதிலிருந்து சில விடயங்களை உங்களுக்காக...

01. பொறாமைப் படாதீர்கள் அது உங்களை தைரியப்படுத்தும்.
02. கடந்த காலத்தைப் பற்றி அதிகம் புலம்பாமல் இருந்தால் அது உங்களை தைரியப்படுத்தும்.
03. மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுங்க அது உங்களை தைரியப்படுத்தும்.
04. உங்களால் கட்டுப்படுத்த முடியாததைப் பற்றி யோசிப்பதை விட உங்களால் எதை கட்டுப்படுத்த முடியுமோ அதைப்பற்றி அதிகம் யோசியுங்கள் அது உங்களை தைரியப்படுத்தும்.
05. உங்களைப் பார்த்து நீங்களே பாவப்பட்டுக் கொள்ளாதீங்க அது உங்களை தைரியப்படுத்தும்.

**இனும் இந்நூல் சொல்லும் பல விடயங்கள்:**

- தனிமையை அனுபவிக்கப் பழகணும் அதை ரசிக்கப் பழகணும் அப்போ தைரியம் அதிகரிக்கும்.
- உடனடி முடிவுகளை எதிர்பாரதாது பொறுமையாக இருங்கள் அது உங்களை தைரியப்படுத்தும்.
- எல்லோர்கிட்டயும் நல்ல பெயர் வாங்க நினைக்காதீர்கள் அத உங்களை தைரியப்படுத்தும்.
- முதல் தோல்விக்குப் பின் துரண்டு போகாதீர்கள் அத உங்களை தைரியப்படுத்தும்.

# நிக்காம முன்னேறு...

ஹுமைறா அல் அமீன்

விடியும் வரை பூட்டி வைக்காதே கனவை
வீட்டுக்குள் இருந்தே பார்க்கலாம் நிலவை
விதி எப்போதும் நீட்டி வைக்காது இரவை
விளக்கிடம் மட்டுமே தேடாதே ஒளிர்வை

சிந்தனைகளுக்காய் திறந்துவிடு மனக்கதவை
சின்னச் சின்னதாய் சேமித்துவை இனிய நினைவை
சிறப்பாக செயலாற்றினால் தோன்றும் நிறைவை
சிதைந்திடாமல் காக்க வளர்த்திடு மனத்துணிவை

நலிந்தோரிடம் காட்டு நீ கனிவை
நாளை நீ காண மாட்டாய் சரிவை
வலிந்தோரிடம் பகிர்ந்திடு நீ பரிவை
உனக்காக உருவாக்கிக் கொள் நல்ல உறவை

காண்பதிலெல்லாம் தேடாதே குறையை
கனிவிருந்தால் பெறுவாய் மன நிறைவை
நல்லவர்களோடு செய்து கொள்ளாதே முறிவை
நன்றியுடன் வளர்த்திடு நட்பெனும் உணர்வை.

## கண்ணே கலை மானே!

விலை பல கொடுத்து
பல கறி சமைத்து
பரிமாறத் தேவையில்லை கண்ணே!

சுடு சாதத்துடன்
தேங்காய் கடலையுடன்
சிறுவெங்காயம் சேர்த்தரைத்த
துவையல் ஒன்றே போதும் கண்ணே!

வேண்டாமென்றாலும்
பப்படத்தையும் மோர் மிளகாயையும்
வாழையிலையில் பரிமாறி
நான் உண்பதை கலையென ரசித்து
பார்க்கும் கண்ணே!

உன்னைவிட பொருத்தமெனக்கு
வேறு யாருமில்லை இவ்வுலகில் பெண்ணே!

**எம்.ஐ.எம். அன்வர் சாதாத்**

## தாகிக்கும் தருணம்

திரண்ட கருமுகில்கள்
வறண்ட வாசல்களை
வானத்தின் வழியாக
நீர்தெளித்த வேளையிலே

தென்னொலை கிடுகணிந்த
பழங்கால கூரையது
ஓரசார பாதைகளால்
சாரல்களாய் ஈரம்தர

திண்ணைக்குள் தண்ணி
வாழ்விடத்தை எண்ணி
சட்டி பானையாகி
மிதக்கிறதே வாழ்க்கை

முல்லைகாரன் அல்லவா?
தொண்டுதொட்ட ஏடுதான்
வானம் கொஞ்சம் வெட்டார
இடுப்பு வாரும் பசியாறும்...

**ஒலுவில் யூ.ஹிஸாம்.**

## வீழ்த்திடாதே...வாழ்த்திட வா...

– மக்கொனையூராள் –

வளைக்கரம் வளைக்கிறாய்
விலங்கிட விளைகிறாய்
முளைத்திடும் இறகுகள்
தறித்திட நினைக்கிறாய்
மலையெனச் சுமைகளைச்
சுமத்திடத் துணிகிறாய்
பிழையிது என்கிறேன்
நீ இதை உணருவாய்

அகப்பையும் சட்டியும்
ஏந்திய பெண்ணவள்
அகத்திலும் ஆயிரம்
ஆளுமை வண்ணங்கள்
அவளிடம் பலவுண்டு
பகர்ந்திட எண்ணங்கள்
அவனியில் எழுப்புவாள்
அடையாளச் சின்னங்கள்

வீட்டுக்குள் முடங்கிட வேண்டுதல் நியாயமா?
ஏடுகள் மட்டுமே பெண்ணியம் பேசுமா?
பூட்டுகள் போட்டவள் ஆற்றல்கள் அடைப்பதா?
தீட்டுங்கள் புத்தியை பேதமை தீருமா?



# ஹைக்கூவில் இயற்கை

கவிஞர் Dr. ஜலீலா முஸம்மில்



சமகாலத்தில் ஹைக்கூ கவிதைகள் மற்றைய கவிதை வடிவங்களை விட மிகவும் பரபரப்பாக வளர்ந்து வருவதை நாம் காணலாம். மரபோடும் புதுக்கவிதையோடும் கைக்குலுக்கிகொண்டு இருந்த எம்மைக் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் மொழிபெயர்த்த ஹைக்கூ கவிதைகள் ஆச்சரியங்களை அள்ளி இறைத்துத் திரும்பிப் பார்க்க வைத்தன என்றால் அது மிகை இல்லை.

மூன்று வரிச் சூத்திரம்போல் சுருக்கமாக வாமண வடிவத்தில் இருந்தாலும் அர்த்தங்கள் பல சூல்கொண்ட கவிதையாக இருப்பதே இதற்கான மூல காரணமாகும்.

ஹைக்கூ இன்றைய தினங்களில் ஒரு சர்வதேசக் கவிதை நடையாக இருக்கிறது. ஆங்கிலம், லத்தீன், பிரஞ்சு நாடுகளுக்கும் சென்று தமிழ்வரை பரவிய இந்தக் கவிதைப்பாணி ஆரம்பித்தது முதலில் ஜப்பானிய மொழியில் தான்.

ஹைக்கூ ஜப்பானிய மொழியின் சொத்து. அன்னைத் தமிழுக்கு வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தம் என்பதைப் போல ஜப்பானிய மொழிக்கு ஹைக்கூவும் அதைச் சார்ந்த வகைகளும் உரித்தான சொத்தாகின்றன.

மூன்று அடிகளால் எழுதப்படும் ஹைக்கூ கவிதைகள் எட்டு வகையில் காணப்படுகின்றன. சாதாரணமாக புதுக்கவிதைகளில் காணப்படும் எந்த ஒரு தன்மையும் ஹைக்கூ கவிதைகளில் இருப்பதில்லை. ஹைக்கூ கவிதையானது ஒரு பாடுபொருளைக் கொண்டு அதன் உண்மைத் தன்மையையும் அதில் பொதிந்திருக்கும் படிப்பினையையும் வாசகன் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எளிமையாக அமைக்கப்படுகிறது.

ஹைக்கூ கவிதைகளில் கற்பனை, உவமை, உருவம், உணர்ச்சி, தன்மைப் பாங்கு, இருண்மை, நுண்பொருண்மை, கவிஞனின் சொந்தக் கருத்து, பிரச்சாரம் போன்ற எதுவுமே இருப்பதில்லை.

எளிமையாகக் கூறுவதும், சொல்லுவதைக் காட்டிலும் சொல்லாமல் விடுவதும் சிற்றுயிர்களைச் சிறப்பித்துப் பாடுவதும், ஈற்றடித் திருப்பமும் சிறியதோர் நகைச்சுவையுணர்வை எழுப்புவதும், இயற்கையைப் பாடுவதுடன் இயற்கையை மனித உணர்வுகளோடு இணைத்துப் பாடுவதும்,
உள்ளத்தின் ஆழ்ந்த உணர்வுகளையும் மென்மையான சோகத்தையும் கலந்து இழையோடுவதாக அமைவதும்,
பிற உயிர்களை மதித்துப் பாடுவதும் ஹைக்கூ கவிதைகளுக்கான இலக்கணங்களாகும்.

ஹைக்கூ ஒரு இயற்கைக் காட்சியைக் காட்டுகிறது. காட்சி பற்றி அது சொல்வதில்லை. அதன் விளைவான உணர்ச்சிகளையுமது சொல்வதில்லை, படிப்பவரின் கற்பனைக்கே அவைகளை விட்டுவிடுகின்றமை ஹைக்கூ கவிதைகளுக்கான சிறப்பம்சமாகக் காணப்படுகிறது.

ஹைக்கூ கவிதைகளில் பல்வேறு உத்திகள் காணப்படுகின்றன. (படிமம், குறியீடு, தொன்மம், அங்கதம், முரண், விடுகதை, பழமொழி, வினா விடை, உருவகம், உவமை)
அவ்வாறான உத்திகளில் படிம உத்தியே பெரும்பாலான கவிஞர்களால் கையாளப்பட்டு எழுதப்படுகின்றது. ஒரு சில சொற்களில் ஒரு காட்சியை படிப்போரின் மனக்கண் முன் தோன்றச் செய்து அதன் மூலம் ஒரு கருத்தையும் வெளிப்படச் செய்தால் அதுவே படிமம் எனப்படும். படிம உத்தியானது ஐம்புல உணர்ச்சியின் வெளிப்பாடாக அமைகிறது. வருணித்து எழுதுவதாகவும் இருக்கிறது.

வாசகனைப் பல்வேறு கோணங்களில் சிந்திக்க வைப்பதாகவும் இருக்கிறது. இம்முறையில் நாம் நினைக்கின்ற கருப்பொருளை வேறு ஒன்றின் மீது ஏற்றிப்பாடுவதுதான். அவை மண், வானம், பூமி, பறவை, மரம் எவ்வாறான பொருளாகவும் இயற்கையில் விரிந்து காணப்படும் ஏதாவது ஒன்றாகவும் இருக்க முடியும்.

இப் படிமக் குறியீடுகளை குறிப்பிட்ட வரையறைக்குள் வகுத்துக் கொண்டு சூழலுக்கும் நிகழ்வுக்கும் ஏற்ப ஹைக்கூ அமைப்பது எளிமையாகவும் அனைவரையும் கவரக்கூடிய வகையிலும் இருக்கும்.
சிறந்த சொல்லாட்சியும், அழகியப் படிமத் தொடர்ச்சியும் ஹைக்கூவிற்கு அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது.

அப்துல் ரகுமான் நூலின்வழி நாம் காணக் கிடைத்த ஹைக்கூக்கள் இவை;

**இந்த அழகிய கிண்ணத்தில்**
**பூக்களை அடுக்கி வைப்போம்**
**அரிசிதான் இல்லையே** (பாஷோ)

**என் வீடு எரிந்து போனதால்**
**நன்றாகப் பார்க்க முடிகிறது**
**உதிக்கும் நிலாவை** (மசாஹிடே)

சமைப்பதற்கு அரிசி இல்லாத வறுமைச் சூழலிலும் வெறும் கிண்ணத்தில் பூக்களை அடுக்கி அழகு பார்க்கும் பாஷோவின் அழகுணர்ச்சி உண்மையில் யாவருக்கும் வியப்பைத் தரும் விடயமே.

இருப்பிடமே இல்லாமல் இருக்கும் பொழுது அதன் குறையிலும் நிலவை ரசித்துக் கொண்டிருக்கும் கவிஞனின் ஒப்புதலை நாம் ரசிக்காமல் இருக்க முடியாது.

நிறையச் சொற்களை எழுதாமல், சொல்லாமற் சொல்லும் பாணி புதுமை படைப்பதை நாம் காணலாம். எல்லாவற்றையும் சொல்லிவிடாமல் வாசகனையும் படைப்பில் சிந்திக்க வைக்கும் பாங்கும் யாவரையும் கவரக்கூடியதாக இருக்கிறது.

இயற்கையைப் பற்றி ஹைக்கூ கவிதை எழுதுவதில் ஜப்பானிய கவிஞர்களுக்குச் சற்றும் சளைத்தவர்கள் அல்ல என சவால் விடும் வண்ணம் ஹைக்கூ வடித்து வருகிறார்கள் தற்போதைய தமிழ்க்கவிஞர்கள். இயற்கையை உற்று நோக்கி, ரசித்து, ருசித்து, ஒன்றி ஹைக்கூ படைப்பதிலும் தமிழ் கவிஞர்கள் வல்லவர்களாகத் திகழ்கிறார்கள்.

**நகராத சூரியன்**
**கிழக்கிலும் மேற்கிலும்**
**நகர்த்தும் பூமி !** (கவிஞர் வீ .தங்கராஜ்)

**கோயிலும் பள்ளிவாசலும்**
**அருகருகே**
**பள்ளிப் பாடப் புத்தகம்**

**உனை எப்படிக் காப்பேன்?**
**மன்னிப்பாய் பூச்சியே**
**பசியோடு பல்லி**
(ந.பச்சைபாலன்)

பள்ளிப்பாடப் புத்தகத்தில் மாத்திரமே கோவிலும் பள்ளிவாசலும் அருகருகே காணப்படுவதாக ஒரு எள்ளலோடு இந்தக் கவிஞர் குறிப்பிட்டு ஒரு ஆழமான செய்தியை நமக்கு இதன் மூலம் தருகிறார் என்பதைக் கவனியுங்கள்.

**வைகறையில் சூரியனை**
**பங்கு போட்டன**
**தென்னங்கீற்றுகள்.**
(கவிச்சுடர் கல்யாணசுந்தரம்)

அன்றாடம் கண்ணில்படும் காட்சிகள் கவிஞரின் வித்தியாசமான ஹைக்கூ பார்வையில் நம்மை இனிமையாக பிரமிப்புக்குள்ளாக்குவதை அவருடைய கவிதையில் நாம் காணலாம்.

**நதிக்கரையைச்**
**சுமந்து செல்கிறது**
**மணல் வண்டி.** (ஷர்ஜிலா பர்வீன்)

கவிஞரின் கவிதை வரிகளில் இயற்கையின் அழகான படிமங்கள் துள்ளி விளையாடுவதைக் காணலாம். மணல் கொள்ளையைச் சாடி இவர் எழுதியிருக்கும் கவிதை மிகவும் அற்புதம். நதிக்கரை வேறு ஒரு இடத்திற்கு செல்வதாக வாசகர்களை வியப்புக்குள்ளாக்கி ஈற்றடியில் மணல் கொள்ளையைச் சாடி இருப்பதில் அவரது அழகிய உத்தியைக் காணலாம்.

**ரோஜாப்பூக்கள்**
**சிதறியிருந்த புடைவையில்**
**அம்மாவின் வாசம்**
(Dr ஜலீலா முஸம்மில்)

மேலும் சில உதாரணங்களாக

**தலைகீழாய்த் தொங்கும்**
**கிளிகளின் மூக்கு**
**முந்திரிக் காடு**

அனலேந்தி (அருவி ஹைக்கூ வாசல்)

**கூடை நிறையப் பூக்கள்**
**எதை ரசிப்பது ?**
**பேசாமல் கூடையாக்கிவிட்டேன்**

ம.ரமேஷ் (அருவி ஹைக்கூ வாசல் )

**யாருமற்ற மரத்தடி**
**கயிற்றுக் கட்டிலில்**
**படுத்துறங்கும் நிழல்**

காவனூர் ந.சீனிவாசன்(அருவி ஹைக்கூ வாசல் )

**எழுந்து போன**
**தடம் தெரியவில்லை**
**கிணற்றில் விழுந்த நிலா**

அ . முத்து விஜயன்
கல்பாக்கம் (அருவி ஹைக்கூ வாசல் )

**அசைந்தாடுகிறது**
**பறவை பறந்த பின்பும்**
**நாணல்**

த.வே.விக்ரமாதித்தன், செய்யாறு
(அருவி ஹைக்கூ வாசல் )

**வேர்களின் உருவம்**
**கிளைகளில்**
**இலையுதிர் காலம்**

சொ.சரவணபவன், திமிரி
(அருவி ஹைக்கூ வாசல் )

**நீரின் அழகில்**
**முகம் பார்க்கும் கொக்கு**
**ஓடிக்கொண்டிருக்கும் நதி**

பாரதி வசந்தன், புதுச்சேரி
(அருவி ஹைக்கூ வாசல் )

**கடற்கரை ஓரம்**
**காதல் இசை**
**ஆடும் படகு**

கா.அமீர்ஜான் ,திருநின்றவூர்
(அருவி ஹைக்கூ வாசல்

அதன் இயல்பானது ஒவ்வொரு கவிஞனையும் போதைக்குள் உள்ளாக்கி புதிய கவிதானுபவத்தில் மூழ்கியெழச் செய்கிறது என்றால் அது மிகை இல்லை. அதையே படையலாக்கி வாசகருக்குப் பந்தி வைப்பதில் ஹைக்கூ கவிஞன் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறான். இயற்கையை ரசிப்போம். எண்ணிலா ஹைக்கூக்களை எழுதிக் குவிப்போம் வாருங்கள் கவிஞர்களே...

**பேசிக் கொண்டே இருந்தால் உன்னைப் பற்றி மற்றவர்கள் அறிந்து கொள்வார்கள்...!**
**மௌனமாக இருந்தால் மற்றவர்களைப் பற்றி நீ அறிந்து கொள்வாய்...!**




வறட்டுக் கௌரவம் - அது
இறைவனை மறந்த
பெருமையின் அடையாளம்
தலைமுறை அழிக்கும் தலைக்கணம்
கொண்ட முரட்டு சுபாவம்

இறுகிய இதயத்தின்
இருண்ட குணம் - அது
தீமைகள் நிறைந்த
அகங்காரச் செயல்

ஆணவம் தாங்கிய
தீய எண்ணம் - அது
தன்னிலை மறந்த
அழுக்கான வண்ணம்

மடமை தலக்கேறிய
ஆபத்தின் சின்னம்
மனித மனங்களை
வதைத்திடும் என்பது திண்ணம்

மாசுப்பட்ட உள்ளத்தில்
தூசுதட்டி ஈமானை செப்பனிடு
காசு பணம் உயர்வில்லை
உள்ளத்தை தூய்மையாக்கு

நல்ல சிந்தனையை
மாலையாக அணி
வல்ல ரகுமானின்
அன்புக்காய் அடிபணி

கௌரவம் உனக்கு
மாலையாகி அழகாகும் அக்கணமே
மதிப்பும் மரியாதையும்
உன் வாசல் தேடி வரும்.




பைஸானா பைறூஸ் – புத்தளம்

சரியா பிழையா என்றெல்லாம் தெரியாது ..
கோபம் வந்தால் கத்தி விடுவேன்
கோபங்கள் நியாயமற்றதாயும் இராது ..
வெறுக்கும் விடயம் அரங்கேறும் போது
கொதித்துப் போவேன்

நான் அடுத்தவன் பிரச்சினைகளை யாசிப்பதில்லை ..
அடுத்தவர்களின் விடயத்தில்
மூக்கை நுழைவிப்பதை விட
அருவருப்பானவை உண்டோ !?

என் விடயத்தில் எவர் வந்தாலும்
அதை நான் ஏற்பதே இல்லை ..
அனுமதியில்லாமல் உள்நுழைந்தால்
முகத்தில் அறைந்தாற் போல் கதவை சாத்தி
விடுவேன்

நான் என்ற சுயத்தைத் தாண்டி
பொது நலன் எனும் பெயரில்
மாயாஜாலம் காட்டித் திரிவதுமில்லை ..

சுய கௌரவம் எப்போதும் மேலானது ..
சுயமிழந்து வாழ்வதை விட
குளத்தில் குதித்து மூழ்கி விடலாம்

நான் என்ற தனித்துவத்தில்
நானாக வாழ்வதைத்தான் நான் விரும்புகிறேன்.

# ஜமீலின் இரு கவிதைகள்

## காடென வளரும் நினைவுகள்

நினைவுப் பரிசாக மரமொன்றை
வழங்கி விட்டு செல்கிறான்
பால்ய கால சினேகிதன்

அது தளிர்த்து கிளைத்து
எனது மனசின் நிலத்தில்
ஆழ வேரூன்றும்

முதுமையடைந்த பின்பும்
அவன் நினைவுகள் அடர்ந்து வளரும்

இனி நேசத்தின் நினைவுகள்
சடைத்து வளர்ந்து உதிர்ந்து
எனக்குள் வளர்ந்தவாறே இருக்கும்

இப்போது நினைவுகளின்
அடவியென நிற்கிறேன் நான்

## வலையில் சிக்கும் மனம்

கூட்டினுள் கூடு நெய்து வாழும்
பொட்டுப் பூச்சிகளை
என்ன செய்வதென்று புரியவில்லை

வியந்து ரசிக்கும் ஓவியமென
கூடுகள் நெய்யப்பட்டிருந்தாலும்
என் கூட்டின் செப்பத்தை
பூச்சிகள் சிதைக்காமலில்லை

கூட்டின் சரடுகளை சோந்தெறியும்
ஒவ்வொரு முறையும்
பூச்சிகளை தப்பிக்க விடுகிறேன்

தப்பிக்க விட்ட பூச்சிகள்
மறுகாவும் மறுகாவும்
கூடு பின்னுதலில் வலையில் சிக்கி
தொலைகிறதென் மனசு

கூடுகளை உடைக்கும் போதெல்லாம்
குஞ்சுகள் சகிதம் சிதறுண்டோடும்
பொட்டுப் பூச்சிகளின் பதகளிப்பு
என்னை உடைக்காமலா போகும்

வாழ்வை வரையும் பூச்சிகளை
தப்பிக்க விடுவதைத் தவிர வேறென்ன
செய்யலாமென
கருதுகிறீர்கள்



# நிஸ்மியா நிஸாம் – பேருவளை




வெளிச்சம் தேடியவளை
விட்டிலாக்கியது விதி!
வலிச்சுமைப் பயணத்தில்
பழிச்சுமை ஏற்றிட......
விபரீதம் சுமக்கும்
விசித்திரப் பிறவியல்ல!
முடிந்தால் இன்னொரு
தடவை ஒளிகொடுங்கள்!

ஆறுதலும் தேவையில்லை.....
அவமதித்துப் போகாதீர்கள்!
அரவணைக்கவும் வேண்டாம்
அசிங்கப் படுத்தாதீர்கள்!
அறுந்துபோன உறவின்
கனவுகள் துரத்தாதிருக்க....
கண்ணீரில் கரையும்
விடியாத இரவுகளை
ஏக்கத்துடன் கடக்கிறாள்!

கணவனைத் தானிழந்தாள்
சுதந்திரத்தை அல்ல....!
துணையிழந்தால் அங்கே
உரிமைகளும் இறந்துவிடாது!
புரிந்து கொள்ளுங்கள்!
தரங்கெட்ட பார்வையில்
கைம்பெண்ணை நோக்குவது
நாகரீகத்தின் பார்வையல்ல!
அறிவீனத்தின் தற்குறி!

சம்பிரதாயப் போர்வையில்
சடங்கினைப் புகுத்திடும்
அஞ்சான வேள்விகளில்
சமூகமே சுருண்டுவிடாதே!
ஆயிரம் கேள்விகள்
பொங்க வெளிவரும்
பெருமூச்சு உங்களை
ஓர்நாள் எரித்திடும்!
வழிவிடுங்கள் வாழவிடுங்கள் அவர்களை..!
வாழ்வு கொடுங்கள் அவர்களுக்கும்...!!




என் கரம்
என் வசம் இருந்தது
அது என்னுடன் வசித்தது .

என் பூஞ்சொற்களை
புன்னகையோடு ஏற்றது .

தாய் வீட்டுக் கதவை தட்டியது .

பூப்பறித்தது
புல்லாங்குழல் எடுத்துத் தந்தது .

என் காதல் தேவதைக்கொரு
காந்தக் கவிதை எழுதி
கண் சிமிட்டியது.

அவள் மெல்லிடைப் பற்றி
மேகங்களில் நடந்தது.

நிலா நாளில்
என் கண்மணியோடு என்னை
இருளில் தள்ளிச் சிரித்தது .

என் தங்கங்களுக்கு
தயிர்ச்சாதம் பிசைந்தூட்டியது .

என் செல்லங்கள் கண்ணுறங்க
முத்தம் வைக்க
நெற்றி எடுத்துத் தந்தது.

குளிர் காலையில்
மழைச் சாலையில்
குடை பிடித்து தலை காத்தது.

என் வகுப்பறை வெள்ளைப்
பூக்களோடு
வெண்கட்டி வாயால் பேசியது.

அந்தி கருக்கலில்
மின்னும் தருக்களில்
ஆறேழு பூப்பறித்து வந்து
என் குடிலை அலங்கரித்தது.

மின் கம்பிகளில் திரியும்
அணில் குஞ்சு பிடிக்க அவாவிற்று.
பாய்ந்தோடிய முயல் தேடி
பற்றைக் காட்டுக்குள் உலா வந்தது.

ஒரு நாள்
என் கரம்
எதுவும் பேசவில்லை .
மௌனித்துறங்கி
மரித்துப் போனது .

நான் பிணமானேன்.

## இது தான் உலகம்

கிண்ணியா
ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான்

பெருமையாய் பேசுவோரைப் போற்றும்–
இவ்வுலகம்
பொறுமையாய் வாழ்வோரைத் தூற்றும்
செருக்குடன் நடப்போரை மதிக்கும்–வையம்
சாந்தமாய் பழகுவோரை மிதிக்கும்
அலட்சியம் செய்வோரைத் துதிக்கும்
அருமையான குணத்தினரை ஒதுக்கும்

தன்னலமாய் இயங்குவோரை வடிக்கும்
தட்டிக் கொடுப்போரைத் தடுக்கும்– சமூகம்
வறுமையாய் வாழ்வோரை நிராகரிக்கும
வட்டிக்கு எடுப்போரை ஆதரிக்கும்
.
கெட்டித் தனமுள்ளோரைத் தாழ்த்தும்
குட்டிக் கொடுப்போரை வாழ்த்தும்
அமைதியாய் வாழ்வோரை அவமதிக்கும்
அவதூறு பேசுவோரை வரவேற்கும்
தன்னடக்க மானோரைத் தாழ்த்தும்
தவறு செய்வோரை உயர்த்தும்
கன்னியமாய் வாழ்வோரை இகழும்
கேவலமாய் வாழ்வோரைப் புகழும்




**வா**சலில் பைசிக்கிள் மணிச் சத்தம் கேட்கிறது. ஆய்ந்து பிரித்துக் கொண்டிருந்த முருங்கையிலைத் தட்டை அப்படியே விட்டுவிட்டு வாசலுக்கு வருகிறாள் ஹிதாயா. முன்பின் அறிமுகமில்லாத நபர் ஒருவர்,

“யாரத் தேடுறீங்க காக்கா?”

“இஞ்ச ஹிதாயா என்கிறது?”

“நாந்தான், என்னாக்கா?”

“காழியார் ஒங்கள வரட்டாம். ஒங்கட ஊட்டுக்காரரு தாபரிப்புக் காசி கட்டியிரிக்காராம். இப்பவே வந்து வேங்கிட்டுப் போகட்டாம்...”

தகவல் சொன்னவர் பறந்து போக, மகிழ்ச்சியில் திணறிப் போகிறாள் ஹிதாயா. வானிலிருந்து யாரோ அவள் தலையில் பூக்கள் தூவுவதான பிரம்மை. விடியலொன்று மனதில் புலரவாரம்பித்தது.

நீண்டகாலமாக அவள் முன்னாள் கணவன் தாபரிப்புப் பணம் கட்டாமல் ஒரு லட்சத்திற்கு மேல் நிலுவையாகக் கிடந்தது. ஆனால் கடந்த மாதம் அவன் புதிய ஹீரோ ஹொண்டா வாங்கி புதுமனைவியை ஏற்றிக் கொண்டு திரிகிறான்.

ஹிதாயாவிற்கு ஏழு வயதில் இரண்டாம் தரம் படிக்கும் ஒரு பையனும் மூன்று வயதுப் பெண் குழந்தையும் இருக்கின்றனர். இளையவள் கருவிலிருந்தபோதே அவனுடன் வெளிநாட்டில் பணிபுரிந்த ஒரு பெண்மேல் மையல் கொண்டு அவளைக் கைப்பிடித்தான். ஹிதாயா கொப்பில்லாக் கொடியானாள்.

பத்தொன்பது வயதேயான ஹிதாயா சிறுவயதிலேயே தாயை இழந்தவள். வாப்பா வேறுமணம் செய்யாது இவளுக்காகவே வாழ்ந்து இவளது கையறு நிலையால் படுக்கையில் வீழ்ந்தார். இப்படியொரு உத்தமத் தந்தை வாழ்கின்ற பூமியில்தான் இவளது கணவன் போன்ற துரோகிகளும் வாழ்கிறார்களென்பதை நினைத்துச் சங்கடப்பட்டாள்.

காழிக்கோட்டிற்கும் வீட்டிற்குமிடையில் அலைவதே அவளுக்கு தொழிலாயிற்று. சில மாதங்கள் தாபரிப்புப் பணம் கட்டுவதும் பல மாதங்கள் இழுத்தடிப்பதும் வழக்கமாயிற்று. சிலவேளை அவன்கட்டும் பணத்தை காழியார் தன் தேவைக்கு எடுத்துக் கொண்டு அவன் கட்டவில்லை என்று காரணம் காட்டி அலைப்பதும் ஹிதாயாவுக்குத் தெரியும்.

காழியாரின் மனைவிக்கு துணிதுவைப்பது, நெல் அவிப்பது, வீடுவாசல் பெருக்குவது, சமையலில் உதவுவது என இலவசமாக தொண்டாற்று வேலைகள் செய்வதில், அவளது பொழுதுகள் வீணாகக் கரைந்தன. காழியார் வீட்டிற்கு வேகமாக நடந்துபோக, சுமார் ஐம்பது நிமிடங்கள் தேவை. ஆட்டோவில் போக வசதியுமில்லை.

அக்கம் பக்கத்தில் கடன் பட்டு வயிற்றுப்பாட்டை நகர்த்தியும், ஒரு கட்டத்தில் நகராமல் நின்று விட்டது. பெரும்பாலும் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்த அக்கம் பக்கத்தாருக்கும், இவளுக்குதவ வழியுமில்லை. பெற்ற கடன்களை திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில், நெல் குற்றும் ஆலையொன்றிற்கு போய் தவிடு புடைத்து, அதிலிருந்து வரும் குறுநெல் அரிசியை ஜீவனோபாயமாக்கிக் கொண்டாள்.

வீட்டிலே அந்தக் குறுநெல் அரிசி கொஞ்சம் கிடந்தது. அதைப் பொங்கி, முருங்கையிலைச் சொதியும் வைக்கத் தயாராகிக் கொண்டிருந்தாள். அந்தப் பணியை அப்படியே நிறுத்தி விட்டு, வாப்பாவிடம் சொல்லிக் கொண்டு புறப்படத் தயாரானாள்.

“புள்ள பசியோட வெருவான். சோத்த கறிய ஆக்கிட்டு போவன் மகள்....”

“இல்ல வாப்பா...எவ்வளவோ காலத்துக்குப் பொறகு எம்புள்ளயள் இண்டைக்கி புரியாணி தின்னட்டுமே…வாற வழியில வாங்கியாறன்”

“காசு கெடைக்கிம் எண்டு நம்பிப் போறாய் புள்ள...எனக்கென்னமோ சரியாப் படல்ல....”

“இல்ல வாப்பா அவன் காச கட்டியிருக்கானாம். கெடைக்கும், காழியாருதான் வெரச் செல்லி இருக்காரு....”

“சரிபுள்ள அல்லாஹ்ட காவலாப் போய் வா”

“சரி வாப்பா....வந்து மொதல் வேலயா எல்லார்ட கடனையும் அடைச்சிரணும். மகன் வருவான் பார்த்துக்கங்க”

“எல்லாம் பார்த்துக்குவன் போய் வா புள்ள”

வேகாவெயிலில் நடந்து காழியார் வீட்டையடைந்தாள். மதியம் ஒரு மணியை அண்மிக் கொண்டிருந்தது. காழியார் மனைவிதான் வரவேற்றாள்.

“வா ஹிதாயா வந்திட்டியா. நல்ல வேள வந்த...பச்சரிசி ஊளகப் போட்ட...இடிக்க வாறண்ட பொம்புள வெரல்ல. ஒழுப்பம் ஒரல்ல இடிச்சித் தந்திரு...”

திட்டமிட்டுக் காய் நகர்த்தினாள் காழியாரின் மனைவி. வேறு வழியின்றி அவள் இடிக்கவாரம்பித்தபோது காழியார் வெளியே கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டு வந்தார்.

“ஆ...ஹிதாயாவா... ? இன்னா இவடத்த கொஞ்சம் பெய்த்துக்கு வாறன் இருந்துக்க புள்ள” என்றவாறு வெளியிறங்கினார். அவள் மாவிடித்து முடிக்கும் தறுவாயில் வந்து சேர்ந்தார்.

“ஹிதாயா ஒருமிக்க மாவ வறுப்பமா? காழியாரின் மனைவி அடுத்த காயை நகர்த்த ஆயத்தமானாள்.

“இல்ல ராத்தா. ரெண்டர மணியாவப் போகுது. எம்புள்ளயள் பசியோட துடிச்சிட்டுக் கெடக்குங்கள். காழியார்கிட்ட காச வாங்கி புரியாணி வாங்கிட்டுப் போகணும்...”

“அல்லாஹ்வே...ஒன்ன வெறுங்கையோட அனுப்ப வேண்டியிரிக்கே புள்ள...பேங்குக்குத்தான் போய் வாறன். ஒன்ட செக் மாறி வரல்லியாம்....நாளைக்கி எடுப்பம் என்ன...நாளைக்கி கட்டாயம் தருவன்....”

அவளுக்குத் தலை சுழன்றது. பசியால் துடிக்கும் குழந்தைகளின் அழுகுரல் அவள் காதில் ரீங்கரித்தது கண்கள் நீர்வார்க்கத் தயாராகின. அப்படியே தொப்பென உட்கார்ந்தாள்.

“ஒண்டும் நெனச்சிக்காத புள்ள..எண்ட கையிலயும் வேற காசில்ல. பத்தாயிரம் கட்டியிரிக்காரு நாளைக்கு வா...”
இன்னொரு முறை தலை சுழன்றது.

“என்ன காழியார் செல்றீங்க..? லட்சத்துக்கு மேல கெடக்கல்லவா...? ஐம்பதாயிரம் கட்டப்போறதா எங்கட மாமாட்ட சொல்லியுமிருக்காரு. இப்பென்ன பத்தாயிரம்மெங்கிற?”

“அவனால அவ்வளவுதான் ஏலுமாம். ஆம்புளல்லவா? கறாரா புடுங்கினா இதுவும் கட்டமாட்டான். நான் இனி மாசாமாசம் வாங்கித் தாறன் பயப்புடாத போய் வா”

எழும்போதே காழியாரின் மனைவி வேண்டுகோள் ஒன்றை விடுத்தாள்,

“ஹிதாயா நாளைக்கி நேரத்தோட வா. மாவ பிரிஜ்ல வெய்க்கன். நாளைக்கி வறுப்பம். இப்ப போய் புள்ளகள்ட அலுவலப் பாரு. நீயும் பாவம்”

வேகமாக வெளியே வந்தாள். அவளையறியாமலே விசும்பினாள். ஒழுங்கைக்குள் நின்று கண்களைத் துடைத்தாள். அவள் தலையில் நெருப்புக் கங்கில்களை யாரோ தூவினார்கள்.

கேற்றடியில் நின்ற காழியாரின் பக்கத்து வீட்டுக்காறி ஹிதாயாவின் கையை பிடித்து உள்ளே இழுத்துக் கொண்டு போனாள். குடிக்க குளிர்நீர் கொடுத்து அவளை ஆசுவாசப்படுத்தினாள். அவள் கேட்காமலேயே தனது சோகக் கதையை கொட்டித் தீர்த்தாள் ஹிதாயா. அவள் வற்புறுத்தி சாப்பிடக் கொடுத்தாள்.

புறப்பட்டவளிடம் மூடப்பட்ட பிளாத்திக்கு வாளியொன்றைக் கொடுத்தாள்.

“ஹிதாயா இதில சாப்பாடு இரிக்கி. புள்ளைகளுக்கு கொண்டு குடுங்க. பசியோட கெடக்குங்கள்…”

“இல்ல ராத்தா..உங்களுக்கு கஷ்ரம்..இந்த ஆதரிப்பே பெரிசி…”

“கனக்கக் கதைக்காம கொண்டுபோ ஹிதாயா. புள்ளயள் பசியோட கெடக்க நீங்க இஞ்ச சாப்பிட்டது மனச அரிச்சிட்டேயிருக்கும். ஒடம்போட ஒட்டாது. நான் இரவைக்கிம் சேர்த்துதான் சமைச்ச. அவரு பகல் சாப்பாட்டுக்கும் வரல்ல.

இப்ப எனக்கிட்ட தர ஐநூறு ரூபாதானிரிக்கி இத வாங்கிக்கிங்க…”

“சாப்பாட்ட எடுக்கன் காசு வேணா ராத்தா. எனக்கி எரந்து பழக்கமில்ல…”

“ஏன் அப்பிடி. நெனைக்காய்? நீ கேட்டா வாங்கினாய்….விருப்பமில்லெண்டா இத கடனா வச்சிக்க. முடிஞ்சா திருப்பித் தா”

வற்புறுத்தி அவள் கைகளில் திணித்து வழியில் வந்த ஆட்டோவை மறித்துப்பேசி ஆட்டோவுக்கும் காசு கொடுத்து ஏற்றிவிட்டாள்.

“ராத்தா…” நா தழுதழுத்தாள் ஹிதாயா..

நீ நடந்துபோய் சேர ஒருமணித்தியாலமாகும். புள்ளயள் பசி பொறுக்காது. அல்லாஹ்ட காவலர் போய்சேரு” என வழியனுப்பி வைத்தாள்.

ஹிதாயாவுக்கு இதுதான் முதல் ஆட்டோப்பயணம். அவள் மனதில் காழியாரும் மனைவியும் அடுத்த வீட்டுப் பெண்ணும் மாறிமாறி சதிராடினர். அவள் தந்தையும் கைவிட்டுப்போன கணவனும் இன்னொரு புறம் சதிராடினர்.

முதல் நிறுவையில் அடுத்தவீட்டுப் பெண் தராசில் கதிக்க இரண்டாம் நிறுவையில் அவள் தந்தை கதிக்க பத்தொன்பது வயதேயான ஹிதாயாவுக்கு இப்போதுதான் உலகம் புரியவாரம்பித்தது.

நாளைக்கு மாவறுக்க வைப்பதற்காக இன்று காசு தரமறுத்த சுயநலத்தை எண்ணி மனம் புழுங்கி காழியாரை திட்டித் தீர்த்தாள்.

இன்று முதன்முதலான ஆட்டோப்பயணம், இனி அவளது வாழ்க்கைப் பயணத்தை வகுத்துக் கொள்வதற்காக சிந்திக்க வைத்திருக்கிறது. காழியாரின் பக்கத்து வீட்டுப் பெண் ஹிதாயாவின் கண்களைத் திறந்திருக்கிறாள்.அவள் கேட்ட ஒரேயொரு கேள்வி அவள் காதில் ஒலித்த வண்ணமேயிருக்கிறது.

“ஏன் ஹிதாயா..எந்த ஊதியமுமில்லாம காழியார் வீட்டு வேலைகளுக்கு மாடா உழைக்கிறீங்க.? இதையே நீங்க தொழிலா செஞ்சா புள்ளயள்ற வயிறாவது நெறயுமே…ஊட்டுல புட்டு இடியப்பம் சுட்டு விக்கேலாதா…?அதுக்கு சின்ன மொதல் போதுமே…நான் ஏற்பாடு செஞ்சு தாறன்…”

மனதில் ஒரு எழுந்த ஒரு திடமான முடிவோடு ஆட்டோவிலிருந்து இறங்கி வீடு நோக்கி நடந்தாள்.




# சுஸானா முனாஸின் "ஒற்றைப்பனை" ரசனைக்குறிப்புகள்

சித்தி மிஸ்ரியா அமீன்
கிண்ணியா

திருமதி சுஸானா முனாஸ் அவர்கள் எழுதிய "ஒற்றைப்பனை" எனும் அருமையான சிறுகதைத் தொகுப்பு நூலின் உள்ளே நுழையும் முன் நூலாசிரியர் பற்றி பார்த்தால், 1980களில் ஆரம்பித்த இவரது இலக்கியப் பயணம் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நினைவு மலர்கள், வானொலி போன்ற ஊடகங்கள் மூலம் அவ்வப்பொழுது தனது எழுத்தாற்றலை வெளிப்படுத்தி வருபவர்.

இணையத்தளங்களில் இவர் எழுதிவரும் தொடர் கதைகள் வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப்பெற்று வருகின்றதென்பதும் இவர் எழுத்துக்களுக்கு ஒரு சான்றாகும். அவைகளும் கூட விரைவில் புத்தகமாக விரைவில் வரலாம்.

ஒவ்வொரு புத்தக வெளியீடும் ஒவ்வொரு பிரசவத்திற்குச் சமம் என்பார்கள். இவரின் முதல் பிரசவமான "ஒற்றைப்பனை" எனும் இந்த சிறுகதைத் தொகுப்பு சமீபத்தில் நான் படித்த ஒரு அருமையான புத்தகம்.

புத்தகத்தின் தலைப்பிற்குத் தகுந்தாற் போல முன் அட்டைப்படத்தில் அழகிய பனைமரம் பார்ப்போரின் மனதைக் கவர்வதுடன் வடக்குக் கிழக்கு மாகாணத்துக்குரிய தனித்தன்மையையும் விளக்கி நிற்கிறது. அத்துடன் உள்ளீட்டிலும் கிழக்கு மாகாணம் திருமலை மூதூர் வாழ் முஸ்லிம்களும், தமிழர்களும் இனக்கலவரத்திற்கு முந்தைய காலப்பகுதியில் ஒருதாய் மக்கள் போல் மிகுந்த சகோதரத்துவத்துடன் வாழ்ந்த சம்பவங்களை தனது கதைகளின் மூலம் தந்திருப்பது இவரது பரந்த மனப்பாங்கை வாசகர்கள் புரிந்து கொள்ள ஏதுவாகிறது.

ஒற்றைப் பெண்களின் வாழ்வியல் துன்பங்கள் கஸ்ட்டங்களை கதைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார் நூலாசிரியர். 88 பக்கங்களில், பத்து தலைப்புகளில் அருமையான. கதைகளைத் தந்திருக்கிறார். பெண்ணியம் கூறும் வாழ்வியல் சோகங்கள் புத்தகம் முழுக்க விரவிக் காணப்படுகின்றன.

கதாசிரியர் ஒரு பெண் என்பதாலோ என்னவோ இதிலுள்ள கதைகள் அத்தனையுமே பெண்ணிய உள்ளுணர்வுகளிலிருந்து எழுதப்பட்டிருப்பது தெளிவு.

பெரும்பாலான பெண்களின் வாழ்க்கைக் கனவுகளை தொலைத்து விட்ட ஏக்கங்கள், வீட்டுவேலைக்காக பெண்கள் சென்று படும் துயரங்கள் என்பனவற்றையும் இவர் கதைகளில் பதிவு செய்யத் தவறவில்லை. அன்றாட வாழ்வில் சாதாரணமாய் நிகழக்கூடிய வலிகளும் ரணங்களும் கூட இவர் பேனாவால் பேசப்பட்டிப்பது சிறப்பு.

பெண்கள் தனது இளமைக் காலத்தில் எடுக்கின்ற பிழையான முடிவுகளினால் பிற்காலத்தில் கணவனை இழந்து சிறு பிள்ளைகளுடன் தனி மரமாக வாழ்வதும் எல்லா உறவுகள் இருந்தும், தனித்து வெறுமையாக நிற்பதும் வாழ்வில் எவ்வளவு பெரிய கொடுமை என்பதை "ஒற்றைப்பனை" கதைகளில் உணர்த்தியிருக்கும் விதங்கள் அருமை.

யுத்தகாலத்தின் பின்னரான இடம் பெயர்வு, ஏழ்மை போன்ற அவலநிலையைக்கூட மிக அழகாக சித்தரித்திருக்கிறார் நூலாசிரியர். மதங்களை மறந்து வாழும் சகோதரத்துவத்தையும், இன ஒற்றுமையையும் சிறப்பாக பதிவு செய்திருக்கிறார்.

மனிதர்களின் அன்றாட வாழ்விலுள்ள வறுமை, பந்தபாச உணர்வுகள் இவரின் கதா பாத்திரங்களின் வெளிப்பாட்டில் உயிரோட்டம் பெற்றிருப்பது உணர்வுபூர்வமாயுள்ளது.
பெண்களுக்கேயுரிய மென்மையான உணர்வுகள் சிதைக்கப்படுவது எவ்வளவு வேதனைக்குரிய விடயம் என்பதை இவரது எழுத்துக்கள் மூலம் வாசகர் மனதில் மிக அழகாக பதிவு செய்திருக்கிறார் .

பெரும்பாலான பெண்களின் திருமண வாழ்க்கை ஆரம்பத்தில் இனிமையாக இருந்தாலும் பின்னர் ஏக்கம், தவிப்பு, தனிமை அவர்களை ஆட்கொண்டு விடுகிறது. ஏழ்மையிலும் கற்பினைக் காத்திடும் பெண்மை பூமியைப்போன்று பொறுமை காத்து நிற்கின்றது என்பதை தனது “ஒற்றைப் பனை” மூலம் மிக அழகாக பதிவு செய்திருக்கிறார் நூலாசிரியர்.

அனைவரும் வாசித்து பயனடைய வேண்டிய அருமையான நூல். இந்நூல் கொண்டு எமது புத்தக அலுமாரிகள் அழகு பெறட்டுமே

# இயற்கைச் சிறைக்குள்

றஹீமா இன்ஷார் மீராவோடை



பச்சை மெத்தையாய்
படர்ந்து கிடக்கும் புல்வெளியில்
வெண் நுரை பூத்துக்குலுங்கும்
பனித்துளியில் புள்ளிமானாய்
துள்ளி வந்து தலைவைத்து
சாய்ந்து கொள்கிறேன்.

பொற்கரங்கள் நீட்டிய
காலைக் கதிரவனின் கதகதப்பில்
புவியின் அழகையெல்லாம்
அள்ளி அணைக்க
தலை நிமிர்த்தி எழுந்து பார்க்கின்றேன்.

பட்டாம் பூச்சிகளின் வர்ணங்களை
மொத்தமாய் விலை பேசி வாங்கியே
பூக்களில் முகம் புதைத்து
மௌன மொழி பேசுகின்றேன்.

இறக்கையில்லா என் இதயத்திற்கு
ஆயிரம் இறக்கைகள் முளைக்க
சிட்டுக்குருவியாய் சிறகடித்து
வானத்தை நோக்கி
மெல்லப் பறக்கின்றேன்.

நீலமயமாய்
விரிந்து கிடக்கும் வானம்
எட்டும் வரை மனச் சிறகை விரித்து
மேகங்களைப் பிளந்து
தோகை விரித்தாடும் மயிலாய்
மின்னல் வேகத்தில் பறந்து செல்கின்றேன்.

சலசலத்து ஓடும்
நதியின் ஜதியில்
மெல்லிசை மீட்டியே
கானக்குயிலின் காந்தக் குரலில்
சங்கீதம் இசைத்து
புன்னகையில் வதனம் பூத்திட
உல்லாசக் கிளியாய்
சுற்றி சுழல்கின்றேன்.

அன்னையின் அரவணைப்பில்
மகிழும் சேயின் குதூகலத்துடன்
நீர்வீழ்ச்சியில் பொங்கிடும் வெண்மையில்
தாய்ப்பாலின் சுவை கண்டு
இயற்கையின் அரவணைப்பில்
மொத்தமாய் மூழ்கிப் போகின்றேன்.

இயற்கையின் அழகுச் சிறைக்குள்
சிக்கி விட்ட என்னை
சிறை மீட்க வாருங்கள்.
இல்லையேல்
என்னுடன் அழகுச் சிறையில்
சிக்குண்டு கவிதை தாருங்கள்.

# கடலுக்கு அடியில் இருக்கும் உலகின் மிகப் பெரிய நீர்வீழ்ச்சி




ஆட்டிக் வட்டத்தில் ஐஸ்லாந்து மற்றும் கிறீன்லாந்தைப் பிரிக்கும் டென்மார்க் நீரிணையின் கீழ் கடலுக்கு அடியில் அமைந்திருக்கிறது உலகின் மிகப் பெரிய இந்த நீர்வீழ்ச்சி.

கடலுக்கு அடியில் நீர்வீழ்ச்சியா??? ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது இல்லையா? Denmark Strait Cataract – Greenland ன் மேற்கு முனைக்கு அருகிலுள்ள டென்மார்க் நீரினையின் கீழ் Denmark Strait Cataract எனும் இந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. கடல் மேற்பரப்பிலிருந்து சுமார் 2000 அடி ஆழத்தில் இந்த நீர்வீழ்ச்சி கடலுக்கு அடியில் தொடங்குகின்றது. இந்த நீர் வீழ்ச்சியின் மொத்த உயரம் 11500 அடி ஆகும் (3505 மீட்டர்)கிட்டத் தட்ட 02 மைல் தூரத்திற்கு கடலுக்கு அடியில் இது செல்கின்றது.

வெனிசூலாவில் உள்ள ஏஞ்சல் நீர்வீழ்ச்சிதான் பூமியின் மிக உயரமான நிலத்திலுள்ள நீர்வீழ்ச்சி எனச் சொல்லப்படுகிறது. அதன் உயரம் 3212 அடி ஆகும் இதன் உயரத்தை விட 03 மடங்கு பெரியதுதான் இந்த Denmark Strait Cataract நீர்வீழ்ச்சி.

இந்த நீர்வீழ்ச்சியானது வினாடிக்கு 123 மில்லியன் கனஅடி குளிர்ந்த கடல்நீரைப் பாய்ச்சுகின்றது. இதன் உச்ச ஓட்டம் கிட்டத்தட்ட 2000 நயாகரா நீர்வீழ்ச்சிக்கு சமம் என்பது குறிப்பிடத்தக்கது.

கடலில் எப்படி நீர்வீழ்ச்சிகள் இருக்கலாம் என்று உங்களுக்கு கேள்வி வரலாம். இதன் கீழ் உள்ள அறிவியல் உண்மை இதுதான்,

கடலில் உள்ள குளிர்ந்த நீர் வெதுவெதுப்பான நீரைவிட அடர்த்தியானது. Notrtic கடலில் இருந்து தெற்கே பாயும் நீர் இர்நிகர் (irnigar) கடலில் இருந்து வெப்பமான நீரைச் சந்திக்கின்றது. குளிர்ந்த அடர்த்தியான இந்நீர் விரைவாக வெப்பமான நீருக்கு கீழே மூழ்கி கடல் தளத்தின் மிகப்பெரிய வீழ்ச்சியின் கீழே பாய்கிறது. இது ஒரு வினாடிக்கு 175 மில்லியன் கனஅடிக்கும் (5.0 million cubic meters)அதிகமாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மிகப்பெரும் நீர்வீழ்ச்சியின் சக்தி பற்றிய ஆழமான அறிவியல் உண்மைகளைக் கண்டுபிடிக்க இதுவரை போதுமான கருவிகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

இந்த நீர்வீழ்ச்சியிலிருந்து வரும் நீர் கடல் தளத்தை அடையும் பொழுது அது தெற்கே பயணிக்கும் ஒரு பெரிய மின்னோட்டத்தை உருவாக்குகிறது. இது வடக்கே பாயும் வெப்பமான மேற்பரப்பு நீரை மாற்றுகின்றது.

இந்த பிரம்மாண்டமான ஓட்டத்திலுள்ள நீரினுடைய அளவு அட்லாண்டிக் கடலில் பாயும் அனைத்து நதிநீரின் தொகையிலே 20 முதல் 40 மடங்கு வரை சமம் என்றும் கூறப்படுகிறது.

# தற்கால இலக்கிய விமர்சனமும் மாறவேண்டிய படைப்பாளிகளும்

– நவாஸ் சௌபி –

ஈழத்து இலக்கிய விமர்சனப் போக்கும் மதிப்பீடும் 70, 80 களில் இருந்தது போன்று உயிர்புள்ளதாக தற்காலத்தில் இருக்கிறதா? என்ற மிகப் பெரும் கேள்வி இன்றுள்ள படைப்புகளின் முன் எழுந்து நிற்கின்றன.

கைலாசபதி, சிவத்தம்பி, எம்.ஏ.நு்.மான், மு.போ போன்றவர்களின் விமர்சனம் அதன் பயன்பாடு இலக்கிய மதிப்பீட்டுக்கு உரிய அளவை கொடுத்திருப்பதை காணலாம். அவர்களிடம் விமர்சனம் என்தபற்கான சரியான முறையான அளவுகோல் இருந்ததுபோலவும் கணிக்கப்பட்டது.

தற்கால விமர்சனம் என்பது படைப்பு சார் விமர்சனமாக இல்லாமல் படைப்பாளி சார் விமர்சனமாக மாறியுள்ளது.

எழுத்தை வைத்துப் பேசாது எழுத்தாளரை வைத்துப் பேசும் விமர்சன முறை தற்காலப் படைப்புலகின் சம்பிரதாயமாகப் போய்விட்டது.

விமர்சனம் என்ற சொல்லின் பொருளும் இப்போது நயத்தல் அல்லது நல்லது கூறல் என்ற ஒரு பொய் பிரசாரத்தை செய்கின்ற பொருளாக மாறியிருக்கிறது.

விமர்சனம் செய்கின்ற சில பேராசிரியர்கள்

அரைத்த மாவையே அரைப்பதாக 80 களில் மதிப்பிடப்பட்ட படைப்பாளிகள் சிலரின் பெயர்களை கடந்துவர முடியாமல் இன்னும் மூச்சுத் திணறுகின்றனர்.

இதன் மத்தியில் புதிய தலைமுறை அல்லது 90 களுக்குப் பின்னரான இலக்கிய கனதியை அதன் மதிப்பீட்டை சிறந்த விமர்சன முறைக்குள் கொண்டுவர முடியாமல் தோற்றுப் போயுள்ளோம்.

80 களில் உருவான படைப்பு வெளி முக்கியமாக போர்சார்ந்தும் விடுதலை புலம்பெயர்வு சார்ந்தும் இருந்தன.

90 களுக்குப் பின்னரான படைப்பு வெளியானது வேறு திசைக்கு சென்றிருக்கின்றது. இதில் நவீனம் பின்நவீனம் என உருமாற்றம் பெற்ற புதிய படைப்பு வெளியும் உருவாகி இருக்கிறது.

இந்த தலைமுறை மாற்றத்தையும் நவீன பின் நவீன படைப்புகளின் குணாதிசயங்களையும் உள்வாங்க அல்லது புரிந்துகொள்ள முடியாத சிக்கலும் புதிய விமர்சப் போக்கிற்கு மிகப் பெரிய தடையாக இருக்கலாம்.

இந்த தடையை தாண்ட முயற்சிக்காமல் இந்த மாற்றத்தை உள்வாங்காமல் உயிர்ப்புள்ள ஆரோக்கியமான உண்மையான விமர்சனகாரர்களை நாம் காண முடியாது.

90 களுக்குப் பின்னரான இலக்கிய விமர்சன மதிப்பீட்டின் இயலாமைக்கு அல்லது இல்லாமைக்கு காரணமாக விமர்சன மதிப்பீட்டாளர்கள் பேராசிரியர்களை மட்டும் குற்றம் சுமத்த முடியாது. படைப்பாளிகளையும் அதன் பாதிக் காரணமாக குற்றம் சுமத்த வேண்டும்.

படைப்பாளிகளுக்கு தங்கள் எழுத்துக்கள் மீதுள்ள குறையை அல்லது குற்றச்சாட்டை கேட்கும், ஏற்றுக் கொள்ளும் மனோநிலை இல்லாமல் இருப்பது இதற்கான பெரும் காரணமாகும்.

எழுதி முடித்த தன் படைப்பை உன்னதமான மிகச் சிறந்த ஒரு படைப்பாகக் கருதி உயர்ந்த ஓர் இடத்தில் அவர்களே தூக்கி வைத்துவிடுகிறார்கள். அதற்கான உயர்ந்த அங்கீகாரத்தை விமர்சனகாரரும் உடனே கொடுத்துவிட வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார்கள்.

இத்தகைய மனோநிலை அல்லது படைப்பு நோய் கொண்ட படைப்பாளிகளுக்குள் முறையான அல்லது உண்மையான விமர்சனம் என்ற சொல்லை சாகடித்துக்கொண்டுதான் நூல் மதிப்பீடுகளைச் செய்ய வேண்டிய நெருக்கடிகளும் விமர்சகர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் ஏற்படுகிறது.

தன் படைப்பின் தரத்தை சுய விமர்சனம் அல்லது சுய மதிப்பீடு செய்கின்ற ஒரு படைப்பாளி உண்மையான விமர்சனத்தின் தாப்பரியத்தை உணர்ந்துகொள்வான். அவனால்தான் தன் எழுத்தால் எழுந்து நிற்கவும் எழுத்தில் நிலைத்து நிற்கவும் முடியும்.

போலியான உண்மையற்ற பிறரின் விமர்சனப் புகழாரத்தால் ஒரு படைப்பாளி எழுந்து நிற்கவோ மாறாக எழுத்தில் நிலைத்து நிற்கவோ முடியாது.

ஆக, பயனற்றுப் போகும் எமது நவீன விமர்சனப் போக்கை திசை திருப்புவதன் அவசியம் மிக முக்கியமாக படைப்பாளிகள் சமூகத்திற்கு இருக்கிறது. 90 களுக்குப் பின்னரான ஈழத்து இலக்கிய செல்நெறி, அதன் வடிவமாற்றம் அதுகொண்டுள்ள சித்தாந்த கோட்பாடுகள் கடந்தகால படைப்புகளை விட்டு விலகி நிற்கும் அதன் வித்தியாசப் பண்புகள் பற்றி எல்லாம் படைப்பாளிகள் எங்களுக்குள்ளே நாங்கள் ஒருவரையொருவர் எடுத்துப் பேசாதவரை விமர்சனகாரர்கள் பேசமாட்டார்கள்.

தனக்கான அங்கீகாரம் புகழாரம் என்ற மாயையை விட்டு வெளியாகி தற்கால படைப்புகளுக்கான அங்கீகாரம் என்ற பொது வெளிக்குள் எமது படைப்பாளிகள் ஒவ்வொருவரும் வரவேண்டும்.

அதிலிருந்துதான் சிறந்த விமர்சன ஒழுங்கையும் உறுதியான விமர்சனப் போக்கையும் நாம் உருவாக்க முடியும்.

**தராசிற்கு நியாயமெல்லாம் தெரியாது...**
**எந்தப் பக்கம்**
**கனமிருக்கிறதோ**
**அந்தப் பக்கம் சாய்ந்து விடும்**
**இங்கு அப்பதடித்தான்**
**சில மனிதர்களும்.**

## பேலின்ட்ரோம்
## Palindrome
## [இருவழிச் சொற்கள்]

பேலின்ட்ரோம்
Palindrome (இருவழிச் சொற்கள்)
என்றால் என்ன ?

“எந்த ஒரு வார்த்தையை வாசிக்கும் பொழுதும் வலமிருந்து இடமாகவோ அல்லது இடம் இருந்து வலமாகவோ எப்படி வாசித்தாலும் எழுத்துக்கள் மாறாமல் ஒன்றுபோல் வார்த்தைகள் அமைவது இதற்குப் பெயர்தான் பேலின்ட்ரோம்” (Palindrome) என்பது.

தமிழில் உள்ள சில பேலின்ட்ரோம் வார்த்தைகளுக்கு சில உதாரணங்கள்,

விகடகவி // மாவடு போடுவமா துவளுவது// தாளாதா //வா தாத்தா வா மாலா போலாமா //தேருவருதே//மேகமே வாடவா // தாத்தா //கலைக//வினவி யானை பூனையா//
யானையா பூ யானையா//பாப்பா // தந்த// மாறுமா//தேயுதே தேடாதே//மேளதாளமே//மாடு ஓடுமா கலக // மோருபோருமோ//
போ வாருவா போ//மாடமா //மாதமா மானமா//மாயமா // கற்க //மாமா காக்கா // சிவா வாசி//திகதி//குடகு

சுவாரஷ்யமான இந்த இருவழிச் சொற்கள் தமிழில் இன்னும் ஏராளம் உள்ளது.

# கானல் நீர்



நபிலா எம். பாருக்
தெல்தோட்டை

சிதைக்கப்பட்ட எண்ணங்கள்
மறுக்கப்பட்ட உண்மைகள்
உருக்குலைக்கப்பட்ட உணர்வுகள்
சிலையாகிய மௌனங்கள்
சொல்லாமல் சென்ற ஆறுதல்கள்
புழுதியோடு புழுதியாகி
புதையுண்டு போனது.

அமைதியை சொந்தமாக்கிய
என் இராப் பொழுதுகள்
அசைவின்றிக் கடக்கும்
நினைவுகளின் சலனங்கள்
கையாலாகாத உறவுகள்
உறங்கிப் போன நியாயங்கள்
விரக்தியை தந்த விடியல்கள்
எல்லாம் சிறை வாழ்வாய்
சலித்துப் போனது.

இருமுகங்களின் நாடகம்
இருந்தும் இல்லை
எனும் பொய்கள்
நம்ப மறுக்கும் நிஜங்கள்
தொலைவில் தூரமான நேசங்கள்
தடுமாறி தடுக்கும் நம்பிக்கைகள்
கனவாகிப் போன ஆசைகள்
குருட்டு கண்களின்
காணாத காட்சியாகி
காணாமலே போனது.

நித்தம் நிர்க்கதியான நிம்மதிகள்
வலிகளால் வருத்தும்
மன நிம்மதிகள்
கடிவாளமிடப்பட்ட இளமை
வகுத்து வரைந்த
எனதான நேரங்கள்

கோடு கீறப்பட்ட எல்லைகள்
திட்டமிட்டு முடக்கப்பட்ட முயற்சிகள்
எழுதத் துடிக்கும் ஊனக்கரங்களாய்
பரிதவித்துப் போனது.

சிறகொடிந்த பறவை
பறக்கத் துடித்துக் காத்திருக்க
மனதோடு மாறாத ஏக்கங்கள்
எனை மட்டும் அரவணைக்கை
அவாவுடன் தேடுகிறது.
கானல் நீராய் கண்களின் மயக்கம்
இளகிய இதயத்தில்
ஏனிந்த இருண்ட தேடல்.

# பலஸ்தீன் என் தேசமே..!



பாலஸ்தீன் மக்கள்
நினைவு படுத்திக் கொண்டே இருக்கின்றனர்
ஈமானின் பலத்தை

இஸ்ரேலிய இராணுவம்
உலகிற்கு வெளிப் படுத்துகின்றனர்
யூதர்களின் குணாதிசயங்களை

பலஸ்தீன் வீரர்கள்
வெற்றிக்காக போராடுகின்றனர்
அனைத்தையும் இழந்து

கலைநேசன் இஸட்.ஏ.றஹ்மான் – ஒலுவில்

# கீறல்* – 08

# ஒரு முழுமையான பார்வை


அட்டாளைச்சேனை எஸ்.எல். மன்சூர்

தற்காலத்தில் வாசிப்பின்மீதான பார்வை சற்றுக் குறைந்திருக்கிறது என்கிற குற்றச்சாட்டுக்கள் பேசப்பட்ட போதிலும், இலக்கியத்தின் மீதான பற்றும், பரிபாசைகளும், கைபேசியுடனான இணையத்தள எழுத்தும், வாசிப்பும் அதீதமாக உலாவருகின்றமை யாவரும் அறிந்ததே. இலக்கிய சிற்றேடுகள், தினசரிப்பத்திரிகைகள், வாராந்தம் மற்றும் மாதாந்த வெளியீடுகள் அந்த நாட்களைப்போல இல்லாவிட்டாலும்கூட சிலரின் முயற்சிகள் காரணமாக இலக்கிய ஏடுகள் வாசிப்பாளர்களை மென்மேலும் ஊக்கப்படுத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

அந்த வகையில் ஆர்வமுள்ள இலக்கியநெஞ்சங்கள் நகரப்புறத்தைவிட சற்று கிராமங்களை அண்டிய பிரதேசங்களில் தன்னையும், தன்னோடு ஆர்வமுள்ளவர்களையும் இணைத்துக் கொண்டு இலக்கியம் படைப்பதில் மிகவும் காத்திரமான பங்களிப்பினை வழங்கியும் வருகின்றனர்.

தென்கிழக்கின் ஒலுவிலை மையமாக்கொண்டு இயங்கி வருகின்ற மின்னல் வெளியீட்டகத்தினால் வெளியிடப்பட்டுள்ள எட்டாவது இதழான **கீறல்** அண்மையில் என்வசம் கிடைத்தது. உண்மையில் இலக்கியம் படைப்பதில் ஆர்வமுள்ள இளைஞர்களையும், இலக்கியவாதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ள மின்னல் வெளியீட்டகம் கடந்த பல வருடங்களாக அர்ப்பண சிந்தையுடன் கீறலை வெளியிட்டு வருகின்றனர். இந்த கீறல் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரான ஒலுவிலைச் சேர்ந்த கவிஞர்,பாடலாசிரியர்,நாவலாசிரியர்,நடிகர், பாடகர் என இன்னும் பல்வேறு பாத்திரங்களைக் கொண்டிருக்கின்ற அஸீஸ் எம். பாயிஸ் அவர்களின் விடாமுயற்சியின் பலனாக அழகிய முறையில் கீறல் இதழ் எட்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதன் அட்டைப் படத்தினை ஓவியர் எஸ்.நளீம் வரைந்திருக்கிறார். இச்சஞ்சிகையின் உதவி ஆசிரியராக கவிஞர் அஷ்ஷெய்க் இஸட் எம். நிலாம்(நழீமி) ஆசிரியர் அவர்கள் இயங்கி வருகின்றார்.

நாற்பது பக்கங்களில் இருபத்தெட்டுத் தலைப்புக்களில் மூத்த, இளைய கவிஞர்கள் இணைந்து தத்தமது கைவரிசைகளை வடித்திருக்கின்றனர். அது மாத்திரமன்றி பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் தங்களுடைய ஆக்கப்படைப்புக்களையும் கீறலில் பதிவிட்டுள்ளனர். இன்னும் கவியாளர்களை ஊக்கப்படுத்தியிருக்கின்ற கீறல் மின்னல் வெளியீட்டத்தாரின் முயற்சி பலனளித்திருக்கிறது. பிரபல கவி ஆளுமை ஒலி, ஒளி பரப்பாளர் அஷ்ர.்.ப் சிஹாப்தீன், "அசத்தலாகும் அகாலம்" எனும் தலைப்பில் மிக அருமையான கவிதைவரிகளை பதிவிட்டுக்கிறார். ஓர் இருளின் நிகழ்வில் நடைபெறுவதாக தன்னுடைய கற்பனையை இவ்வாறு கூறுகின்றார் கவிஞர் அஷ்ர.்.ப் சிஹாப்தீன்.




**"மீண்டும் கவ்வத் தொடங்குகிறது இருள்..**
**தூரத்தே தெறிக்கும் மின்னலின் கண்கள் கூசுகின்றன...**
**இடி முழக்கங்களால் அதிர்கிறது பூமி.**
**மீண்டும் கட்டுப்படுத்த முடியாத பிரளயம் ஒன்றுக்கான**

**எதிர்வுகூறலாக இருக்கக் கூடும் இது.**
**எத்தனை ஏழைக் குடிசைகள் இழுபட்டுப் போகுமோ?**
**எத்தனை இருப்பிடங்கள் இழப்பார்களோ?"**

என்கிற அகால மரணங்களின் ஓலங்களை யதார்த்தமான மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்து தந்திருக்கின்ற கவிஞருடைய வரிகளோடு ஆரம்பிக்கிறது கீறல்.

விரிவுரையாளர் கலாநிதி எஸ்.எம். ஆய்யூப் அவர்களுடைய நிர்வாணம் எனும் தலைப்பில் ஆசிரியர் மாணவர் உறவாடல்களை மிக உளவியல் சிந்தனையுடன் தந்திருக்கிறார். "அடுத்தவருக்கு ஆடை தைக்கும் ஊசி நிர்வாணமாகவே இருக்கிறது" எனும் தத்துவத்தின் ஊடாக ஊசியின் தத்துவங்களை விபரிக்கும் நிர்வாணம் இப்படியும் அமைகிறது.

அதாவது, "பெருநாள் வந்துவிட்டால் ஊசிக்கு வேலை அதிகரித்து விடுகின்றது. பரீட்சை வந்துவிட்டால் ஆசிரியருக்கு பாடு பல்கிப் பெருகின்றது" என்கிற வகையில் ஊசியை ஆசிரியரோடு ஒத்துப்பார்க்கும் கவிதை வரிகளின் ஆத்மார்த்தமான நெருக்கம் இங்கே கீறலாக வெளிப்படுகிறது. பாராட்டப்பட வேண்டிய வரிகளாகும்.

இளம் கவி எம்.பி.எம். பௌசான் "வெவரம் கெட்ட காக்கை" எனும் தலைப்பில் ஊர் பாசையின் மொழி நடனத்தில் காக்கையின் சாகசத்தை வரிந்திருக்கிறார். "காகமே காகமே காலமிப்போ கலிகாலமாகியதா? கோலங்கள் மாறி கோத்திரமும் மாறிதால் சாத்திரப்புத்தியை யாரிடம் நீ தொலைத்தாய் சொல் காகமே? என்கிறார் கவிஞர் பௌசான். மேலும் விமர்சகர் ஆய்வாளர் சிறாஜ் மஷ்ஹூர் ஒளிப்பூக்கள் எனும் தலைப்பிலும், ஒலுவில் முஸம்மிலின் ஊமையான வறுமை, பிரபல கவிஞர் ராஜகவி ராகிலின் என் நிழலுக்கும் பசிக்கிறது, அபூஸர்பானின் ஆர்ப்பரிப்புக்களின் அவஸ்த்தை, எழுகவி ஜெலீன் கொரோனாவும் ஊரடங்கும் கவிதைகளும் தொடராக அமையப்பெற்றிருக்கின்றமை கீறலின் கீறலுக்கு மதிப்பாய் அமைகிறது.

மேலும், கலைமகள் ஹிதாயா றிஸ்வி, ஜமீல், க.ஷியா, இந்திய எழுத்தாளர் பாலைவன லாந்தர், ஒலிபரப்பாளர் எஸ். றபீக், எஸ்.எல். அன்வர், எஸ். நளீம், பொத்துவில் அஜ்மல்கான், மருதமுனை விஜிலி, ஷிபானி முகம்மட், பாலமுனை பஸீனா, றியாஸா எம் ஸவாஹிர், அஸீஸ் எம். பாயிஸ், சொல்லன்பன் நசீறுத்தீன் என்று பெரும் கவிஞர் பட்டாளமே இங்கு படைப்புகளைத் தந்திருக்கிறார்கள.

மேலும் ஒஸ்லோவில் வசித்துவரும் வாசுகி மோகனின் அறிவியலை அதிரவிடும் திருக்குர்ஆன் பற்றி அவர் எழுதிய கட்டுரை ஒன்றும் பதிவிடப்பட்டுள்ளது. மிகவும் காத்திரமான கட்டுரையாகும். இன்றைய நாட்களில் இஸ்லாமியர் அல்லாத ஒருவரால் அர்குர்ஆனின் அற்புதங்களையும், அதன் சங்கதிகளையும் ஆய்ந்திருக்கின்ற திருமதி மோகனின் கட்டுரை ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய அர்த்தமுள்ள கட்டுரையாகும்.

அத்தோடு பாரசீகக் கவிஞரும், வானியல் ஆய்வாளருமான உமர்கையாம் பற்றிய விபரங்களும் கீறலில் கீர்த்தியுடன் காணப்படுகின்றது. மாத்திரமன்றி நவீன நாஸ்தீகத்தின் வரலாறும் அதன் எல்லைகளும் எனும் தலைப்பில் அஷ்ஷெய்க் றிஸான் சுபைதீன்(நளீமி) அவர்களுடைய கட்டுரை ஒன்றும் நாஸ்தீகத்தின் அடிப்படைகளை விபரிக்கிறது.

மேலும், உலகில் அல்லாஹ்வால் படைக்கப்பட்ட ஜின்கள் பற்றிய ஆய்வுரீதியான கட்டுரை ஒன்றை கீறலின் உதவி ஆசிரியரான அஷ்ஷெய் இஷ்ட் எம் நிலாம் (நளீமி) எழுதியிருக்கிறார். அநேக மனிதர்களுக்கு சந்தேகமான ஜின்கள் தொடர்பான ஐயங்களுக்கு மிகச் சிறந்த விடையாக இவருடைய தொடர் கட்டுரையின் முதல் தொடர் கீறலில் வெளிவந்திருக்கிறது. தொலைதலின் இனிமை எனும் பயணக்கட்டுரையின் முதலாவது தொடர் கட்டுரையை பயணாளரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான அம்ரிதா ஏயெம் அவர்கள் எழுதியிருக்கின்றார். தான் மேற்கொண்ட பாலைவனப் பிரதேசங்களையும், அங்குள்ள பல்வேறு இடங்களையும் சுட்டிக்காண்பிக்கிறார் விரிவுரையாளர் அம்ரிதா அவர்கள்.

மேலும், பலவீனமான ஹதீஸ்களை எதற்காக பயன்படுத்தலாம் எனும் தலைப்பில் அக்குரணை லபீஸ் ஸஹீட் அவர்கள் எழுதியிருக்கிறார்.

இறுதியாக கீறலின் பின் அட்டையில் பிரதம ஆசிரியராக அஸீஸ் எம்.பாயிஸ் கீறல் இதழின் மீதான பற்றின் காரணமாக வேண்டுகோள் ஒன்றையும் வாசகர்களுக்கு வழங்கியிருக்கிறார். அதாவது, “கீறலின் 08வது இதழில் சந்திப்பதில் மகிழ்கிறோம். வலைத்தளங்கள் வந்தபிற்பாடு தொட்டுணர்ந்து படிக்கும் இலக்கிய இதழ்களின் வரவு குறைந்து கொண்டே சென்றாலும், தொட்டுணர்ந்து படிக்கும் போது கிடைக்கும் இன்பம் கையடக்கத் தொலைபேசிகளினூடாக வலைத்தளங்களைப் படிக்கும் போது கிடைப்பதில்லை.

நண்பர்களினதும் இலக்கிய நெஞ்சங்களினதும் வேண்டுகோளுக்கிணங்க கீறலை மறுபடியும் கொண்டு வந்திருக்கின்றோம். தரமானதொரு இலக்கிய இதழாகத் தொடர்வதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பினை எதிர்ப்பார்க்கிறோம்” என்பதாக அதன் பிரதம ஆசிரியர் குறிப்பிட்டிருக்கின்றார். உண்மையில் இன்றைய நாட்களில் இந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேறுமா என்பதில் நமது கவிஞர்கள் இலக்கிய வாதிகள் மாத்திரமன்றி பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்களுக்கு வாசிப்பின்மீதான ஊக்குவிப்பினை வழங்க வேண்டிய ஆசிரியர்களே வாசிப்பதில் மிகமிக மந்தமான நிலையில் காணப்படுகின்றனர் என்பதை நான் கண்கூடாக கண்டிருக்கின்றேன்.

எப்படியோ கீறல் இனிவரும் காலங்களில் அனைவரிலும் தன் ஆதிக்கத்தை பதிக்கப்போகிறது என்றுதான் கூறவேண்டும்.






**Parenting Tips**

## குழந்தைகளிடம் No சொல்லப் பழகுங்கள்

குழந்தை வளர்ப்பில் ஒவ்வொரு பெற்றோரும் கவனிக்க வேண்டிய 04 விடயங்கள்.

01. குழந்தைகளிடம் No சொல்லப் பழகுங்கள் (குழந்தைகள் கேட்டவுடன் எதையும் வாங்கிக் கொடுத்து பழக்காதீர்கள்)
02. தாய் No சொன்ன பிற்பாடு தந்தை Yes சொல்லக் கூடாது (இருவரும் ஒரு Team Work ஆக செயல்படவேண்டும், இல்லையென்றால் அவர்களுக்கு தெரியும் உங்களது emotions உணர்வுகளோடு விளையாடுவது எப்படியென்று)
03. ஏன் No சொல்கிறீர்கள் என்பதை சரியான காரணத்தோடு அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும் நாம் கோபப்பட்டோ தடுமாறியோ சொல்லக் கூடாது.
04. குழந்தைகள் கேட்கும் விடயத்தில் பெற்றோருக்குள் கருத்து முரண்பாடு இருக்கலாம் ஆனால் அதற்காக குழந்தைகள் முன்னால் நீங்கள் சண்டை போடக் கூடாது.

இப்படி நீங்கள் சில விடயங்களில் அவர்களுக்கு No சொல்லி பழக்கும் போது அவரக்ள் வளர்ந்த பின் எதிர்கொள்ளப் போகும் ஏமாற்றங்களை இலகுவாக சமாளிப்பார்கள். இந்த உலகம் கேட்டவுடன் எதையும் கொடுக்காது வாழ்வில் நிறையை Rejections மறுதலிப்புக்களை அவர்கள் எதிர் கொள்வார்கள். அதையெல்லாம் முகம் கொடுக்கும் மனவலிமையை நாம்தான் அவர்களுக்கு சிறு வயதிலிருந்தே கற்றுக் கொடுக்க வேண்டும்.



# மழை விழா...

பாத்திமா சில்மியா
மாவனல்லை

**ஓய்வதாக இல்லை
இந்த துருதுரு மழை
நகர்வதாக இல்லை
ஒட்டிக் கொண்ட குளிர் நிலை**

**உலர்வதாக இல்லை
நனைந்த ஆடைகள்
இறங்குவதாக இல்லை
அணை கடந்த ஓடைகள்**

**காய்வதாக இல்லை
தெப்பமான சாலைகள்
புலர்வதாக இல்லை
பிரகாசம் இழந்த காலைகள்**

**வீழ்வதாக இல்லை
சூரிய ஒளிக் கீற்று
காத்துக் காத்துக்
கண்களும் போகிறது தோற்று**

**மழையே
சற்றே ஓய்வு கொள்ளலாமே...**





# நட்பு

ஹிஸாம் எம் இஸ்மத்

சொந்தம் இல்லை பந்தமில்லை
என் கூட பொறந்த உறவுமில்லை
சாதி மத பேதம் இல்லை
எங்க நட்புக்கு நிகரென்றும் எதுவுமில்லை

பகல் முழுக்க சேர்ந்து ஊர் சுத்துவோம்
இரவு தூங்க மட்டும் பிரிந்து இருப்போம்
ஏனோ தெரியவில்லை இரவுக்கும் எங்கள் மீது
பொறாமை தான்.

சின்ன சின்ன சண்டைகளும்
எங்களுக்குள் வந்து போகும்
ஒரு நாள் கூட பாக்கலன்னா
அது ஒரு யுகம் போல கெடந்து வாட்டும்.

எனக்கு ஒரு பிரச்சனை என்றால்
அவன் எரிமலை போல எழுந்து நிற்பான்
என்றும் நட்புக்காக மெழுகுவர்த்தியை போல்
கரைந்தும் விடுவான்.

காரணம் இல்லாமல் கலைந்து போக
இது ஒன்றும் கனவும் இல்லை.
காரணம் சொல்லிப் பிரிந்து போக
இது காதலும் இல்லை.

கடிகாரம் நின்று விட்டால்
காலமும் நின்று விடுமா என்ன?
நாம் சந்திப்பது நின்று விட்டால்
நட்பும் குறைந்தது விடுமா என்ன?

கண்ணாடியும் நிழலையும் போல அவன்
கண்ணாடி பொய் சொல்வதுமில்லை
நிழல் விட்டுச் செல்வதுமில்லை.



# எல்மிராவின் கடிதங்கள்...

[சிறுகதை]

பர்ஸானா எம்.பி. – நிந்தவூர்

ஜன்னல் கண்ணாடிகளை விரித்து விட்டு வெளியில் பார்வையை படர விடுகிறான் ஜேம்ஸ். கொட்டிக்கொண்டிருக்கும் பனியில் மாஸ்கோவின் வீதியோர மர இலைகளிலும் கிளைகளிலும் பஞ்சுக் குவியலாய் வெண் பனித்துளிகள் உட்கார்ந்து கொண்டிருந்தது. தனது இரவு உடையின் காற்சட்டைப்பைக்குள் கைளை விட்டு எப்போதும் போல தனது தோற்றத்தை எடுப்பாக்கி மேலிட செய்தான். தனிமையிலும் கூட்டத்த்திரளிலும் அவன் தனது தோற்றத்தை கௌரவ உடையிலேயே பேணுகிறான்.

எலிஸா இறந்ததாக செய்தி கிடைத்தும் அத்தனை வருத்தம் அவனை வாட்டாததற்கு காரணம் அவள் மீது ஆரம்பத்தில் இருந்த காதல் இல்லாது போனதா?

வேறு கசப்புகள் நிறைந்த காரணங்களா.? அவளது எழுத்துக்களின் மெய்சிலிர்ப்புக்களை புரியாது வாழ்கையை தனக்கு ஏற்றது போல் வசதியாக்கி கொண்டதாலா?

காரணம் எதுவாகவிருந்தாலும் அவன் கலங்கிப் போகவில்லை. எப்போதும் போல திடமான மனதுடனும் கம்பீரமாகத்தான் இருந்தான்.

வெண்பனி கொட்டும் இதே இரவில் பல மைல்களுக்கு அப்பால் மெகடன் நகரத்தில் அதி உயர்தர மரங்களினால் அமைக்கப்பட்டிருந்த ஆடம்பர வீட்டின் இரண்டாவது மாடியில் எல்மிரா இருந்தாள். ஜன்னலோரமாய் படர்ந்திருந்த ஜாஸ்மின் கொடியில் பூத்திருந்த மலர்கள் கொட்டும் பனியிலும் வாசத்தை அள்ளித்தெளித்துக் கொண்டிருந்தது. அந்த வாசம் எல்மிராவின் நாசியினூடாக நுளைந்த போதும் அவளால் அதை உணர முடியவில்லை.

இறந்து போன எலிசா வின் பூதவுடலுக்கு பக்கத்தில் வலது பக்கம் புகைந்து கொண்டிருந்த எகிப்திய சாம்பிராணியின் வாசம் மட்டுமே அவள் நாசியில் நிறைந்திருந்தது.

நல்லடக்கம் முடிந்து இருள் சூழ்ந்த மாலை வேளை, அந்த பெரிய பங்களாவில் தனிமையை துணைக்கு அழைத்தவளாய் தந்தை ஜேம்ஸ் இற்கான மடலை வரைகிறாள்.

எனதருமை அப்பா...

அம்மா எலிசா இந்த உலகைத் துறந்த போதும் இறுதியாகவேனும் அவரைப் பார்க்க நீங்கள் வரவே இல்லை. உங்கள் அழகான காலணியும், விலைஉயர்ந்த கோட்டும் இந்த இடத்தை காண விரும்பவில்லை போலும். உங்கள் காற்சட்டைப் பைக்குள் கைகளை நுளைத்துக் கொண்டு கம்பீரமாய், அழகாய் தோளை உலுக்கி பேசும் உங்கள் உயர்ரக பேச்சும் பார்வையும் இங்கு வர விரும்பவில்லை போலும்.

எப்போதும் என் கன்னங்களில் முத்தமிட்டு அன்பை பொழிந்த தாய் எலிசாவின் கன்னங்களை இறுதியாக என் மடியில்தான் தான் தாங்கினேன் அப்பா. கொஞ்சம் கொஞ்சமாய் உயிர் போய்க் கொண்டிருந்ததையும் நான் உணர்ந்தேன். உடல் சூடு மெதுமெதுவாய் தணிவதையும் நான் அவதானித்தேன். சிறிது நேரம் போக உடல் விறைத்தது. பின்னர் இரும்புக் கன்னங்களையும் கால்களையும் நான்பார்த்தேன். இரும்பால் செய்யப்பட்ட உடம்பு ஒன்று என் மடி மீதே துயின்றது. இதுவெல்லாம் நடந்து கொண்டிருந்த அந்த நொடிகளில் நான் உங்களுக்கு பல முறை அழைப்பு எடுத்தேன் அப்பா... உங்கள் மனதை எது துளைத்துக் கொண்டிருந்ததோ அந்த அழைப்புகளுக்கு பதிலாக உங்கள் குரலை அன்று முழுக்க நான் கேட்கவே இல்லை.

என் அன்புத்தந்தையே உங்கள் மீது வைத்திருக்கும் அதி உச்சமான பெரும் அன்பை அம்மா மீதும் வைத்திருக்கின்றேன். அவர் உங்களோடு வைத்திருந்த பாசத்தை நான் நேரில் அறிந்தவள். நீங்கள் அம்மாவை விட்டு பிரிந்த போதும் அவர் தனிமையில் இருந்த போதும் இரண்டு கோப்பை பால் தேநீர் தான் தயாரிப்பார். உன் தந்தை, என் கணவர் ஜேம்ஸுக்கு என் கையால் தயரித்த பால் தேநீர் என்றால் மிகவும் பிடிக்கும் என்று அவளது கண்ணீரை அத்தேநீரிக்குள் சிந்திவிடாமல் அவசரமாய்த்துடைத்து விடுவார்.

அவர் வரைந்து வைத்திருக்கும் கவிதைகளில் சொட்டிக் கொண்டிருக்கும் காதலில் நானும் ஒரு கணம் பொறாமையுற்றேன். அது உங்களைச் சந்தித்த பெறுமதியான நாட்களின் மிகப் பெறுமதியான நிமிடங்கள்...போல அவர் மிகவும் உருகி இருந்தார் அந்த வரிகளில்.

நீங்கள் இருவரும் வசித்த உங்கள் மாளிகையின் வர்ணங்கள் ஒவ்வொன்று பற்றியும் நான் வியப்பதும் உண்டு. "உன் தந்தைக்கு எப்போதும் உயர் ரகமே பிடிக்கும். வீடும், காரும் அனுபவித்த பொளாதாரமும் அத்தனையும் பணத்தின் மிகப் பெரிய செலவீனமாய் இருப்பினும் உங்கள் தந்தை அவற்றை விரும்பினார்.

எப்போதும் யாருக்கும் கோப்பி கோப்பையை தனியே நீட்டிடாதே மகள். அழகான கப் அன் சோசர்களிலேயே பெறுமதியான அன்புடன் வழங்குங்கள் .இதுவே உங்கள் தந்தையின் ஆசையும்"என்பார்.

அப்பா!

இன்னும் உங்களைப்பற்றி கூறிக் கொண்டே இருப்பார்..

எனக்கான ஆடைகளில் அவருக்கு பிடித்தமான நீல நிறத்தையே எப்போதும் தெரிவு செய்வார். அதுவே அனைவர் முன்னாலும் உயர் தோற்றத்தை அழிக்கும் என்பார். நான் விரும்பிய மஞ்சள் ஆடையை நான் அவரை திருமணம் முடித்த பிறகெல்லாம் கண்டதே குறைவு என்று வருத்தமே இல்லாத தொனியில் பேசுவார்.

அல்யோங்கா சொக்லேட், கொரோவ்கா ஐஸ்கிறீம், ரஷ்யன் ஷெபிர் மாஸ்மெலோ, பேர்பிள் எம்பரர் பட்டாம்பூச்சி, சூடான ஜூலையின் நடுவில் கொட்டும் ஒரு குளிர் மழையின் வாசம், குதிரை வண்டிச் சவாரி இப்படி இன்னும் எனக்கு பிடித்த எத்தனயோவற்றை வெறும் எழுத்துக்களிலே எழுதி உன் தந்தைக்கு தெரியாமல் மறைத்து வைத்தேன். அவர் எழுத்துக்களுக்கு எப்போதும் எதிரியானவர். இங்கு அவருக்கு நான் மனைவி மட்டுமே...அவர் சொல்வதை மட்டும் செய்யும் மனைவி. இப்போது அம்மாவின் பேச்சில் கொஞ்சம் வருத்தம் தெரிந்தது அப்பா...

இத்தனை ஆழமான நேசத்தை நீங்கள் வெறுக்க காரணம் என்னப்பா? எனக்கு விடை தெரியவில்லை. இந்த உலகில் நீ தான் எல்லாம் என்று பூரிப்பீர்களே…என் காதுக்குள் மட்டும்மாவது கொஞ்சம் கிசுகிசுத்து சொல்லுங்கள் அப்பா… இத்தனை பெரும் காதல் வைத்திருந்த அம்மாவிடம் இருந்து உங்களை திசைமாற்றியது எது...?

வீட்டு முற்றத்தில் நீங்கள் கட்டுவித்த அழகிய கலைநயம் மிக்க தாமரைத் தடாகம் பூக்களால் நிரம்பி வழிகின்றது. நீங்கள் பார்த்துப் பார்த்து வாங்கிய மீன்கள் இன்னும் மகிழ்ச்சியாய்த்தான் துள்ளிக்குதித்து அதனுள் நீந்துகின்றது.

இதற்கெல்லாம் உங்கள் புதிய காதலி லில்லி தான் காரணம் என்று உங்கள் உள் மனம் சொல்லும் அப்பா. எனக்குத் தெரியும் ஆனால் நீங்கள் ஒத்துக் கொள்ள மாட்டீர்கள்.

அன்று ஒரு நாள் அடுப்படியில் இருந்து சுடு சட்டியின் நுனி பட்டு துடித்து ஓடி வந்த அம்மாவிடம் நீங்கள் சரியாய் முகங் கொடுத்து ஆறுதல் சொல்லவே இல்லை. அவர் கை கொப்பளித்து இரவு முழுக்க அழுத போது நீங்கள் லில்லி பற்றிய கனவில் மேகங்களுக்கு இடையில் நீந்தி நட்சத்திரங்களை அவளுக்கு பரிசாக வழங்கி கொண்டிருந்தீர்கள் என்று அம்மா சொன்னார்.

நீங்கள் அந்த லில்லியின் மீது அத்தனை அதீத காதலைக் கொட்டி உங்கள் அந்திம காலம் வரை அவளுடனேயே வாழ வேண்டும் என்ற காதல் வாக்குகளை வழங்கி கொண்டிருந்தீர்கள். அவருக்கு பிடித்த ஸ்டோபரி ரசம் உங்களுக்கும் பிடித்து விட்டதாய் நீங்கள் நம்பிக் கொண்டீர்கள்.

ஆனால் பிந்திய நாட்களில் எலிசா உன் தேநீர் ஒரு கோப்பை வேணும் என்று நிச்சயம் நீங்கள் ஏங்கி இருப்பீர்கள்.

இறைவனின் விளையாட்டு விதியின் சதி அம்மா எலிசாவின் வயிற்றில் ஒரு குழந்தை உருவாகாமல் போனது. அப்படி உருவாகிப் பிறந்திருந்தால் அந்த குழந்தை தவழும் போது அது விழாமல் பிடிக்க நீங்க ஓடி வரும் போதும், தத்தி தத்தி நடக்கையில் கை பிடித்து நடை பழக்கும் போதும், குழந்தை உண்ணாமல் உறங்குவதாய் நீங்கள் இருவரும் கலங்கிடும் நாட்களிலும், தூங்காமல் வீரிட்டு அழும் நாட்களில் நீங்கள் இருவரும் விழித்திருக்க நேரும்போதும் உங்கள் காதல் இன்னும் புதிதுபுதிதாய்க்கூட மலர்ந்திருக்கும்.

மேலும் எழுத வார்த்தை இன்றி மடலை மூடி வைத்தாள் எல்மிரா.

மர வேலைப்பாடும் இயற்கையை ஒத்த மலர் கொத்துக்களை தாங்கி நின்ற பூச்சாடிகளும், வேலைப்பாடுகள் நிரம்பிய திரைச்சீலைகளும். அலங்கரித்துக் கொண்டிருந்த வராண்டாவில் ஒரு சங்கிலியில் தொங்கிக்கொண்டிருந்த பறவைக் கூடு வடிவ ஊஞ்சலில் ஜேம்ஸ் அமர்ந்திருக்க. அது தன் பாட்டில் ஆடிக் கொண்டே இருந்தது.

லில்லி இன் நினைவுகளும் கூடவே.

லில்லி அழகான ஓவியம் போன்றவள். தலை முடியை மிக அழகாகவும் கழுத்து வரைக்குமாய் தட்டுத் தட்டாய் வெட்டி இருந்தாள். தலைமுடிக்கு செம்மஞ்சள் நிறச்சாயம் பூசி இருந்தாள். நடு வகிடு எடுக்காமலே இரண்டாய் பிரிந்தும் கலைந்தும் அதிகம் விரிந்து பரவாமலும் அன்றைய டயானா போல் தோற்றம் அவளுக்கு. எப்போதும் செம்மஞ்சள் கவுன் உம் சாக்லேட் நிற கோட் உம் அவளது காரியாலய நேரங்களில் அணிந்து கொள்வது பிடிக்கும். அவளது பாவாடையின் பின் புற வெட்டு சற்று உயர்வாகவே இருக்கும். தான் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப விலை உயர்ந்த அலங்கார ஆடைகளை அணிந்து கொள்வாள். எப்போதும் புன்னகையை படர விடும் முகத்தையே தன்னுள் வைத்திருந்தாள். விலை உயர்ந்த உதட்டுச் சாயமும் மேக் அப் உம் நீண்ட நேரம் அவளது அழகை கலைய விடாது பேணிக் கொள்ளும்.

லில்லியுடனான அதீத காதலில் மூழ்கி தன்னுடைய வியாபாரம், வர்த்தக சந்திப்புக்கள், பங்குகளின் பெறுமதி வீழ்ச்சி, இலாபம் நட்டம் எது பற்றியும் ஜேம்ஸ் நினைக்க மறந்து போனான்.

மலர்வனங்களையும், சிலிர்த்து ஓடும் நதிகளையும், பனி மூட்டக் குளிரினையும் லில்லியின் கைப்பிடித்தே கடந்தான் ஜேம்ஸ்

நந்தவனங்களின் உயர்ந்த மரங்களின் கீழ் அவளை அணைத்து அவனது ஆழமான காதலை அவள் இதழ்களின் வழி

முத்தமாய் பதித்து வைத்தான். துடிக்கும் அளின் இதழ்களும் அவைகளை ஏற்றுக் கொண்டது. அதற்காகவே காத்தும் கிடந்தது.

லில்லிக்கு பிடித்து போன செம்மஞ்சள் நிறத்திலேயே அவளுக்கு கைப்பை, கைகளற்ற சட்டை, முழங்கால் வரைக்குமான குட்டை பாவாடை, குதி உயர்ந்த பாதணிகள், விலை உயர்ந்த துருக்கிய பட்டாடைகள் என வாங்கிக் குவித்தான் ஜேம்ஸ். அவன் எல்லாத் தெரிவுகளையும் அவள் விருப்ப படியும் அதற்கு மேலாயும் செய்தான். லில்லி வியந்தாள். ஒவ்வாரு நொடியையும் அவனுடனையே கழிக்க விரும்பினாள்.

அந்தக் காதலின் விளைவு அவள் வயிற்றில் குழந்தை ஒன்றையும் பரிசாய்க் கொடுத்து நின்றது லில்லி சற்றும் எதிர்பாரக்கவில்லை.

அவனது காதலுக்கு சாவு மணி அந்தப் பொழுதில்தான் ஒலிக்க ஆரம்பித்தது. குழந்தை வேணாம் என்று லில்லி மொத்தமாய் மறுத்தாள் அதை அழிக்க திட்டங்கள் தீட்டினாள்.

ஏற்கனவே எலிசாவுடனான மணவாழ்வில் குழந்தையே இல்லாத ஜேம்ஸ் லில்லி வயிற்றில் வளர்ந்த அவன் குழந்தையை கைகளில் ஏந்த பேராவல் கொண்டான்.

லில்லி எவ்வளவோ முயன்றும் தோற்றாள். நாள் போக போக தன் அழகை பெரிதும் விரும்பும் லில்லியின் வயிற்றில் லீனியா நைக்ரா என்று சொல்லும் புழுப்போல் நீண்ட கோடுகளைக் கண்டதும் தன் அழகு கெட்டு விட்டதாய் கூச்சலிட்டாள்.

மார்புகள் பெருத்தது, மூக்கு வீக்கமானது, கழுத்தைச் சுற்றி கறுப்புப் படலங்கள் அவள் காதலே வேணாம் என்று வெறுக்க தொடங்கினாள். ஓர் கர்ப்பமுறுதல் எத்தனை மாற்றத்தை தரும் என்பதை கேவலமாய் உணர்ந்தாள். நாள் போக போக பெரும் சுமையாய் உணர்ந்தாள். இறுதியாய் பிரசவ நாளும் வந்தது.

திடீரென ஏற்பட்ட பிரசவ வலியில் பிறப்பு உறுப்பு வழியால் நீர் வடிந்தது. அவள் சிரமத்தின் உச்சத்தை எதிர் கொள்வதாய் உணர்ந்தாள்.

அன்றய நாளில் பிரசவ அறையில் வலியால் துடிக்க துடிக்க ஜேம்ஸ் மீதான வெறுப்பு தீப்பிழம்பாய் அவளுக்குள் பரவியது.

துளியும் மாறாத காதலோடு மாஸ்கோவின் இன்டரநெஷனல் மெடிகல் கிளஸ்டர் ஆஸ்பத்திரியின் பிரசவ அறையின் வெளியில் குளிரிலும் வியர்த்து நடுங்கிய வாறு தன் வாரிசை காண காத்திருந்தான் ஜேம்ஸ்.

குழந்தையின் அழு குரல் கேட்டது. ஜேம்ஸ் என்றுமில்லாத பெருமிதத்துடன் இன்னும் கம்பீரமாய் அங்கே தந்தை எனும் மகிழ்ச்சி பெரு வெள்ளத்தில் நீந்தினான்.

எப்படியும் லில்லியை இனி சமாதானம் செய்திடலாம் என்று எண்ணிக் கொண்டான்.

பாபிலோனின் வெள்ளை ரோஜா போன்ற குழந்தையை தொற்று நீக்கிய துணிக்குள் முகம் வெளியில் தெரிய அழகாய்ச் சுற்றி லில்லியின் மார்புக்கு அருகாமையில் கொண்டு சென்றதும் வீரிட்டு எழுந்து ஓட முயற்சித்தாள். இன்னும் போக போக அவள் Postpartum phyco (பிரசவத்திற்கு பிந்திய மனச் சோர்வு) என்ற நிலைக்கே போய் விட்டாள்.

ஜேம்ஸைக் காணக் காண அவள் மிகவும் ஆக்ரோசமானாள். மனோதத்துவ வைத்தியரின் வேண்டுதலுக்கு இணங்க லில்லி சிகிச்சைக்காக மனநல பிரிவுக்கு மாற்றப்பட்டாள். இப்போது குழந்தையை கைகளில் ஏந்தியபடி ஜேம்ஸ் செய்வதறியாது தனித்து நின்றிருந்தான்.

தந்தை ஜேம்ஸுக்கு மீண்டும் அடுத்த கடிதத்தை எழுத தொடங்குகிறாள் எல்மிரா.

என் அருமை அப்பா ...

அம்மா இறந்து மூன்று நாட்களாகிறது நான் தனிமையில் தான் இருக்கின்றேன் .

என் உணர்வுகள் என்னை என்னவோ செய்கிறது.

இன்று நான் அதிக வெறுமையை உணர்கிறேன் அப்பா. பசியையும் தவிப்பையும் தனியையும் உணர்கிறேன்..

அம்மா எலிசாவின் எழுத்துக்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் உங்கள் கட்டுப்பாடு காரணமாக எழுதுவதை மறைத்தே வைத்திருந்தார்.

இந்தத் தனிமையில், அரண்மனை போன்ற வீடு எனக்கு எதற்கும் பிரயோசனமில்லை. இன்று அம்மாவின் மறைக்கப்பட்ட எழுத்தக்களை வாசிக்க எண்ணி அந்த அறைக்குள் நுழைந்தேன்.

ஆங்கில நூல்களும், மொழிபெயர்ப்பு நாவல்களும், கவிதைகளும் அவராலயே எழுதப்பட்டு அங்கயே சமாதி ஆக தூங்க வைக்கப்பட்டுக் கிடந்தது. அவைகளைப் பார்த்த போது என் கண்களில் ஓடிய கண்ணீரால் அறை நிரம்பி விடுமோ என்று பயப்பட்டேன்.

இன்னோர் புத்தகத்தை எடுத்துப் புரட்டினேன். அது புத்தகம்ல்ல …அம்மாவின் பொட்டு பொட்டு எழுத்துக்களால் எழுதப்பட்ட டயரி…

படிக்கப் படிக்க என் இதயம் கழன்று ஒடிந்து துகள்களாகியது. ஒரு மகளாய் வாசிக்க கூடாத வரிகள் என் கண்களுக்குள் நிரம்பியது.

அப்பா …

உங்களுக்கு இது வரை தெரியாத ஒன்று நீங்கள் அம்மா எலிசாவுக்கு தெரியாமல் லில்லியோடு ஹனிமூனிற்காக போர்சீஸன் லக்சரி ஹோட்டல் போக செய்யத எல்லா ஏற்பாடுகளையும் மறைமுகமாக தடுக்கும் காரியங்களை அம்மா இரண்டு முறைகள் செய்திருக்கின்றார்.

ஆனாலும் மூன்றாவது முறை அது முடியாமல் போக பைத்தியமாய் அறைமுழுக்க கத்தி திரைச்சீலைகளை கிழித்து அழுது மயக்க முற்று கிடந்திருக்கின்றார். இரண்டு நாள் சென்று வந்து பார்த்த நீங்கள் உன்னை மன நல வைத்தியசாலைக்குத்தான் அனுப்ப வேண்டும் என்று திட்டி உங்கள் அதிவெறுப்பை காட்டியுள்ளீர்கள். பதினாறு வருடங்களுக்கு முன் நடந்ததை இன்றும் வாசிக்கையில் என் மனசு தாழவில்லை அப்பா…

டயரியை மூடி அங்கேயே வைத்துவிட்டு கனத்த நெஞ்சோடு அறையை விட்டு வெளியேறிவிட்டேன்.

இதை எழுதும் போது என் இதயம் ரத்தக்காயங்களுடன் தான் அப்பா இருக்கிறது.

கடிதத்தை முடித்து மடித்து கவரில் இட்டு கண்ணீரால் ஒட்டி வைக்கின்றாள்.

லில்லியின் வயிற்றில் பிறந்த தன்குழந்தையை ஆசிரமத்தில் சேர்த்த ஜேம்ஸ், பல வழிகளைச் செய்து அங்கு வேலை செய்யும் சிஸ்டர் மூலமாக தன் வீட்டுக்கே தன் குழந்தையை கொண்டு வந்து சேர்க்கும் முயற்சிகளைச் செய்த ஜேம்ஸ் அதில் வெற்றியும் கண்டான். இறுதியில் எலிசாவின் கைகளுக்கே குழந்தை வந்து சேர்ந்தது. அந்த குழந்தைதான் எல்மிரா.

எலிசாவின் மரணமும் மகள் எல்மிரா தனிமையில் வாடுவது பற்றிய எந்த உறுத்தலுமின்றி தலை முழுக்க சிந்தனையும், வலியும் லில்லி மீதான அதி காதலும் கொண்டிருந்த ஜேம்ஸ் மேலும் சிந்திக்கலானான். இனியும் வெறித்து வெறித்து அலைவதில் அர்த்தமில்லை என்று திடமான முடிவொன்றிற்கு வந்தான்.

வைத்தியர்கள் வரவேணாம் என்று தடுத்தாலும் 16 வருடத்திற்கு பிறகும் லில்லியை ஒரு தடவை யேனும் பார்த்திட வேண்டுமென்ற இறுதி முடிவை எடுத்தான் ஜேம்ஸ்.

இனியும் காலம் தாழ்த்தாது மகள் எல்மிராவுடனாவது சேர்ந்து வாழ வேண்டும். இப்படி ஜேம்ஸின் உள்மனம் சொல்லியிருக்கலாம். கூடவே எப்பாடு பட்டாவது லில்லியின் முகத்தை ஒரு தடவையேனும் பார்த்துவிட வேண்டும் என்றும் எண்ணினான்.

லில்லியைச் சேர்த்துவிட்ட மனநல காப்பகத்தை அடைந்து விடும் வரை மனது மிகவும் பாரமாகவே இருந்தது ரஷ்யாவில் வடக்கு தெற்காக அமைந்திருந்த நீண்ட மலைத்தொடரான யூரல் மலைத் தொடரின்

வழியே நீளமாய் சென்று கொண்டிருந்த பாபினோஸ் வீதியில் சென்று கொண்டிருந்தது ஜேம்ஸின் றோல்ஸ்ரொய்ஸ் கார்.

லில்லி பற்றிய நீண்ட நினைவுகளோடு ஊபா நகரில் அமைந்திருந்து காப்பகத்தை அடைந்ததும் மனம் படபடத்தது.

வெளியில் இருந்த காப்பாளானிடம் லில்லி என்ற பெயரைக் கொடுத்து விட்டு காத்திருந்தான். பதினாறு வருடங்கள் கடந்தும் அவனது உள்ளத்தில் லில்லியின் மீதான காதல் ஓர் உன்னத உயிர்ப்பாகவே இருந்து கொண்டிருந்தது. அவளோடு பழகிய காலமும் அவளுடன் முதன் முதலாய் இணைந்த போது மறக்க முடியாத அவளது உடலின் வாசமும் அந்த மலைப்பகுதி முழுக்க மணம் வீசுவதாய் உணர்ந்தான்.

வழக்கம் போல அவர் உங்களை பார்க்க விரும்பவில்லை என்றும் அவருக்கான உறவு என்று யாரும் பதியப்படவில்லை என்றும் அதனால் நீங்களும் பார்க்க முடியாது என்றும் பதில் வந்தது.

யூரல் மலையை கடந்து வந்த ஒரு பனிக் காற்று ஜேம்ஸின் கன்னங்களில் வழிந்த சுடுநீரை ஆற்றியது. நீண்ட நேரமாய் அந்த காப்பாகத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவன் ஒரு முடிவுக்கு வந்தவனாய் காரை எடுத்துக் கொண்டு பயணத்தை தொடர்ந்தான்.

அப்போது மெகடனில் எல்மிரா ஜேம்ஸிற்கான அடுத்த மடலை வரையத் தொடங்கினாள்.

என் அருமை அப்பா..

என்றாவது நீங்கள் என்னுடன் வருவீர்கள் என்று நம்புகின்றேன். இந்த உலகத்தில் அத்தனையையும் நீங்கள் எனக்காக உயர்வாகவே பண்ணியுள்ளீர்கள்.

அப்படியான நீங்கள் என்னை ஒரு போதும் அநாதையாக விட மாட்டீர்கள்.

என்னை உண்மையில் பெற்ற தாயான உங்கள் காதலி லில்லியை பார்க்க நிச்சயம் நீங்கள் போய் இன்னுமின்னும் ஏமாந்து ஒரு நாள் வருவீர்கள்.

உங்களால் அம்மா லில்லியை பார்க்கவே முடியாது.

அப்பா உங்களுக்கு தெரியாத விடயம் ஒன்றை என் ஆத்ம தோழி அவள் தாய் மூலமாக அறிந்து எனக்கு சொல்லி இருந்தாள். கூறுகிறேன் கேளுங்கள்...

என் ஆத்மார்த்தமான தந்தையே அம்மா மன நல காப்பகத்தில் தங்கியிருந்த காலத்திலேயே அதிதீவிர தொற்றுக்குள்ளாகினாராம். பரியணவெட்டுப் போட்டிருந்த இடத்தில் ஏற்பட்ட தொற்றும் மற்றும் குத வாயிலுக்கும் பரியண வெட்டிற்கும் இடையில் ஏற்பட்ட கிழிவும் சரியான பராமரிப்பு இன்மையால் அதிதீவிர தொற்றுக்குள்ளாகி, பால் கொடுக்காததால் மார்பில் சுரந்த பால் தேங்கி கட்டியாகி மார்பு பழுத்து, வீங்கி சீழ் நிலை உருவாகி வலியால் துடித்தாராம். அதி காய்ச்சலுக்குள்ளாகி பதின் மூன்றாவது நாளே உங்கள் அருமைக்காதலியும் என்னை பெற்ற தாயுமான லில்லி இறந்து போய் விட்டாராம்.

இதை அறிந்து நீங்கள் ஏதேனும் பிரச்சினை ஏற்படுத்தலாம் என்று அந்த நிர்வாகம் மூடி மறைத்து விட்டது. இவையல்லாம் அறிந்து தாய் எலிசாவுக்கு தெரியாமல் உங்களுக்கும் தெரியாமல் நானும் தனிமையில் ஏங்கி அழுதேன் அப்பா...

இந்த கடிதம் உங்களிடம் கிடைக்காதவரை உங்களிடம் உங்கள் லில்லி இன்னும் உயிருடன் தான் இருப்பார்...

தொடர்ந்தும் எழுத முடியாமல் மடலை மூடி அழுகிறாள் எல்மிரா.

தந்தை தன்னைத் தேடி வருவதற்கான ஏதோ ஒரு உணர்வு அவளுக்குள் உண்டானது. அப்போது அவளது இரண்டாவது மாடியையும் தாண்டி தந்தையின் வாகனத்தின் சத்தம் அவளை துள்ளி எழ வைத்தது. கயிறு அறுந்து காற்றின் திசையில் அடிபட்டுப் பறந்த பட்டத்தின் கயிற்யை ஒரு நீண்ட கை வந்து பற்றிக் கொண்டதாய் உணர்தாள் எல்மிரா.

மறுநாள் நாள்...

தனது மாடிவீட்டின் முன்னால் இருந்த அழகிய தோட்டத்தில் போடப்பட்டிருந்த மரத்தினால் செய்யப்பட்ட சாய்வு நாற்காலியில் தந்தை ஜேம்ஸின் அருகிலேயே தோழில் சாய்ந்து கிடந்தாள் எல்மிரா. துடாகத்தில் சின்ன மீன்கள் பெரிய மீனகளுக்கு மேலாக துள்ளி விளையடுவதை இருவரும் ரசித்திருந்தனர். அருகிலே இருந்த காய்ந்த மரத்தை சுற்றியிருந்த கிளிடோரியா மரியான கொடி முழுவதும் சங்குப்பூக்களை பூத்துக் குலுங்கியது.

“அப்பா நல்ல பால் தேநீர் ஒன்று தயாரித்து தரட்டுமா இந்த குளிருக்கு உடம்புக்கு இதமாக இருக்கும்” என்றாள் எல்மிரா.

ஜேம்ஸ் மெல்ல தலையை அசைக்க தோள்களில் சாய்ந்திருந்த எல்மிரா அதை உணர்ந்து கொண்டு எழுந்து கிச்சன் நோக்கிப் போனாள்.

உன் தந்தையினது என்று அம்மா எலிசா பத்திரப்படுத்திக் காட்டிய கப் அன் சோஸரில் மிக அன்பைக் கலந்து ருசிப்படுத்தி ஊற்றிய பால் தேநீருடன் வந்தாள் எல்மிரா.

புன்னகையோடு நன்றி சொல்லி அதை வாங்கிக் கொண்ட ஜேம்ஸ் ஒரு மிடர் அருந்தியவுடன் கண்களில் இருந்து நீர் வடிந்து குவளையில் விளுந்தது.

“அப்பா...” எல்மிரா பதைபதைத்தாள்

“என்னாச்சுப்பா?”

“எல்மிரா... என் மனைவி எலிசாவை விட யாராலும் சிறப்பான ஒரு பால் தேநீரை தயாரிக்க முடியாது... என்பதை புரிந்து கொண்டேன் மகளே”... குரல் தழுதழுக்க சொன்னான் ஜேம்ஸ்

எல்மிரா என்ன சொல்வதென்று தெரியாமல் புன்னகைத்தாள்.

அன்றைய இரவு தூங்கச் செல்வதற்கு முன் தாய் எலிசாவிற்கொரு மடல் வரையத் தொடங்கினாள்...

அன்புள்ள அம்மா எலிசா,

இன்றைய நாள் உங்களுடைய நாளம்மா. உங்களுடைய வாக்கு உண்மைப் பட்ட ஒரு நாளம்மா. உங்கள் கணவர் உங்களின் கைகளால் தயாரித்த தேனீரை தேடிய நாளம்மா...

என்று ஆரம்பித்த மடல், நீண்ட இரவில் மூன்றாம் சாமத்தைக் கடந்தும் தொடர்ந்து கொண்டிருந்தது.

(முற்றும்)

## லேனா தமிழ் வாணனின் ஒரு கருத்து

ஒரு நாள் பயிற்சி செய்தால் சைக்கிள் பழகிடலாம்...

ஓராண்டு ஒரு துறையில் நிலைத்திருந்தால் அத்துறையில் வல்லுனராகலாம்...

ஆனால் எவ்வளவு ஆண்டுகள் கடந்தாலும் ஒருவனுக்கு எழுத்தாற்றல் வந்துவிடும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

எழுத்தாளரை கௌரவிப்பது என்பது, சமுதாய அக்கறையாளரை கௌரவிப்பதாகும்.

# உயிர் தொடும் வார்த்தை



பானு ஜிஃப்ரி – சாய்ந்தமருது

உதட்டில் உப்பானது
உள்ளத்தில் தித்திப்பானது
உனக்கும் எனக்கும் உவப்பானது.

உண்மைக்கும் பொய்மைக்கும் வாதாடுது
உற்றார் சுற்றாரைப் பாராதது
உற்று நோக்கினால் உலகவழக்கானது.

உரசிப் பார்த்தால் தீயாகுது
உக்காந்து யோசிதால் நெஞ்சுள் குளிராகுது

உயிருக்கும் உடலுக்கும் உறவானது
உறக்கத்தை தொலைக்கும் இரவானது

உயிரினை கண்தொடா நூலிலே தொடுக்கும்
அந்த வார்த்தையை
நீயும் உணர்ந்தாயா அன்பே...?

# நான் நானாகவே இருந்துகொள்கிறேன்...

முப்லிஹா பிர்தவ்ஸ் – காத்தான்குடி



தள்ளி நின்று பார்க்கும்
எல்லோருக்கும் துளிர் விடாத பட்டமரம் நான்
என்மேல் ஏன் அப்படி தனிப்பட்ட அக்கறை
என்மேல் கொண்ட பொறாமை தான் அது வென்று
நான் நினைக்கிறேன்

காலை தொடங்கியது முதல்
இரவு முடியும் வரை
அழுத்திப் பிடிக்கின்ற மன உளைச்சல்கள்
னக்கு இல்லை

சமையலில் பல்ரகம்
ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு பாடசாலை
தொந்தரவான வழிபாட்டு நேரங்கள்
பிள்ளையின் பதினெட்டு மணி நேர மேலதிக
வகுப்பு
முன் பள்ளி வகுப்புக்கு கொன்சட்
பத்தாம் வயதில் புலமை பரீட்சை
பத்தாயிரம் பெற்றோர் கூட்டம்
பல்கலைக்கழக படிப்பு
மணமக்கள் தெரிவு
அப்பப்பா!
எத்தனை வகையான இன்னல்கள் உங்களுக்கு
வயோதிபம் ஆன பின்னர்
பிள்ளை கவனிப்பான் என்பது என்ன உத்தரவாதம்

பிள்ளைகள் இருந்தும்
வீதியில் விடப்பட்ட
பெற்றோர் எத்தனை

பிள்ளைகள் இருந்தும்
இடை நடுவில் மரணித்த
பெற்றோர்தான் எத்தனை

பசிக்கு ஒருவாய் சோறு
படுக்க ஒரு துண்டு பாய்
ஒதுங்கிக் கொள்ள ஒரு சிறு வீடு
சுமந்து செல்ல நாலு சகோதரர்
இது போதும் என் வாழ்க்கைக்கு

இவ்வளவு மகிழ்ச்சியும்
எனக்கு இருக்கையில்
இந்தப் பட்ட மரத்தின் மேல்
உமக்கு என்ன அக்கறை
கவலைப்படாதீர்
நான் பட்ட மரமாக
பலவித சந்தோஷத்துடன்
இருக்கிறேன்
நான் துளிர் விட விரும்பவில்லை...

# மர்ஹூம் கலாபூஷணம் சொல்லன்பன் நஸிறுத்தீன்









**இயற்பெயர் :**

சீனி முகம்மது முகம்மது நஸீறுத்தீன்

**இலக்கியத் துறை அறியப்பட்டது:**

சொல்லன்பன் நஸீறுத்தீன்

**துணைவி :** அகமட் லெவ்வை பௌசியா

**வாரிசுகள் :** ரஷீயா, ரஷான், நுவைறா, அக்கீல்

**பிறந்த மண் :** ஒலுவில்

**பிறந்த ஆண்டு :** 17.05.1956

**பிரிந்த ஆண்டு :** 16.09.2022

**உலக வாழ்கை :** 66 வருடம்

**இலக்கியத்துறையில் :** 25 வருடம்

**சாதனைப் படைப்புகள் :**

“கிண்ணஞ் சொட்டு” (சிறு கதைத் தொகுதி)

“புலால்வாசம்” – கிழக்கு மாகா இலக்கியப் போட்டி பரிசு பெற்ற நாவல்

**இலக்கி துறை இயக்கம் :**

“மின்னல் வெளியீட்டக உதவி தலைவர்”

“கீறல் சஞ்சிகை உதவி ஆசிரியர்”

**உயர் விருது :** கலாபூஷணம் விருது 2021

**பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் :**

சுவதம் விருது, சிறுகதை, கவிதை, பாடலாக்கப் போட்டிகளில் மற்றும் தனிப்பட்ட அமைப்புகளினால் கிடைக்கப்பெற்ற பாராட்டுகளும் கௌரவங்களும் விருதுகளும்.

**கால் பதித்த துறைகள் :** கவிதை, கட்டுரை, கிராமியக் கவி, சிறுகதை, நாவல், பாடலாக்கம், கிராமியக் கவி பாடுதல், குறும்பட நடிப்பு.

**நடித்துள்ள குறும்படங்கள் :** குற்றம், கண்ணாடி, பொற்காசு, உடைந்த கனவுகள், ஈரப்புன்னகை




### இவரின் வாழ்வியல் எட்டு

01. முதல் எட்டு பாடசாலையோடு
02. இரண்டாம் எட்டு கடற்கரையோடு
03. மூன்றாம் எட்டு விவாசாயத்தோடு
04. நான்காம் எட்டு திருமணவாழ்வோடு
05. ஐந்தாம் எட்டு வியாபாரத்தோடு
06. ஆறாம் எட்டு வெளிநாட்டு வாழ்வோடு
07. ஏழாம் எட்டு இலக்கியத்தோடு
08. எட்டாம் எட்டு ஆன்மீகத்தோடு

# தலையணை

**றிஸ்லா ஹம்ஸா**
**மன்னார்**



பெண்களுடனான இராப் பொழுகளை
பல மொழிகளால் கடக்கிறேன்.

சில பொழுதுகளில் மௌனமாயும்
இன்னும் சில பொழுகளை
அதீத விழிநீர்ப் பெருக்கோடும்

இத்தனையையும் பார்க்கும் போது
எனக்கே அத்தனை வேதனையளிக்கும்.
பாவம் பெண்களுக்குத்தான்
எந்தக் கொடுப்பினையும் இல்லாமலாகிற்று

ஆனாலும் நான் கொஞ்சம்
வரம் பெற்றவன் தான்
பெண்களின் அத்தனை ரணங்களையும்
நான் மட்டுமே மடியேந்திக் கொள்கிறேன்.

நடுநிசிப் பொழுதுகளில்.
பெண்களின் அத்தனை பிரயத்தனங்களும்
யாருக்காக இருந்ததோ
அவர்களுக்கு தான் சற்றும்
சிறு நொடி நேரம் கூட கிடைப்பதில்லை
பெண்களின் இன்பதுன்பங்களில் பங்கெடுக்க.

பாவம் பெண்கள் தான் பெரும் பைத்தியகாரிகள்
இன்னும் அந்த பைத்தியக்கார அன்பிலிருந்து
தெளியாமல் அவர்களுக்கான பிரயத்தனத்திலே
நின்றுகொண்டிருக்கிறார்கள்.

ஆனாலும் நான் சற்று வரம்
பெற்றவன் தான்.
அவர்களின் கண்ணீர் தடங்களால்
புனைந்த காவியத்திற்கு
துணைகோலாக இருக்கிறேன்.
அவர்களின் நீண்ட இராப் பொழுதுகளின்
அவர்களுக்காய் புரியாத
மர்மமாய்,

உயிரற்ற நான்
புத்துயிர் பெற்றேன் பெண்களின்
விழிநீர் ஊற்றுக்களால்
அவர்களுக்காகவே...
ஒரு
தலையணை என்ற பெயரோடு

# விசித்திர மனிதர்

சித்திரம் போல வாழ்க்கை
சரித்திர சத்திரங்கள்
சரிந்திடும் ஏடுகள்
சிந்திக்காத சிரிப்பு உலகமிது

பால்வேறுபாட்டை
பாலுக்குள் தேடுகிறார்கள்
நிறங்களை நிறுத்துப் பார்க்கும்
நிறக்குருடர்கள் இங்கே

நூல் பிடித்து பட்டம் விடுபவன்
நூல் படிக்காமலே
நூதன பட்டம் பெறும்
பூதல மனிதர் வாழும் பூமியிது

பஞ்சமா பாதகங்கள்
பஞ்சமின்றி புறழுகின்ற
பெருச்சாளிகள் வாழுகின்ற பூமி இது

விசித்திர மனிதர் சூழ் விந்தை உலகம் இது

**கலாபூஷணம் இஸ்லாமியச் செல்வி**
**அரபா மன்சூர்**

# வாசிப்பால் சுவாசிப்போம்

புத்தக வாசலைப் புத்தியாய்த் திறந்திடு
புத்தகசாலையின் பக்தனாய்ச் சிறந்திடு

வாசிப்பு உன்னைப் பூரணம் ஆக்கும்
நேசிக்கும் புத்தகம் தோழனும் ஆகும்

நூலகம் என்பதுவோ ஒரு பூங்காவனம்
நூல்களும் அங்கே பூக்களும் ஆகும்

பூக்களின் வாசம் சுகந்தம் தரும்
பூங்காவனத்தில் சுவாசம் என்றும் நலம்

வண்டுகளாய் நீ மலர்களை நாடிடு
செண்டுகளின் அருகே குடி இருந்திடு



வாசிப்பின் இனிமைத் தேனைப் புசித்திடு
ருசித்து நிதமும் இதமாய் இரசித்திடு

செல்லும் வழியெங்கும் வாசம் பகர்ந்திடு
நல்லதோர் உலகுன் வசமே நிமிர்ந்திடு

**பஸ்லா பர்ஸான் – காத்தான்குடி**

# விழித்துக் கொள்...



சுயநலப் பிசாசுகள் சுற்றி நின்று
கும்மாளம் அடிக்க
குற்றம் பிடிக்கும் கயவர்கள்
குறைகள் தேடி உன்னை குறைத்து எடைபோட
உன் நிறைகளைத் திருடக் காத்திருக்கும் உலகிது!
கவனம்!

தலையைத் தடவுவது போல் தடவி
உன் கண்களைப் பிடுங்கி
சித்திரவதை செய்யத் துடிக்கும் சீர்கெட்டவர்
நிறைந்த உலகிது!
கவனம்..!

உன்னை வாழ்த்துவது போல்
வாழ்த்தி உன் பின்னால் உன்னை
வீழ்த்தி விட திட்டம் தீட்டும்
குரோதம் நிறைந்தவர்களின் உலகிது!
கவனம்..!

பெண்ணாய் நீயும் பிறந்ததற்கு
முலைதனை பரிசளித்து முக்காடிட்டு
உன்னை முடக்கி விடும்
படிப்பறிவற்ற மிருகங்கள் நிறைந்த உலகிது!
கவனம்... !



– பாத்திமா ஹகீமா அமீனுதீன் –

காதல் எனும் வலை வீசி உன் கற்பை களவாடி
கலைத்தெறிய துடித்திருக்கும்
காமுகர்கள் நிறைந்த உலகிது!
கவனம்..!

உன் இறுகும் ஆடையில் இடை கண்டு
மனம் மகிழ தவமாய் காத்திருக்கும்
காமப் பிசாசுகள சூழ் உலகிது!
கவனம்...!

விழித்துக் கொள்...
உன்னை உணர்வுகளற்ற
சதைப்பிண்டமாய் எண்ணி
சிதைக்க நினைக்கும் வித்தைக் காரர்களில்
மாயவலைகளில் வீழும் முன் விழித்தெழு
உன் உரிமை உன் வசம்!
தலை நிமிர்ந்து நில்
நாளை உலகம் உன் நாமம் பேசும்



# பெண்கள் பற்றி ஓர் அழகிய அறிவுரை

அஹ்மத் பின் ஹம்பல் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அவர்களின் மகனாருக்கு அவரின் திருமணத்தின் போது....

மகனே ஒரு பெண்ணை நீ திருமணம் செய்ய போகிறாய்...அந்த பெண்ணிடம் பத்து விஷயங்களை நடைமுறை செய்தால் தான் நீ மகிழ்ச்சியாக வாழலாம் அவளுடைய வாழ்க்கையை சரியாக்கலாம்...

1. முதலாவதாக மகனே **பெண்கள் அன்பை விரும்பக் கூடியவர்கள்.. எனவே உன் அன்பை நீ அவளுக்கு வெளிபடுத்த வேண்டும்..**

2. இரண்டாவதாக **அன்பை வெளிப்படுத்துவதில் ஒருநாளும் நீ கஞ்சனாக ஆக கூடாது...**

3. மூன்றாவதாக சொன்னார்கள்..
**பெண்கள் கடினமான ஆணை வெறுப்பார்கள்.. பலகீனமான மிருதுவான ஆண்களுக்கு பணிவிடை செய்வார்கள்..**

ஆகவே அவளுடைய அன்பை நீ அடைய வேண்டுமெனில் அவளோடு மிருதுவாக நடந்துகொள்....

4. நான்காவதாக சொன்னார்கள்..
**பெண்கள் கணவனிடம் நல்ல பேச்சையும் அழகான தோற்றத்தையும், உடல் ஆடை பரிசுத்ததையும், எதிர்பார்ப்பாள்..**

எனவே உன் உடலையும் பேச்சையும் தோற்றத்தையும் அழகாக்கி கொள் என்றார்கள்..

5. ஐந்தாவதாக சொன்னார்கள்..
**உன் வீட்டில் உனது மனைவி அரசியாக ஆள்வதற்கு பார்ப்பாள்..அவளை அரசியாக ஆள்வதற்கே விட்டுவிடு நீ சந்தோஷமாக வாழ்வாய் என்றார்கள்..**

6. ஆறாவதாக சொன்னார்கள்..
**பெண்கள் கணவரின் உழைப்பை விரும்புவார்கள்.. எனவே நீ சம்பாதித்து கொடுத்து அவளை நல்ல முறையில் வாழவைக்க வேண்டும்..அதே சமயம் உன் குடும்பத்தையும் கவனிக்க வேண்டும் அவளையும் நல்ல முறையில் வாழவைக்க வேண்டும்..**

7. ஏழாவதாக சொன்னார்கள்..
**பெண்கள் வளைவிலிருந்து படைக்கப்பட்டவள்.. அதுதான் அவளின் அழகின் இரகசியம்..**

வளைந்தவள் என்பதற்காக அவசரப்பட்டு அவளை நேராக்கமுயற்சிக்காதே... அவளோடு நீயும் வளைந்து நடந்து சரியாக்கிவிடு என்றார்கள்..

8. அடுத்ததாக சொன்னார்கள்..
**பெண் என்பவள் நீ வாழ்க்கையெல்லாம் நலவுகள் செய்தாலும் உன்னிடம் ஒரு நலவையும் காணவில்லை என சொல்லி விடுவாள்.. அதற்காக நீ அவளை வெறுத்து விடாதே..!!**

9. சொன்னார்கள் அடுத்ததாக..
**பெண் உடலாலும் சிந்தனையாலும் பலகீனமானவள்,அல்லாஹ்வே அவளின் மீதுள்ள பர்ளுகளை இல்லாமல் ஆக்கியுள்ளான்...**

அவளுடைய தொழுகை நோன்பை கூட விட வைத்திருக்கிறான்.. அல்லாஹ் அந்த பெண்ணுக்கு பர்ளை லேசாக்கியது போன்று நீயும் அவளுக்கு அந்த காலகட்டத்தில் உன் தேவைகளையும்.. அவளுக்கு கட்டளைகளையும் லேசாக்கி கொள்...!!!

10. கடைசியாக சொன்னார்கள் ..
**பெண் என்பவள் உன் சிறை கைதி.. சிறைகைதியாக வந்தவளின் மீது இரக்கமாக நடந்திடு. அல்லாஹ் உன்மீது இரக்கம் காட்டுவான்”** என்று

# கீறல் சஞ்சிகை இதழ் 7, 8 வெளியீட்டு விழா

## 2020-06-21



கீறல் இதழ் 01 தொடக்கம் 09 வரை




விலை:ரூபா 350/-

ISSN NO:9 773030 717002